Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 20.

எல்லாவித மின்சார வேலைகளுக்கும்
எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

**சிலோன் எலக்ரிக்கல்ஸ்**

180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு

சுதந்திர வார இதழ்

மலர் 1. யாழ்ப்பாணம், விகாரி, சித்திரை 26-ஆம் நாள். (9-5-59) சனிக்கிழமை இதழ் 14.

# மனித உரிமையா? பெரும்பான்மையினர்-உரிமையா?

## 'அப்பே ஆண்டுவா' மாறி பொதுமக்கள் 'ஆண்டுவா' ஏற்படுமா?

### தலைவரும், பிரதமரும் சிறுபான்மை சமூகத்தவரே!

— நமது அரசியல் நிருபர் —

**கண்டியிலே மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது குறித்து ஐ. நாடுகள் மகாநாடு நடைபெறுகிறது. ஆனால், பிரதமர் பண்டார நாயக்காவோ "பெரும்பான்மையோரின் உரிமை அளிக்கப்பட வேண்டும்" என்று பொதுக் கூட்டங்களில் பேசுகின்றார்!**

"இலங்கையிலே பல மொழிகள் பேசுபவர்களும், பல சமயங்களைச் சேர்ந்தவர்களும் வாழுகின்றார்கள். இப்படிப்பல் வேறு மக்கள் உள்ள நாட்டில், சேர்ந்து வாழும் கொள்கை எப்படி இருக்க வேண்டுமெனில், பெரும்பான்மையோரின் உரிமைகள் அளிக்கப்படவேண்டும். பெரும்பான்மையினர் சிறுபான்மையோர்பால் தங்களுக்குள்ள கடமைகளை உணர்ந்து அதை அங்கீகரிக்க வேண்டும்! என்று மாதம்பை மத்திய கல்லூரியிலே நடைபெற்ற கலைக் காட்சியில் பேசுகையில் குறிப்பிட்டதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

### யார் அளிப்பது?

இதன் கருத்து என்ன? பெரும்பான்மையோரின் உரிமைகளை யார் அளிப்பது? ஆட்சி அதிகாரம் அவர்கள் கையிலே இருப்பதால் அவர்களே தங்களுக்கான உரிமைகளை அளித்துக்கொள்ளவேண்டும் போலும்! பின் சிறுபான்மையோருக்கு ஏதாவது உரிமைகள் உண்டா? என்பதுபற்றிப் பிரதமர்ஒன்றும்கூறவில்லை. சிறுபான்மையோர்பால் பெரும்பான்மையோர் தங்கள் கடமைகளை அங்கீகரிக்கவேண்டுமாம். அப்படிக் கடமைகளை உணர்ந்து நடக்காவிடில், சிறுபான்மையோர் கதி என்ன? அவர்கள் பெரும்பான்மையோரின் தயவில்தான், என்றென்றும் வாழவேண்டுமா? அவர்களுக்குப் பிறப்புரிமை ஒன்றுமே கிடையாதா? அரசியல் ரீதியாக அவற்றைப் பாதுகாக்க வேண்டாமா? என்ற பல முக்கிய கேள்விகளும் எழுகின்றன.

### பிரதமர் பேச்சு

பிரதமர் பண்டார நாயக்கா பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தவராக இருந்த அவர் டொனமூர் அர

(9ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள 'ஸ்ரீ' பஸ்
### யாழ்ப்பாணம் வந்து சென்றது

சிங்கள 'ஸ்ரீ' பஸ் எதிர்ப்பு வடபகுதியிலும் கிழக்கு மாகாணத்திலும் சென்ற வருடத்திலிருந்தே இருந்துவருகின்றது. மே, ஜூன் மாத வகுப்புக் கலவரத்துக்கும் 'சிங்கள ஸ்ரீ' எதிர்ப்பே வித்திட்டதெனக் கூறலாம்.

இங்கிலையில் சென்ற செவ்வாய்க்கிழமை அனுராதபுரத்துக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே ஆரம்பமான 'எக்ஸ்பிரஸ்' பஸ் சேவைக்குரிய சிங்கள 'ஸ்ரீ' பஸ் ஒன்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. அசம்பாவிதம் ஏதும் நடக்கக்கூடுமென்பதற்காக பொலிஸாரும் யாழ்ப்பாண பஸ் நிலையத்திற் காணப்பட்டனர். இதே பஸ் அன்று மத்தியானமும் அடுத்த நாளும் பயணத்திலிருந்து பிரயாணிகளைச் சுமந்துகொண்டு அனுராதபுரம் சென்றது. சென்ற வியாழக்கிழமை மத்தியானம் அனுராதபுரத்திலிருந்து வந்த பஸ் சிங்கள 'ஸ்ரீ' இன்றி 'IC' பொறித்த இலக்கத்துடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது.

## கொழும்பில் குதூகலமான மே தின விழா
## இலங்கைக்கு ஸ்விஸ் அரசியலமைப்பு

— நமது கொழும்பு நிருபர் —

கொழும்பில் மேதினவிழா இம்முறை மிக குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. ஊரெல்லாம் சிவப்புக் கொடிகள் பறந்தன. பல போட்டி யூனியன்களின் ஊர்வலங்கள் தெருத் தெருவாகச் சென்றன. எங்கும்பலத்த பொலீஸ்காவல். அசம்பாவிதங்கள் எதுவுமில்லாமல் எல்லாம் அமைதியாக முடிந்தன.

"உலகத் தொழிலாளரே ஒன்றுபடுங்கள்" என்ற கோஷமே முன்பெல்லாம் மேதினத்தில் எழும். ஆனால் இம்முறை அந்த கோஷத்துக்கு பதில், "கொயிதேயன்னே" (எங்கே போகிறாய்?) "கால்பேஸ் யனவா" (கால்பேஸ் போகிறேன்) என்றும், ஒரு ஊர்வலம் கோஷித்தது. கால்பேஸ் திடலில் கம்யூனிஸ்ட் கூட்டம். சமசமாஜிகளின் கூட்டம் நகர மண்டபத்துக்குப் பக்கத்தில். அவர்கள் "டவுன்ஹால் யனவா" என்று கோஷித்துச் சென்றனர். சுதந்திரச் சதுக்கத்தில் எம். ஈ. பி. தொழிற் சங்கக்கூட்டம். வாழைத்தோட்டத்தில் வர்த்தக சிப்பந்திகள் கூட்டம். இப்படி நான்கு இடங்களில் நான்கு பொதுக் கூட்டங்கள்.

இதில் நகரமண்டப மைதானத்தில் கூடிய சமசமாஜிகளின் கூட்டமே பெரிதென்று சொல்லப்படுகிறது. பல கூட்டங்களிலும்,போட்டிச் சங்கங்கள்மீதும் தலைவர்கள்மீதும் பரஸ்பரம் வசை பரிமாறிக் கொள்ளப்பட்டது. உலகத்தொழிலாளரெல்லாம் ஒன்றுபடவேண்டிய தினமாக இருக்க, கொழும்பிலுள்ள தொழிலாளர் கூட ஒன்றுபட முடியாமல், பரஸ்பரம் திட்டிக்கொண்டனர். என்றாலும் அடிதடிகள் ஒன்றும் ஏற்படாமல் எல்லாம் அமைதியாக முடிந்தது பெரியகாரியம்.

### அரசியல் அமைப்பு

இலங்கைக்குக் குடி அரசு அரசியல் திட்டத்தை அமைப்பதைக் குறித்து, கூட்டு பார்லிமென்ட் குழு சில முக்கிய யோசனைகளைப்பற்றிப் பரிசீலனை செய்து வருகின்றது.

பழைய நிரந்தரக் குழு யோசனைக்கு ஆதரவு இல்லை. 'காபினெட்' மந்திரிசபை முறை சர்வாதிகார ஆட்சியில் முடியுமென்றும், வேறு முறைகளை வகுக்கவேண்டுமென்றும் பிரதமர் கருதி, தமது கட்சி அங்கத்தவர்களுடன் சில முக்கிய யோசனைகளைப்பற்றிக் கலந்து பேசினர். அரசாங்கக் கட்சிக்குள்ளேயே பலத்த கருத்து வேற்றுமையுள்ளது.

ஸ்விட்ஸர்லந்து அரசியலைக் கூடுமான அளவு பின்பற்ற வேண்டுமென்றும், பிரதேச

(9ஆம் பக்கம் பார்க்க)

## கோலாகலமான கொண்டாட்டம்
## செங்கொடிகளுடன் ஊர்வலம்

மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகரம் ஒரு போதும் கண்டிராத அளவு சிறப்பாக மேதின விழாக்கள் இம்முறை நடந்தன. இதில் குறிப்பிடத்தக்க ஒரு விசேடம் சமயக்கட்டுக் கோப்புள் மட்டும் கிடந்து வந்த கத்தோலிக்க சமய குரவர்களும், இப் பொருளாதார விழிப்பு விழாவில் கலந்துகொண்டதுதான். இளம் கிறிஸ்தவ தொழிலாளர் சார்பில் பெரிய ஊர்வலம் ஒன்றும் நடைபெற்றது. செங்கொடிகளைத் தாங்கிய வண்ணம் கிறிஸ்தவ இளைஞர்களும், வளர்ந்த ஆண்களும், பெண்களுமாகப் பலர் புளியந்தீவு 'பஸ்' நிலையத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த பாட்டாளிபுரத்தில் மே 1-ம் திகதி மாலை வந்து ஒன்று கூடினர். இந்த ஊர்வலத்துக்கு திருக்கோணமலை பிஷப் பாண்டவரான இக்னேஷியஸ் கிளனி அவர்கள் தலைமை வகித்தார்கள். பின்னர் நடந்த கூட்டத்துக்குத் தலைமை வகித்த யோசேப் இம்மானுவேல் அவர்கள் தொழிலாளர் தினமானது தனிப்பட்ட ஒரு அரசியற் கட்சிக்குச் சொந்தமானதன்று என்று குறிப்பிட்டார்.

### கொம்யூனிஸட் கட்சியும்—தமிழரசும்

பாட்டாளிபுரத்தில் கிறிஸ்தவ இளைஞர் விழா நடத்திக்கொண்டிருக்கையில், மட்டக்களப்பு மைதானத்தில் கொம்யூனிஸ்ட் கட்சிக்காரரது மே தின விழா நடந்துகொண்டிருந்தது. இக்கூட்டத்துக்கென யாழ்ப்பாணத்திலிருந்து இந்துக்கல்லூரி ஆசிரியரான திரு. கார்த்திகேசன், திரு ரத்னவீர ஆகியோரும் வந்திருந்தனர். இலங்கையிலே தமிழ் பேசும் மக்கள் சிறுபான்மையினராக இருந்தலினாலே, அவர்கள் தமது உரிமைகளைப் பெறுதற்குப் பெரும்பான்மையினரான சிங்களவருடன் ஒத்துழைத்தேயாக வேண்டும் என்று திரு கார்த்திகேசன் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு. சித்திவிநாயகத்தின் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் திரு எஸ். பொன்னுத்துரை, திரு கே. ஓ. வி. கதிர்காமத்தம்பி, கே. வி. கிருஷ்ணக்குட்டி முதலிய பலர் பேசினர்கள். பொதுவாக எல்லாரும் தமிழரசுக் கட்சியைக் கண்டித்தனர்.

(15ஆம் பக்கம் பார்க்க)

பிரிட்ஜ்ஸ்டோன் டையர்கள் — BRIDGESTONE TYRES

ஏக விநியோகஸ்தர்கள் :

ஓட்டோஸ் லிமிடெட்

யாழ்ப்பாணம்

போன் : 496

தந்தி : "ஓட்டோஸ்"

## வரி விளம்பரம்

சிறந்த முறையில் "ரைப்பிறைற்றிங்" சொல்லிக்கொடுக்கப்படும். ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

சுருக்கெழுத்தில் பட்டம் பெறுவதற்கு ஜோஸ்அன்ரூவை ஆலோசியுங்கள்—4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

உத்தரவாதத்துடனும், குறைந்த செலவிலும் சுருக்கெழுத்துப் படிப்பதற்கு, ஜோஸ் அன்ரூ, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்

சிறந்த போட்டோக்களுக்கு பாரத் ஸ்ரூடியோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**விற்பனைக்கு**

உங்கள் வீட்டுக்குத் தேவையான எல்லாவித பொருள்களுக்கும் 286க்கு போன் செய்யுங்கள்.

உங்கள் வீட்டுக்குப் பொருள்கள் வினியோகம் செய்யப்பட வேண்டுமானல் "விநோதன்ஸ்" யாழ்ப்பாணம்.

தரத்தில் சிறந்தது—வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

உடைகள் வெண்மையாக வேண்டுமானல் வீனஸ் சோப்—கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

## அச்சுத் தொழிலாளர் சங்கப் பொதுக் கூட்டம்

தொழிலாளர் தினமாகிய மேதினத்தன்று யாழ்ப்பாண அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் பொதுக் கூட்டமொன்று யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியிலுள்ள "கனகபவன"த்தில் சங்கத் தலைவர் திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தொழிலாளிகள் பலர் பங்குபற்றினர். இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கத்தின் காரியதரிசி திரு. அரிநோலிஸ் அப்புகாமி "அச்சுத் தொழிலாளரின் இன்றைய நிலை" என்னும் பொருள் பற்றி விரிவுரை ஆற்றினர்.

**ஆசிரியருக்குக் கடிதங்கள்**

## நெசவுத் தொழிலாளர் குறைபாடு

இன்று நம்நாட்டில் வளர்ந்து வரும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டுஉழைத்து வரும் வறுமைமிக்க தொழிலாளர்களின் குறைகளைத்தீரவிசாரித்துஏற்ற ஒழுங்குகள் செய்யக் குடிசைக் கைத்தொழிற்பகுதி முன் வர வேண்டியது அவசியமாகும். இத்தொழிலாளர்களின் குறைகளிற் சில வருமாறு.

நிலையங்களில் இருந்துபெறும் சாரங்களை ஒன்பது ரூபாய்க்குப் பெற்றுத் திடீரென ரூ. 7-35 சதமாகக் குறைத்தது, ஏனைய தொழிலாளர்களையும், குறிப்பாக அச்சங்கங்களையும் பாதிக்கின்றது. சாரத்தின் பெறுமதி 9 ரூபாயாக இருந்த சமயம் முந்நூறு யார்கொண்ட பாக்களைப் பெற்றவர்கள் குறித்த காலத்துள் வாப்பை முடிக்க முன் விலையைக் குறைத்த செயலானது அவர்களுக்கும் பெரு நஷ்டத்தை ஏற்படுத்துகின்றது.

வளர்ச்சியடைந்து வரும் தொழில் நிலையங்களில் துணி உற்பத்தியில் தொழிலாளர்கள் முனைந்துள்ளதால் புதிதாகப் பழக வருபவர்கள் பழகுவதற்கு ஏற்ற உபகரணங்கள் இன்றிப் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். இதனல் அவர்களின் காலம் வீணகின்றது. புதிதாக வருபவர்கள் பழகுவதற்கேற்ற வசதிகளைப் புறம்பாக அமைத்துக் கொடுப்பதே முறை. அத்துடன் விதம் விதமான துணிகளை நெய்வதற்கும், வெவ்வேறு டிசைன்கள் செய்வதற்கும், இரண்டுக்கு மேற்பட்ட கால் மிதிகள் மிதிப்பதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்தல் நன்று. இவற்றில் பயிற்சிபெற அவர்கள் பல நிலையங்களில் இருப்பதால் அவர்கள் நல்லூர் நெசவாசிரிய பயிற்சிக்கலாசாலை போன்ற கலாசாலைகள் நடாத்தும் பரீட்சைகளுக்குத் தோன்றிச் சித்தியடைய இயலாதிருக்கின்றனர்.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு விண்ணப்பம் செய்வோர் ஜே. எஸ். ஸி. சித்தியடைந்தவர்கள் என்ற திட்டத்தை மாற்றியமைத்தால் இரு பிரச்சனைகளைத் தீர்க்க முடியும். 1—எஸ். எஸ். ஸி, சித்தியடைந்து விட்டு வேலை தேடும் வாலிபர்களுக்கு வேலை கொடுக்கலாம். 2—ஒவ்வொருவரும் கட்டாயமாக எஸ். எஸ். ஸியாவது படிக்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை ஏற்படுத்தலாம். பெண்களுக்கு ஜே. எஸ். ஸி. என்ற பிரத்தியேகத் திட்டத்தை வகுக்கலாம்.

கரவெட்டி "ஆதவன்."

## தமிழோசை பரவவேண்டும்

யாழ்ப்பாணத்தில் இப்போது இசை விழாக்கள் மூலை முடுக்குகளிலெல்லாம் கொண்டாடப்படுவது வரவேற்கத் தக்கதே. எனினும் பொதுமக்கள் எல்லோருமே அனுபவிக்க முடியாத நிலைமை ஏற்படுவது இவ்விழாக்களின் குறிக்கோளைச் சற்றுப் பாதிக்கவே செய்கிறது.

நீங்கள் ஏன் சங்கீதவிழாவுக்குப் போகவில்லை என்று நான் ஒருவரைக் கேட்டதற்கு "அங்கு பாடுவதொன்றும் எனக்கு விளங்கவில்லை, அதனல் தான் நான் போகவில்லை" என்று கூறினர்.

அவர் குறிப்பிட்ட குறை மொழிப்பற்று மிகுந்த இந்நாளில் பெரும் குறையாகத்தான் இருக்கின்றது. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போலினிதாவதெங்கும் காணோம்" என்ற பாரதியின் வாக்கை மறுப்பதுபோலத்தானிருக்கிறது வேற்று மொழியில் இசை விழாக்களிற் பாடுவது.

சங்கீத வித்வானென்றால் தெலுங்கில் தான் பாடவேண்டும் என்ற எண்ணம் இப்பொழுது நீங்கி வருவது உண்மையே. இதை எல்லா வித்வான்களும் உணர்ந்து தமிழிற் கருத்துச் செறிந்த பாடல்களை முறையாகப் பாடவேண்டும்.

இல்லாவிடில் இதிலும் பிரிவுகள் ஏற்பட்டுவிட ஏதுவாகும். இப்படியே இசை வல்லுனர்களெல்லாம் பிரிந்து சென்றால் கர்நாடக இசையில் மக்களுக்கு ஆர்வம் குன்றும்.

ஆகவே, சங்கீத விழாக்களிலெல்லாம் தேமதுரத் தமிழோசை பரவும் வகை செய்யச் சம்பந்தப் பட்டவர்களெல்லோரும் ஒன்று கூடி உழைக்க வேண்டும். அப்பொழுது தான் இசை விழாக்களுக்குப் பொது மக்கள் ஆதரவு நல்குவார்கள். மக்கள் மத்தியில் ரசிப்புத் தன்மை வளரும். இசையும் அதன் உரிய உயரிய இடத்தைப்பெறும்.

யாழ்ப்பாணம் தமிழன்பன்.

## யாழ்ப்பாணத்தில் இசைக்கச்சேரி

திருமதி சரஸ்வதி பாக்கியராஜா சென்னை கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியிற்சென்ற இரு வருடங்களாக இசைக்கலையிற் பயிற்சி பெற்று சமீபத்தில் யாழ்ப்பாணம் வந்துள்ளார். இவரைக் கௌரவிப்பதற்காக சங்கீத வித்வசபையின் ஆதரவில் 9-5-59 சனிக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் ஓர் இன்னிசைக் கச்சேரி நடைபெறும்.

### பனங்காமம்

## கயிலாயநாதர் சிவாலயம்

பனங்காமத்திலிருந்து **திரு. வ. க. செல்லப்பா எழுதுவதாவது:**

சோழ மன்னருடைய ஆட்சிக் காலத்தில் வாழ்ந்த சைவ நன்மக்களால் நிறுவப்பட்டிருக்கலாம் என்று கருதப்படும் **கயிலாயநாதர் சிவாலயம்** ஒன்று மன்னார் மாவட்டத்தில் மாந்தைப் பகுதியில் உள்ள பனங்காமம் என்னும் கிராமத்தில் அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் சீரழிந்த நிலைமையில் காணப்படுகிறது. இச்சிவாலயம் இடையில் வன்னியர் ஆட்சிக்காலத்திலும் டச்சுக்காரர், போர்த்துகீசர், ஆங்கிலேயர் ஆகிய அன்னியரின் ஆட்சிக்காலத்திலும்பாதுகாப்பார்இன்றி, கட்டிடம் எல்லாம் இடிந்து நொருங்கிக் கல்லோடு கல்லாயும், மண்ணோடு மண்ணாயும் அழிந்துங்கூட ஆங்கு நிறுவப்பட்ட சிவலிங்கங்களானவை இன்றும் புதுமை குன்றாத நிலைமையில் காணப்படுகின்றன.

இப்புராதன கயிலாயநாதர் சிவாலயத்தைப் புதுப்பித்து அமைத்து முடிக்கும் நோக்கமாக மன்னார் சைவமகா சபையினர் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியின் காரணத்தாலும், உள்ளூர் சைவப்பொதுமக்களுடைய ஒத்துழைப்பினோடும் கடந்த 28. 8. 57 புதன்கிழமை இச்சிவாலயத்தின் முன்றிலில் ஒரு புனருத்தாரணச் சபை ஸ்தாபிக்கப்பட்டது.

சமீபத்தில் இவ்வாலயத்தில் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை மிகச்சிறப்பாக நடைபெற்றது. மேலும் ஏனைய நாயன்மார்களின் குருபூசைகளையும் நடாத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்கோயில் திருப்பணிக்குப் பொருள் கொடுத்து உதவுவது சைவ நன்மக்கள் கடனாகும்.

## வியாவில் இலக்கிய விழா

அன்பின் வழி நின்று எமக்கு வழிகாட்டிய புத்த பிரான் அன்பு மார்க்கத்தை உலகிற்கு அளித்துச் சென்றார். அன்றாட வாழ்க்கையிலுங் கூட நாம் அன்புவழி சென்று சகோதரத்துவ மனப்பான்மையுடன் நடந்துகொள்ளப் பயிலவேண்டும்.

இன்று எமக்கிடையே ஏற்பட்டுள்ள அல்லலைப் போக்க வல்லது அன்பு மார்க்கமேயாகும். இவ்வாறு வடபகுதி வித்தியாதிகாரி திரு. சி. உ. சோமசேகரம் காரைநகர்—வியாவில் இலக்கிய மன்றத்தினதரவில் சமீபத்தில் நடைபெற்ற இலக்கிய விழாவுக்குத் தலைமை தாங்கிப் பேசும் போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது:

நித்திய பேரின்ப வளர்ச்சிக்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் இலக்காயுள்ளது இலக்கியம். காற்று நீர் ஆகியவற்றை நாமெல்லாம் எவ்விதம் பெற்றனுபவிக்க முடியுமோ அதே போன்று யாவரும் இலக்கியச் சுவையை அனுபவிக்க முடியும். அறிவிற் சிறந்த பெரியார்கள் இலக்கிய நூல்கள் பலவற்றைத் தந்திருக்கின்றனர். அவற்றையெல்லாம் நாம் படித்துப் பயனுற வேண்டும். மதுவை அருந்துபவன் எவ்விதம் அதனைத் தேடிக் குடிக்க விரும்புவானே அதே போன்று இலக்கிய மதுவைச் சுவைத்தவர் அதனைத் தொடர்ந்து அனுபவிக்க விரும்புவர். இலக்கியம் மதுவைக் காட்டினும் போதை கூடியது.

## செஞ்சிலுவைச் சங்கம் நூற்றாண்டு விழா

செஞ்சிலுவைச் சங்கத்தின் நூற்றாண்டு விழா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் 8-5-59 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குக் கொண்டாடப்படும்.

### 'இராம கிருஷ்ணாஸ்' மோட்டார் நிலையம்

'இராம கிருஷ்ணாஸ்' என்ற பெயருடன் புதிய மோட்டார் நிலையம் யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியிலுள்ள 10-ம் இலக்கப் புதிய கட்டடத்தில் 29. 4. 59 புதன்கிழமை காலை திறந்து வைக்கப் பட்டது

இழந்த இரத்தத்தை விருத்தி செய்ய

ஓர் அரிய யோசனை

டாக்டர் டிஸ்கிஸன்ஸ்

ஹெப்பற்ரோ - B12

(Hepato - B12)

இழந்த இரத்தத்தை விருத்தி செய்வதுடன்
பாண்டு, இரத்தமின்மை
ஆகியவற்றுக்கும் வலிமையூட்டும்
அற்புதமான மருந்து

கிடைக்குமிடம்:
புதியமலாயன் அப்போதிக்கரீஸ் கம்பெனி
268, ஆஸ்பத்திரி வீதி, : : யாழ்ப்பாணம்

உங்கள் கார் பற்றறிகளைத் திறமான முறையில் "சார்ச்" செய்வதற்கும் யந்திரங்களைப் பழுது பார்ப்பதற்கும் ஸ்பிறே பெயின்றிங் முதலிய வேலைகளுக்கும் உகந்த இடம்




சுந்தரம்ஸ்
பற்றறி சேவிஸ்

402, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்

# மக்கள் அனைவரும் சுதந்திரப் பிறவிகள் உரிமையினுல் சரிசமமானவர்கள்

## பேராதனையில் ஐ. நா. மனித உரிமை மகாநாடு

சென்ற 4ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 12 நாட்களுக்கு, கண்டி பேராதனை பல்கலைக்கழகத்திலே, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கமிஷனின் மகாநாடு நடைபெறுகின்றது.

இம் மகாநாட்டில் தென் கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த ஆஸ்திரேலியா, பர்மா, இலங்கை, (தேசீய) சீனம், ஹாங்காங், இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், யப்பான், கொரியா, மலாயா, நேபாளம், நியூஸிலந்து, பிலிப்பைன்ஸ், ஸ்ராலக் முதலிய 15 நாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். இஸ்ரேல் தேசப் பிரதிநிதி பார்வையாளராகக் கலந்துகொண்டுள்ளார். அரசாங்கத் தொடர்பற்ற 8 ஸ்தாபனங்களும் இம் மாநாட்டுக்குப் பிரதிநிதிகளை அனுப்பியுள்ளன.

ஐ. நா. மனிதஉரிமை கமிஷன் தலைவர் திரு. ஆர். எஸ். எஸ். குணவர்த்தனவின் தலைமையில் மகாநாடு நடைபெறுகின்றது.

"நிர்வாக அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, மனித உரிமைகளைப் பறிக்காமல் தடுக்க சட்டம் முதலிய பரிகாரங்களைப்பற்றி ஆலோசனை செய்வதே" பேராதனையில் கூடியுள்ள மகாநாட்டின் நோக்கமாகும்.

இச் சமயம் மனித உரிமைகள் விஷயமாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் செய்துள்ள தீர்மானத்தையும் வேலையையும் பற்றி இங்கு சற்றே நினைவு கூருவோம்.

1948ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபை மனித உரிமைபற்றிய பிரகடனத்தை நிறைவேற்றியது. அதுமுதல் டிசம்பர் 10ஆம் திகதி மனித உரிமைநாளாக, பொதுச்சபை அறிவித்துள்ளதுடன், அத்தினம் பல நாடுகளிலும் கொண்டாடப்பெற்று வருகின்றது.

ஐ. நா. ஸ்தாபனத்தின் சாசனபத்திரத்தின் முதல் விதியிலேயே "மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரத்தையும் மதித்து, ஜாதி, ஆண் பெண், மொழி, சமயம் முதலிய எவ்வித வேற்றுமைகளையும் காட்டாமல், இவற்றைப் பேணி அபிவிருத்தி செய்யவேண்டியது அந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்று என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சென்ற பல வருடங்களிலே இத்துறையில் சில காரியங்கள் செய்யப்பட்டுள்ளனவெனினும், இதில் பல தடைகளும் சங்கடங்களுமுள்ளன. முன்னேற்றம் மிகவும் மெதுவாகவேயுள்ளது.

மனித உரிமைகளைப்பற்றிய பொறுப்பு, ஐ. நா. வின் மூன்று ஸ்தானங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. அதாவது பொதுச் சபை, பொருளாதார சமூக கவுன்ஸில், டிரஸ்டி (தர்மகர்த்தா) கவுன்ஸில் இவை இதுபற்றிக் கவனிக்கின்றன.

மனித உரிமைகளை அபிவிருத்திசெய்ய ஒரு கமிஷன், பொருளாதார சமூக கவுன்ஸிலால் நியமிக்கப்படுகிறது. இதில் 18 அங்கத்தவர்கள் உளர். 1946ஆம் வருஷத்தில் இது அமைக்கப்பட்டது. இதன் முதற் கூட்டம் 1947 ஜனவரியில் நடைபெற்றது. சிறுபான்மையோர் பாதுகாப்பு, பெண்களின் நிலைமை, சாதி சமயம், மொழி முதலிய காரணங்களால் வேற்றுமைகாட்டல், முதலிய பல விஷயங்களையும் இக் கமிஷன் கவனிக்கவேண்டும். 1946ஆம் வருஷம் சிறுபான்பையோர் பாதுகாப்புக்காக ஒரு உப கமிஷனும் நியமிக்கப்பட்டது. சிறுபான்மையோரை பாரபட்சமாக நடத்தாமலும், அவர்களது நலவுரிமைகளைப் பாதுகாக்கவும் அவ்வப்போது தக்க யோசனைகளை, மனித உரிமை கமிஷனுக்குக் கூறுவதே இந்த உப கமிஷனின் பொறுப்பு.

இதேசமயம் பெண்களின் உரிமைகளை உலகெங்கும் பாதுகாக்கவும் கமிஷன் நியமிக்கப்பட்டது.

மனித உரிமைக் கமிஷன், முதல் ஏழு வருஷங்களில் மனித உரிமைச் சாசனமொன்றைத் தயாரித்தது. மனித உரிமை பற்றிய பிரகடனம் தயாரித்து, இதை ஒப்புக்கொள்ளும் அரசாங்கங்களை சட்டமூலம் கட்டுப்படுத்தவும் இதை நடைமுறைக்குக் கொண்டுவரவும் மேற்பார்வையிடவும் சர்வதேச ஏற்பாட்டைச் செய்தது.

1947ஆம் வருஷம் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியாரான மிஸிஸ் பிராங்ளின் ரூஸ்வெல்டின் தலைமையில் கமிஷன் வேலை ஆரம்பித்தது. மறு வருஷம் இந்த பிரகடனம் ஐ. நா பொதுச்சபையால் அங்கீகரிக்கப்பட்டது. 58 தேசங்களில் 48 இதை ஆதரித்தன. எட்டு நாடுகள் வாக்களிக்கவில்லை. இரு நாடுகள் கூட்டத்துக்கு வரவில்லை.

இதில் 1, 2 விதிகள் கூறுவதாவது:—

**"எல்லாமனிதரும் சுதந்திரமாகப் பிறந்தவர்கள். மதிப்பிலும் உரிமைகளிலும் யாவரும் சரிசமமானவர்கள்.** சாதி, ஆண், பெண், மொழி, சமயம், அரசியல், தேசம், சமூகம், சொத்து, பிறப்புமுதலிய எவ்வித வேற்றுமைகளையும் காட்டாமல், இதில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா உரிமைகளையும் பெறத் தகுதியுள்ளவர்கள் ஆவர்.

பிரகடனத்தில் 3 முதல் 21வது விதி வரை, அரசியல் முதலிய உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. சுதந்திரமாக வாழ்வது, பாதுகாப்பு, அடிமைத்தனமின்மை, குரூரமாகத் தண்டிக்கப்படாமை, சட்டத்தின் முன் சமமான பாதுகாப்பு, விசாரணையில்லாமல் சிறைப்படுத்தல், நாடு கடத்தல் முதலியவற்றிலிருந்து பாதுகாப்பு, குற்றம் நிரூபிக்கப்படும்வரை நிரபராதி என்று கருதல், பிரயாண சுதந்திரம், மத சுதந்தரம், கருத்து சுதந்திரம், கூட்டம் கூடும் உரிமை, ஆட்சியில் பங்கெடுக்கும் உரிமை, அரசாங்க சேவையில் ஈடுபட சம சந்தர்ப்பம் இவையெல்லாம் அதில் அடங்கியுள்ளன.

22 முதல் 27வது விதி வரையில், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. வேலை செய்ய உரிமை, ஓய்வு பெற உரிமை, சுகாதாரத்துக்குத் தேவையான வாழ்க்கை அந்தஸ்து, கல்வி கற்க உரிமை, சமூக கலாசார வாழ்வில் கலந்து கொள்ள உரிமை.

சாசனத்தில் 28 முதல் 30 வரையுள்ள கடைசி விதிகளில் இந்த உரிமைகள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கும்படியான சமூக, சர்வதேச அமைப்பு இருக்கவேண்டுமென்றும்கூறி இதே சமயத்தில் ஒவ்வொருவரும் சமூகத்துக்குச் செய்ய வேண்டிய பொறுப்புக்களையும் கடமைகளையும் விளக்கியுள்ளனர்.

எல்லாரும் ஒப்புக்கொள்ளக் கூடிய உரிமை சாசனத்தைத் தயாரிப்பதென்பது சுலபமல்ல. ஆகவே இந்த சாசனம் நிறைவேற்றப்பட்டதை அற்பமாக மதிக்கக் கூடாது. இந்த உரிமை சாசனம் உலகில் எல்லா மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபைக்கு வரும் தீர்மானங்கள் இந்த உரிமைகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. 1948-ம் வருஷத்துக்குப் பின் கோஸ்டாரிகா, எகிப்து, எல் சால்வடார், எரிட்ரியா, ஹைடி, இந்தோனேஷியா, ஜோர்தான், லிபியா, பாகிஸ்தான், ஸிரியா முதலிய நாடுகளின் அரசியல் திட்டங்களில் இந்த சாசன பத்திரத்திலிருந்து பல வாசகங்கள் எடுத்துப் பயன்படுத்தினர்.

பல சர்வதேச ஒப்பந்தங்களும் இந்த மனித உரிமை. சாசனத்தைத் தழுவியே எழுதப்பெற்றுள்ளன. ஆனல் சுயாட்சி உரிமை அற்ற மக்களுக்கும், இது செல்லுமா? அல்லது சில நிபந்தனைகள் போடவேண்டுமா? என்ற கேள்வி எழுந்தது. எல்லாருக்கும் சுயநிர்ணய உரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் தீர்மானம் நிறைவேறியதுடன் இவ்விஷயமாக மேலும் விசாரணை நடத்த ஐந்துபேரடங்கிய ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டது. இக்கமிஷனின் யோசனைகளை பொதுச் சபை இன்னும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளவில்லை.

சிறுபான்மையோர் பாதுகாப்பு, தகவல் சுதந்திரம், மக்கள் படுகொலை, அகதிகள், நாடற்றவர்கள், கட்டாய அடிமைத்தொழில், பெண்கள் அந்தஸ்து, முதலியவற்றைப்பற்றியெல்லாம் ஆராய்ந்து, எல்லா மக்களுக்கும் மனித உரிமைகளை அளிக்கவும் அவர்களது மதிப்பையும் சுதந்திரத்தையும் மதிக்கவும் வழிவகைகளை இக் கமிஷன் படிப்படியாக வகுத்து வருகின்றது.

சில நாடுகள் இந்த விதிகளை மீறக்கூடும். இதைப்பற்றி விசாரிப்பதாயின், அது தங்கள் உள்நாட்டு விஷயங்களில் தலையிடுவதாகுமென்று சில நாடுகள் ஆட்சேபிக்கலாம். என்றாலும் இந்த முக்கிய விஷயத்தில் பல நாடுகளும் பொது நன்மையை முன்னிட்டு தங்கள் உரிமைகளை விட்டுக்கொடுத்து ஐ. நா. ஸ்தாபனத்துக்கு விசேஷ அதிகாரங்களை அளிப்பதாயின், மனித உரிமைகள் நன்கு பாதுகாக்கப்பட அதிக வாய்ப்பு இருக்கும்.

---

கண்ணோட்டம்: 4

# மாடுகள், கவனம்!

"ஏய் மாடு! தள்ளிநட!" இப்படி ஒரு சத்தம். ஆத்திரத்துடன் திரும்பினேன். கார் ட்றைவர் காரை இப்படியும் அப்படியுமாக வெட்டி எடுத்தார். என் அருகிலே. ஆறுதலாக நடந்துகொண்டுசென்ற ஒரு பருத்த மாடுதான் ட்றைவரின் பதட்டத்திற்குக் காரணம் என்பது பின்னர் தெரிய வந்தது.

இந்த மாடுகளின் தொல்லை வரவர மோசமாயிருக்கிறது என்றே சொல்லவேண்டும். யாழ்ப்பாணப் பட்டினத்திலே நடமாடும் மனித கூட்டமும், பஸ்கள், கார்கள், டாக்ஸிகள் இவைபோன்ற வாகனங்களின் தொகையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. தெருக்களிலே நடப்பவர்கள் பாடு பெரிய கஷ்டம். இதற்குள், எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற தன்மையில் தெருத்தெருவாக அலையும் மாடுகள், சாரதிகளுக்கும், பாதசாரிகளுக்கும் அதிக தொந்தரவையும், அபாயத்தையும் உண்டாக்கி வருகின்றன.

யாழ்ப்பாணப் பட்டினத்தில் இப்படி மாடுகள் அலைந்து திரியும் காட்சி நகரத்திற்கே இழுக்காகும். இம்மாதிரித் திரியும் மாடுகளைப்பிடித்துக் கட்டுவதற்காக மாநகரசபை ஒருவரை நியமித்துள்ளது. ஆனல், அவர் தமது கடமையைச் சரிவரச் செய்கின்ருரா என்பதுதான் கேள்வி. இவருடைய நடவடிக்கைகள் நகரசபை அதிகாரிகளுக்குத் தெரியாமல் இல்லை. அவர்கள் கண்மூடி மௌனமாய் இருப்பதேன்?

இந்த விஷயம்பற்றி அதிகாரி ஒருவரிடம், விசாரித்த பொழுது, அவர் மாடுகளின் நடமாட்டம் பெருந்தொல்லை என்பதை ஒப்புக்கொண்டார். அத்துடன் அவர் சில யோசனைகளும் கூறினர். மாடுகளைப் பிடிப்பதற்கென நியமிக்கப்பட்டவருக்கு, நகரசபை மாதச் சம்பளம் என்ற முறையிற் சம்பளம் கொடுப்பதில்லையாம். அவர் பிடித்துக்கொண்டு வரும் மாடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறே அவருக்குப் பணமும் அளிக்கப்படுகின்றதாம். மாட்டைப் பிடிப்பதற்கு அவருக்குக் கிடைக்கும் பணத்திலும் மேலதிகமாக மாட்டைப் பிடிக்காமல் விடுவதால் அவருக்குக் கிடைக்கும்போது அவர் அச்சந்தர்ப்பத்தை நழுவ விடுவாரா, என்ன? ஆதலால், மாடு பிடிப்பவருக்கு மாதச் சம்பளம் அளிப்பதே நலம் என அந்த அதிகாரி கருதுகிருர். அத்துடன், அவர் மாடுபிடிப்பவரை மாத்திரம் குற்றம் சொல்லவில்லை. மாடுகளின் சொந்தக்காரர்மீது அவர் குற்றம் சுமத்துகிருர். நகர சபை அதிகாரிகள் மாட்டுச் சொந்தக்காரர்மீது தக்க நடவடிக்கை கையாள்வதற்கு வசதிகள் கிடைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இவற்றை எல்லாம் நகரசபை கவனித்து, மாட்டுப்பிரச்சினைக்கு ஒரு முடிவு காண முயல வேண்டும். சென்ற வாரம் ஒரு மாடு கஸ்தூரியார் தெருவின் குறுக்கே செல்லும் பொழுது, மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவரின் உயிருக்கு உலை வைக்கப் பார்த்துவிட்டது. ஆனல் அவர் தெய்வாதீனமாகச் சிறு காயங்களுடன் தப்பிக்கொண்டார். இவ்வளவு அபாயகரமான நிலையையும் இம்மாடுகள் சில சமயங்களில் ஏற்படுத்தி விடுகின்றன.

நகரத்தில் நாலாபக்கமும் நடைபயின்று வரும் இம்மாடுகளுக்குக் கூட்டாளிகளும்உளர். ஆமாம், நாய்களைத்தான் குறிப்பிடுகிறேன். மாடுகள் நாய்களிலும் ஒருபடி உயர்வு என்றே கூறவேண்டும். ஏனெனில், அவைகள் அதிகமாக வாட்டசாட்டமான மிருகங்களாகவே கண்களுக்குத் தென்படுகின்றன. ஆனல், தெருக்களில் அலைந்தும், ஓரங்களில் துயின்றும் கிடக்கும் நாய்களோ அநேகமாக நோய் பிடித்த பிராணிகளாகவே தோற்றமளிக்கின்றன. இப்படி நோயுள்ள பிராணிகளைத் தெருக்களில் நடமாட விடுதல் சுகாதாரத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகும். இந்த நாய்களையும் வீதிகளிலிருந்து நீக்க நகரசபை அதிகாரிகள் தக்க நடவடிக்கைகள் கையாள வேண்டும்.

நகரத்தின் தெருக்களில் காணப்படும் அழுக்கும், துப்பரவின்மையும் கட்டவிழ்க்கப்பட்டுத் திரியும் இந்த மாடுகளாலும், நாய்களினுலுமே நூற்றுக்குத்தொண்ணூறு வீதம் ஏற்படுகின்றன. சென்ற சென்ற இடங்களெல்லாம் மலசலம் கழித்து விடுகின்றன. தெருக்களிலே, ஓரமாகக் குவித்து வைக்கப்படும் குப்பையை இம் மிருகங்கள் தெருவெல்லாம் பரப்பிவிடுகின்றன. இத்தெருக்களில் நடந்து செல்வோர் சிறந்த உதைபந்தாட்ட விளையாட்டுக்காரர்களாக மாறினுலோ, அதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை. ஏனெனில், நடப்பவர் அடுத்து வைக்கும் ஒவ்வொரு அடிக்கும் அங்கு ஒரு மாட்டின் சாணமோ, இங்கு ஒரு நாயின் மலமோ தான் கிடக்கும். இவற்றில் மிதியாமல் அவர் வளைந்து, வளைந்து நடக்க வேண்டியிருக்கும். இந்த அருவருக்கத் தக்க நிலை ஒழிய வேண்டும். மிருகங்களின் சொந்தக்காரரும், அதிகாரிகளும் பொறுப்புணர்ச்சியுடன் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்வார்களேயானுல் நகரம் நலமுறும். மக்களும் நன்மை அடைவார்கள்.

தூய வெண்மைக்கு

**வீனஸ் சோப்**

சிறந்தது

**வீனஸ் சோப் தொழிற்சாலை**

269, கே. கே. எஸ். வீதி, :: யாழ்ப்பாணம்.

**போட்டியும் பூசலும், கபடும் சூதும் அடிமைகளுக்குரித்தான குணங்களாகும்.**

# தேடி வந்த செல்வம்

**கசின்**

**2**

நற்பண்பும், நல்லெண்ணமும் நிறைந்த தெளிந்த சிந்தனையுள்ளவர்களின் குரலும், வஞ்சகம், கபடு நிறைந்த சிக்கலான சிந்தனையுள்ளவர்களின் குரலும் நுணுகிப் பார்க்கின் தம்முள் பேதம் காட்டும். சந்தோஷமான வார்த்தைகளின் ஓசைக்கும், கோபமான வார்த்தைகளின் ஓசைக்குமிடையில் எவ்வளவோ பேதமுண்டு.

'ஆண்பிள்ளை என்ருல் உத்தியோகம் பார்க்கவேண்டும் என்று விரும்புகின்ற பெண்கள் இருக்கும்வரையில் நமது நாடு உய்யாது' என்று நான் சிறிது உரத்துக் கூறினேன்; கதறினேன்; என்றுதான் சொல்லவேண்டும். எனது அதட்டலோடு கூடிய இவ்வார்த்தைகள், அவளைக் கலக்கியிருக்கும் என்றுதான் நினைத்தேன். இப்படி ஒரு புதியவளோடு பேசியிருக்கப்படாது என்று பின் பச்சாத்தாபப்பட்டேன். ஆனல் அவளுடைய பதில் என்னைத் தலைகுனியச் செய்துவிட்டது. அவள் ஆத்திரப்படாமலும் அவசரப்படாமலும் வெகு அழகாகச் சொன்னள்.

'நான் உங்களை விரும்புகிறேன் என்று யார் சொன்னது? நான் உங்களை விரும்பினல்தான், உத்தியோகம் பார்க்கிறவரா? பாராதவரா? என்ற ஆராய்ச்சி உங்கள் கூற்றுப்படி ஏற்படும். கொழும்பில் இருக்கும் தமிழர்கள் அநேகர் உத்தியோகமாகத்தான் இருக்கிருர்கள். நீங்கள் கிளிநொச்சியில் இறங்குவதாகக் கூறியபடியால் என் மனதில் எழுந்த சந்தேகத்தைப் போக்கக் கேட்டேன். நீங்கள் வியாபாரம் செய்கிறீர்களாக்கும்?'

இவ்விதம் அவள் பேசினள். "நான் உங்களை விரும்புகிறேன் என்று யார் சொன்னது?" என்று அவள் முதலிற் சொன்ன வார்த்தை என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. பிறகு சொன்ன வார்த்தைகள் மறைந்துவிட்டன. இந்த அடியை என்னல் தாங்கமுடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு மௌனமானேன்.

சிறிது நேரம் எங்களுக்குள் மௌனம் நிலவியது. 'நீங்கள் வியாபாரஞ் செய்கிறீர்களா' என்று அவள் கேட்ட கேள்விக்கும் நான் பதில்சொல்லவில்லை. என்னுடைய உணர்ச்சி வசப்பட்ட மனம் இன்னும் சரியான நிலைக்கு வரவில்லை. ஜன்னலுக்கூடாகக் குளிர்ந்த காற்று வந்து முகத்திற்படச் சிறிது சிறிதாக எனக்குப் புத்தி தெளிந்தது. சாதாரணமாக எனது உடுப்பையும், பாவனையையும் பார்த்து எவரும் ஒரு உத்தியோகத்தன் என்றே நினைத்திருப்பார்கள். அவள் மீது நான் கோபித்து உரத்துப் பேசியது தவறு; என்று என்னைப்பற்றி நான் நினைத்து வெட்கப்பட்டேன்.

இத்தருணத்தில் அவள் மீண்டும் கதை தொடங்கினள். 'எங்கள் சமூகம் உத்தியோக ஆசையினலேயே இவ்வளவு சீரழிந்தது. அடிமைப்புத்தி மிகுந்து போட்டியும் பூசலும் பொருமையும் உண்டாகி, தன் காலில் நிற்கமுடியாத சமூகமாக விளங்குவதற்குக் காரணம் இந்த உத்தியோக மோகமே, என்று அவளுடைய இனிமையான குரலில், தெளிவான நடையில் அவள் சொல்லச் சொல்ல என்னுள்ளம் குளிர்ந்தது. அவளல்லவோ பெண் என்று தோன்றியது. என்னுடைய கொள்கைகள் எல்லாவற்றையும் நான் சொல்வதிலும் பார்க்க விளக்கமாக அவள் சொன்னள். என் உள்ளத்திலுதித்த கோபமெல்லாம் தணிந்து, அகமும் முகமும் கனிந்து அவளை நோக்கினேன். எனது நிலை அவளுக்கு விளங்கிவிட்டது.

'உங்களுடைய பெயரென்ன' என்று அவள் கேட்டாள். நான் எனது பெயரைச் சொன்னதும், அந்தப் பெயர்தான் எனக்கு என்று அவள் எதிர்பார்த்ததுபோல் அவள் முகக்குறி காட்டியது.

'கொஞ்சம் தேநீர் சாப்பிடுகிறீர்களா!' என்று கேட்டாள். 'நான் தேநீர் சாப்பிடும் வழக்கமில்லை; மன்னிக்கவேண்டும்' என்று பணிவுடன் கூறினேன்.

'மிகவும் நல்ல பழக்கம்; ஆனல் எனக்காக இப்பொழுது ஒரு துளியாவது குடிக்கவேண்டும். நான் தெரியாது கேட்டுவிட்டேன். மறுக்காதீர்கள்' என்று ஒரு கரண்டியளவு தேநீரை ஊற்றித் தந்தாள். அவள் கெஞ்சியதைப் பார்த்து மறுக்க மனமின்றி வாங்கிக் குடித்தேன். இது எனது முதலாவது தோல்வி.

அந்த ஒரு கரண்டி தேநீரும் என் நெஞ்சுக்குள் நின்று 'நீ உனது கொள்கையினின்றும் தவறிவிட்டாய்' என்று சொல்லிக்கொண்டிருந்தது.

எனது பிரிய நண்பன்; இராமச் சந்திரன்; நான் உத்தியோகம் விட்டபொழுது, என்னை அதிகம் தடுக்காது, என்னை உற்சாகப்படுத்திப் புதிய தொழிலுக்குப் பணவுதவியும் புரிந்தவன், அவனுடைய வீட்டிற்கு நான் ஒருமுறை போன பொழுதுஎனதுகொள்கைதெரியாது, அவனுடைய வீட்டுக்காரர்கள் தேநீர் அனுப்பிவிட்டார்கள். ஒரு சிறிது குடித்துவிட்டு வைக்கும்படி அவன் எவ்வளவோ விநயமாகக் கேட்டும் நான் மறுத்துவிட்டேன்.

'எனது பிரிய நண்பனின் வேண்டுகோளை மறுத்துப் பிடிவாதமாக நின்ற நான், முன்பின் தெரியாத இந்தப் பெண்ணிடம் வாங்கிக் குடித்துவிட்டேனே' என்று எனது மனச்சாட்சி குத்திக்கொண்டேயிருந்தது.

இத்தருணத்தில் அவளுடைய கைக்குட்டை காற்றுக்கு அடிபட்டு அப்பாற்போனது. அவள் தேநீர் குடித்துக்கொண்டிருந்தாள். நான் எழுந்து அதை எடுத்துக்கொடுத்தேன். அத்தருணத்தில் எனது காலும், அவள் காலும் ஒன்றையொன்று தீண்டின.

நாங்கள் மிக அருகில் இருந்தபோதிலும் எங்கள் மனநிலை அதிக இடைவெளியுடனேயே இருந்தது. படிப்படியாக மனங்களின் இடைவெளியும் குறுகி வந்தது. எனக்கு என்னைத் தெரியாமல் ஒரு உற்சாகம் பிறந்தது. எழுந்து எனது பெட்டியை எடுத்து அதற்குள் இரண்டு தோடம்பழங்களை எடுத்தேன். ஒன்றை அவளிடம் கொடுத்தேன். அவள் தான் தோடம்பழம் சாப்பிடுவதில்லை என்று கூறினள். எனக்குச் சிரிப்பு அடக்கமுடியாமல் வந்தது. சிரித்துவிட்டேன். அவளும் சிரித்தாள்.

பிறகு, இரண்டு பழங்களையும் வாங்கி, ஒன்றை உரித்துச் சுளைசுளையாக எடுத்துத் தந்தாள். 'நீங்கள் சாப்பிடவில்லையே' என்றேன். 'நான்தான் சாப்பிடுவதில்லையென்றேனே'.

'அப்படியானல் நானும் இனிமேல் தோடம்பழம் சாப்பிடுவதில்லை' என்று சொல்லிவிட்டு நான் ஏன் இப்படிக் கூறினேனென்று எனக்குள் வெட்கப்பட்டேன்.

'ஐயையோ, இதென்ன ஆபத்து; நான் சாப்பிடவில்லையென்ருல் நீங்களேன் நிறுத்தவேண்டும்' என்று அவள் கேட்டாள். எனக்கு மேலும் பெரிய வெட்கமாய்விட்டது. அவளுடைய கேள்விக்கு உண்மையாக என்ன பதில் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. அகப்படாமல் அகப்பட்டுக்கொண்டேன்.

எனினும் ஒருவாறு என்னைச் சமாளித்துக்கொண்டு பின்வருமாறு கூறினேன். 'என்னுடைய கொள்கைகள் எல்லாவற்றையும் நீங்கள் ஆதரிக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் தோடம்பழம் சாப்பிடாவிட்டால், அதில் ஏதோ நன்மையிருக்கத்தான் வேண்டும், நானும் விட்டுவிடுகிறேன்.'

'மிகவும் நல்லது. நீங்கள் தேநீர் குடிப்பதில்லையென்பதை அறிந்ததும் நான் குடிக்காமல் இருக்கவில்லை. அவ்வளவோடு நில்லாது உங்களை நெருக்கிச் சிறிது குடிக்கப் பண்ணியிருக்கிறேன். இப்படிச் செய்ததற்காக நான் இப்பொழுது வெட்கப்படுகிறேன். இனிமேல் நானும் தேநீர் குடிக்கமாட்டேன்.'

அவளுடைய இவ்வார்த்தைகள் எனது உற்சாகத்தை மேலும் தூண்டிவிட்டன.

உரித்த தோடம்பழச் சுளைகள் அப்படியே இருந்தன. 'ஒருபோதும் தேநீர் குடியாத நான் நீங்கள் கேட்டதற்காக இன்று குடித்தேன். ஆகையால் நான் கேட்டதற்காக இன்று நீங்கள் தோடம்பழம் சாப்பிடவேண்டும்' என்று பக்தன் போற் கேட்டேன்.

அவள் ஒரு புன்சிரிப்புடன் 'அப்படியானல் சாப்பிடுகிறேன்' என்று சொல்லிச் சாப்பிட்டாள். நான் 'அவ்வளவும் சாலம்' என்று மெல்லிய குரலிற் கூறினேன்.

வந்தது அவளுக்குக் கோபம். உரித்த தோடம்பழம், உரியாத தோடம்பழம் எல்லாவற்றையும் தூக்கி எனது பக்கத்தில் வைத்துவிட்டு, முகத்தை மறுபக்கம் திருப்பி ஜன்னலுக்கூடாக வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். எனது கால்களைத் தீண்டிக்கொண்டிருந்த அவள் கால்களை இழுத்து மடக்கி வைத்துக்கொண்டாள்.

இது எனக்கு ஒரு புதிய அனுபவம். இச்சந்தர்ப்பத்தை எப்படிச் சமாளிப்பதென்று எனக்குத் தெரியவில்லை விழுந்து வணங்குவதா? பணிந்து போவதா? நான் சொன்னது சரியென்று வாதாடுவதா? அவ்விதம் வாதாடினல் அவளுடைய கோபம் முற்றும். அன்றியும் அவள் என்னைச் சின்னத்தனமாக நினைப்பாள். உண்மையில் அவள் தோடம்பழம் சாப்பிடாமல் இருந்து இன்று எனக்காகத்தான் சாப்பிட்டாளானல், நான் வெறும் சின்ன மனுஷனுகி விடுவேன். அவளைச் சமாதானப் படுத்துவதானல், அதை எப்படிச் செய்வது? விழுங்கவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் திண்டாடினேன். கழிந்துசெல்லும் ஒவ்வொரு நிமிஷமும், வில்லங்கமாக இருந்தது. —**தொடரும்**


'ஹென்ற்லி'
உடை அலங்காரத்தின்
உன்னத அடையாளமாகும்

ஹென்ற்லி

★ சேட்
★ காற்சட்டை
★ ஷோட்ஸ்

ஹென்ற்லி சேட், காற்சட்டை, ஷோட்ஸ் ஆகியவற்றை அணியும் ஆடவரும், இளைஞரும் சௌகரியத்தை அனுபவிப்பதுடன் வசீகரமான தோற்றத்தையும் பெற்று அழகுடன் விளங்குகின்றனர்.

ஹென்ற்லி உடைவகையில் நீங்கள் எதைத் தெரிந்தெடுத்து வாங்கினலும், அது கொடுத்த பணத்திற்கு நிறைந்த பெறுமதியாகும்

ஹென்ற்லி (காமெண்ட்ஸ்) லிமிடெட்,
பழைய விமான நிலைய வீதி,
(Old Air Port Road)
இரத்மலானை.




எங்களிடம்

பவுண் மார்க் ஓடுகள்
மான்தலை மார்க் ஒற்றைப்பீலி இரட்டைப் பீலி ஓடுகளும்

★

நெல்லு, எள்ளு, அரிசி
முதலியனவும்



சகாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்

R. சிவகுமாரன்
76, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்

**இந்தியாவின் விடுதலைக்காக இந்தியப் பேனு வீரர்களும் தங்கள் பங்கை உதவினர். தேச விடுதலைக்காகப் போராடிய மேனுட்டு வீரர்களின் வாழ்க்கை வரலாறுகளை அவர்கள் எழுதி மக்களிடையே சுதந்திர உணர்ச்சியைப் பெருக்கினர். பம்பாயில் வதிந்து வரும் தமிழ் நாட்டு அறிஞர் எம். ஆர். ஜம்புநாதன் பல நூல்களை 'வடமொழியிலிருந்தும் ஆங்கிலத்திலிருந்தும் தமிழிற் பெயர்த்துள்ளார். இக் கட்டுரையில் தாம் வெளியிட்ட 'மாஜினியும் மனித கடமையும்' என்னும் நூலைப்பற்றி விளக்கியுள்ளார்.**

## விடுதலை உணர்ச்சியூட்டிய நூல்:

# 'மாஜினியும் மனித கடமையும்'

எம். ஆர். ஜம்புநாதன்

இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் கடந்த நூற்ருண்டிற் பெருகி உன்னத நிலையை அடைந்தது. அதைத் தோற்றிவைத்து வெற்றியுடன் சுதந்திரத்தைப் பெற உதவி செய்தவர்களில் எழுத்தாளர்கள் முதன்மை ஸ்தானத்தைப் பெற்றிருந்தார்கள். பங்கிம் சந்திரர் 'ஆனந்த மட'த்தை எழுதி **வந்தே மாதரம்** என்னும் மந்திரத்தைத் தந்தார். அதை அற்புதத் தமிழில் சர்மா அவர்கள் அளித்தார். நாம் அடிமையாயிருந்தபோது 'மாஜினி' என்ருல் அனைவருக்கும் மயிர் சிலிர்க்கும். இத்தாலி தேசத்தை அன்னிய ஆட்சியிலிருந்து நீக்க, தன் வாழ்நாட்களை எல்லாம் உடல் பொருள் ஆவியோடு அளித்து பல உபாயங்களால், தன் தேசத்துக்கு விடுதலையைப் பெறச் செய்த மாஜினியின் வழிகளை நமது மகாசனங்கள் அறியவேண்டுமென லஜபதிராயர் உருது மொழியிலே மாஜினி சரிதையை எழுதினர். அதைப் பஞ்சாப் அரசாங்கம் பறிமுதல் செய்தது. ஸாவர்கர் அவர்கள் மராட்டி மொழியில், மாஜினி செயல்களை அறிவித்தார். அதை பம்பாய் அரசாங்கம் தடை செய்தது. நமது பாரதியார் மாஜினியின் சரிதத்தைத் தமிழிலே தந்தார். சென்னை அரசாங்கம் அதை மறைத்து விட்டது. அடிமைகளுக்கு விவிலிய நூலைப்போலுள்ள மாஜினியின் மனிதர் கடமைகளைத் தமிழர் அறியவேண்டுமென்ற எண்ணம் 1929ஆம் ஆண்டில் உதித்தது. எவர் அதைப் பிரசுரஞ் செய்வார்? என்ற எண்ணம் மனத்திலே எழுந்தது. அப்பொழுது 'தமிழ் நாடு' வாரப்பத்திரிகையின் ஆசிரியர் - ஒரு வீரப் புதல்வர் இருந்தார். இப்பொழுதும் அவர் நம்மிடையே இருக்கிருர். 'வாரந்தோறும் மாஜினியைப்பற்றி எழுதிவாருங்கள். தோன்றும் விபத்துக்களை நாம் எதிர்ப்போம்' என்று திரு டி.எஸ். சொக்கலிங்கம் கூறிஅக்கட்டுரைகளைப்பல வாரங்கள் பிரசுரித்தார். அவை நூல் வடிவமாக 1931ஆம் வருடத்தில் உருப் பெற்றன.

### போர்வீரன்

மாஜினி 19-வது நூற்ருண்டின் ஆரம்பத்தில் தோன்றிய போர்வீரன். அவன் அறியாமையைத் தகர்த்ததீரன்.பாமர சனங்கள் நீதியற்ற நம்பிக்கையில்மயங்கிச் சோர்ந்திருக்கிருர்கள். நீதியற்ற நம்பிக்கை நாளடைவில் பெரும் வழக்கமாகி, வழக்கம் தருமசின்னமாகி மாறிவிடும். நீதியற்ற நம்பிக்கை தருமசின்னமாஞல், தீமைக்குவியல் தூயவேடமணியும். தூயவேடத்தால் பாமரர்கள் ஏமாறுவார்கள். அது அவர்களைத் தாழ்த்தும். அது அதர்மங்களையும் ஜாதிமத வேற்றுமைகளையும் தோற்றுவிக்கும் என அறிந்து நீதியற்ற நம்பிக்கையை சதாகாலமும் எதிர்த்தார்.

நீதியற்ற நம்பிக்கையை வளர்த்துச் சுய நலத்துக்குச் செல்வதைப் பறிக்கும் புரோகிதர்களைக்கண்டனஞ் செய்தார். பொருளை நாடி நீங்கள் பணக்காரர்களைப் பற்றுகிறீர்கள். செல்வத்தை நினைத்து ஏழைகளைப் புறக்கணிக்கிறீர்கள். இன்று ஒருவன் ஏழையாயிருப்பான். நாளை அவன் செல்வப்பிரபுவாகலாம். பூச்சக்கரம் சுழலும். சுழலுவதே சட்டம். இச்சட்டத்தைத் தேசபக்தன் பாலிப்பான். அவன் அறிஞன். அவனை எவனுலும் தடுக்க இயலாது.

மக்கள் சமூகத்தை அன்புடன் நேசியுங்கள். உங்கள் குடும்பத்துக்கு, சமூகத்துக்குச் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நீங்கள் நாம் செய்யும் இக் காரியத்தை மக்கள் அனைவருக்கும் செய்தால் பூவுலகிற்கு இது நன்மையாகுமா, புன்மையாகுமா என்பதை உங்கள் உள்ளத்தையே கேட்டுக் கொள்ளுங்கள். அது மக்கள் சமூகத்தைச் சிதைக்குமென உங்கள் சித்தம் சொல்லுமாஞல் அதை விலக்குங்கள். உங்கள் குடும்பத்துக்கோ சமூகத்துக்கோ நன்மை விளைவிப்பதாயிருந்தாலும் அதை விட்டு விடுங்கள். மக்களுக்குப் பயனுள்ளவற்றையே செய்ய வேண்டுமெனக் கூறுவோம்.

### கடமைகள்

மாஜினி கடமைகளைப் பற்றி பல தலைப்புக்களில் எழுதியிருக்கிருர். நமக்கும், நமது குடும்பத்திற்கும், தேசத்துக்கும் பணிசெய்யக்கடமைப்பட்டிருக்கிருேம். உரிமைகளுக்குப் போராடினுல் உட்பிளவுகளும் சிதைவுகளும் தென்படும். கடமை யொன்றினுலேயே மக்கள் வாழ்வதுடன் நாடும் வாழும் எனப் பல கட்டுரைகளை எழுதினர். அவர் மொழிகளைப் படிக்குங்கால் பகவத் கீதையே நம்முன் எழுகிறது.

நீ செய்யும் செயலில்சாய்ந்து சுகத்தையும் துக்கத்தையுங் களைந்து நீருக்கும்நெருப்புக்கும் அஞ்சாமலும், பயனை எதிர் பார்க்காமலும், முன்செல் என ஸ்ரீ கிருஷ்ணன் கூறியதையே உரிமைக்காகவும் உற்சாகத்துக்காகவும் போராடாமல் களிப்பும் கலக்கமும் கழிந்து கஷ்டத்தையும் கொடுமையையும் கருதாமல் உன் கடமையைச் செய் என மாஜினி கர்ச்சித்தார்.

சும்மாவிருக்க வேண்டாம். நானும் சும்மாவிராமல் கடமையைச் செய்கிறேன். இச்சகமில்லையேல் சுவர்க்கமுமில்லை எனக் கீதைத் தலைவன் கூறியவையே.சுவர்க்கத்தையும் சகத்தையும் தனிப்படுத்தாதே.இதுவும் சர்வேசனுக்குரியது. சுவர்க்கத்துக்கு இதுவேவழி. சதாகாலமும் உன் கடமையைச் செய் என்னும் சொல்லிலே சுதந்திரபுருடன் புலப்படுத்தினர்.

### சுழலும் உலகம்

உலகம் ஒரு சக்கரத்தைப் போல் சுழலுகின்றது. ஈசன் நித்தியன். இச்சக்கரத்தில் சாய்ந்தே ஒருவன் செல்லவேண்டுமென்பது சட்டம். இச்சட்டமில்லையேல் வாழ்க்கையில்லை. சட்டம் ஈசனிடமிருந்து வருகிறது என இத்தாலியப் புதல்வர் கூறினர். உங்கள் சரீரத்தில் எல்லாத்தேவர்களையும் பொருள்களையும் பெருமைகளையும் புலவர்களையும் பிரபஞ்சத்திலுள்ள எல்லாச் சீவர்களையும் காண்கிறேன் என அர்ச்சுனன் சொன்ன சொற்களையே மாஜினி, ஈசன் எங்கும் நிறைந்திருக்கிருர், அவர் ஐக்கிய நினைவே மனித சமூகமாகும்.ஒருநோக்கத்துக்குப்பல அங்கங்கள் இருப்பன போல் ஒருமையான ஈசனிலே உலகிலுள்ள எல்லா மனித சமூகங்களையும் பார்க்கிருேம்.

எல்லாப் பொருள்களையும் சமத்வ நினைவோடு நோக்கு என வாசுதேவ மகன் கூறியதையே உலகிலுள்ள எல்லா மக்களையும் ஒரு கண்ணேடு காண்பாயாக, என மாஜினி கூறினர். ஆன்மாவால் ஆன்மாவை எழுப்பு என்பது நீயே உன் கடமையைச் செய்து மேலேறுஎன மனிதர் கடமையில் மிளிர்கிறது.

1931-ம் வருடத்தில் பிரசுரமான 'மாஜினியும் மனிதர் கடமைகளும்' என்னும் நூல் ஆங்கிலம் அறியாத பல தேசத் தொண்டர்களுக்கு உற்சாகத்தையும் தேசியப்போராட்டத்தின் உண்மையையும் அறிவித்தது. அந்நூலால் பொய் நம்பிக்கைகளிலிருந்து பல தொண்டர்கள் பிரிந்து பாமர மக்களைக் கொள்ளையடித்த சுயநல மக்களின் உண்மையான சொரூபங்களை அறிந்தார்கள். உலகத்தில் இருப்பவர்களுக்குத் தொண்டு புரிவது தருமச்செயல் எனத் தெளிந்து 'மாஜினியும் மனிதர் கடமைகளும்' எனும் நூல் பகவத் கீதையின் புதிய உரை எனப் பலர் கருதினர்கள். இந்நூல் பறிமுதல் செய்யப்படுமோ என எண்ணிப் பல மாதங்கள் கலங்கினேன். ஆனல் வெள்ளையர்கள் மறந்துவிட்டார்கள் என்றுதான் தோன்றுகிறது. பல வருடங்களுக்கப்பால் ஸ்ரீ வே. சாமிநாத சர்மா அவர்களும் மனிதர் கடமைகளின் வேறு மொழிபெயர்ப்பை வெளியிட்டார். இப்பொழுது தமிழில் எந்தப் பதிப்புக்களும் இல்லை எனத் தோன்றுகிறது.

## வாழ்வின் கதை

—( ஞா. மாணிக்கவாசகன் )—

செல்லச் சிறுநகை சேயிழைச் சிறுமியர்
சிற்றில் சிதைப்பதுவும்—தாவும்
கிள்ளைக் குலமெனும் பிள்ளைக ளோடுடன்
கூடிக் குலவுவதும்.

செல்லச் சிறுக சென்று மறைந்திட
சிறியோர் பெரியோராய்—வளர்
பிள்ளைப் பருவம் மெல்லக் கழிந்திட
பேதை பெதும்பையராய்;

அள்ளிச் சொருகிடும் வாச மலரிதழ்
ஆடக் கூந்தலிலே—உயிர்
கிள்ளி எடுத்திடும் வாயிதழ் புன்னகை
மின்னும் பொலிவோடு,

கள்ளவிழ் நறுமலர் கானக் கொடியென
காட்சி தந்திடவே—அவர்
கொள்ளை வனப்பினில் கூடிக் களித்திட
குமரர் உறவாக,

கல்விக் கழகாமெனுங் கற்பில் காதல்
வாழ்வு நடத்துவதும்—தரும்
முல்லைக் காடென மொய்க்கும் பல்லிதழ்
முத்தம் பருகுவதும்

இல்லை யாமெனில் இல்லை வாழ்வென
எண்ணும் நாள்கழிய—அவர்
கொள்ளை வனப்பும் குமரப் பருவமும்
கழிந்த கனவாகும்!

முன்னைப் பழங்கதை மொய்க்கும் நினைவினில்
முதுமை திரைசூழ—வரும்
பின்னைப் புதுமை தன்னில் உறவாட
பிள்ளைகள் பலவாகும்.

பிஞ்சு காய்கனி ஆகிப் பெருமரம்
வளர்க்கும் வித்தீயும்—வித்தில்
எஞ்சிய ஒருமரம் எத்தனை வித்துக்கள்
ஈயும் கனிநல்கும்!

பிஞ்சு காய்கனி ஆனகதை பிரபஞ்ச
வாழ்வு மலர்ந்தகதை—பலர்
துஞ்சியும் முடியா நெடியகதை இது
வாழ்வின் பெரியகதை.

# சங்கீத வித்வ சபை அளித்த இன்னிசை விருந்து

இசைக் கச்சேரிகள் நடைபெறுமிடங்களிலே உயர்வு தாழ்வு பாராட்டுவதும் கலைஞர்களிடையே வேறுபாடு காட்டுவதும், சாதிமத வேற்றுமைகளைக் கையாள்வதும் அறவே வெறுத்தொதுக்கப்பட வேண்டியன. ஆண்டவன் படைப்பில் ஆண், பெண் என்ற இரண்டு சாதிகளைத் தவிர வேறு சாதி எதுவுமே கிடையாது. இவ்வேற்றுமைகளால்தான் நமது சமூகம் சீரழிந்து வருகின்றது.

கலைஞர்கள் ஒவ்வொருவரும் வித்வ செருக்கடையாது குறைந்த நிலையிலுள்ள பாடகர்களை முன்னுக்குக் கொண்டுவர முயலவேண்டும். இவ்வாறு மதுரை, திருஞானசம்பந்த மடாதீன ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் சங்கீத வித்வ சபையின் சார்பில் நடைபெற்ற இசை விழாவுக்கு அளித்த தமது ஆசி உரையிற் குறிப்பிட்டார்.

இவ்விழா சென்ற சனி, ஞாயிறு, திங்கள் (25, 26, 27-4-59)ஆகிய மூன்று நாட்களிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா, கலையரசு கே. சொர்ணலிங்கம், ரசிக ரஞ்சன சபாவின் முன்ஞள் தலைவர் திரு. து. சீனிவாசகம் ஆகியோர் மூன்று தினங்களும் நடைபெற்ற இவ்விழாவுக்கு முறையே தலைமை தாங்கினர். கலைஞர்களுக்கிடையில் உயர்வு தாழ்வு அகன்று ஒற்றுமை உரம்பெற வேண்டுமெனக் கலையரசு சொர்ணலிங்கம் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார். ஹரிஜன கலைஞர் ஒருவருக்குச் சங்கீத வித்வ சபை இடம் அளித்ததைப் பாராட்டிய யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகாந்தா அச்சபைக்குத் தன்னுலான உதவியையும் செய்வதாகத் தெரிவித்தார். ஒரு நாட்டின் கலைவளர்ச்சி மக்களின் ஊக்கத்தில் தங்கியிருக்கின்றதெனவும் பள்ளிக்கூடங்களிற்கூட அறிவுக் கலைகளுடன் கவின் கலையும் விருத்தி செய்வதற்கான முறையில் திட்டங்கள் வகுக்கப்பட்டிருப்பதாகவும் திரு. து. சீனிவாசகம் கூறினர்.

முதல் நாள் இசை நிகழ்ச்சிகள் இசைப் புலவர் திரு. ஸி. செல்லத்துரையின் பக்திப் பாடல்களுடன் ஆரம்பமாயின. மூன்று தினங்களும் இசை விருந்தளித்த கலைஞர்கள் இரசிகர்களைக் கான வெள்ளத்தில் மூழ்கச் செய்தனர்.

திரு. வி. சிவராஜா, திரு.கே. ஆர். நடராசா, திரு. ரி. இராஜலிங்கம், திரு. எஸ். கோவிந்தராஜன், புல்லாங்குழல் வித்துவான் ரி. யேசுதாசன், திரு. அல்வின் தேவசகாயம், திரு. எஸ். சோமசுந்தரம், திரு எஸ். சத்தியலிங்கம், முத்தமிழ்மணி மணிபாகவதர், திரு.எம். வர்ணகுலசிங்கம், செல்வி கமலா நாகமுத்து, திரு. ஏ. நடராசா, திரு. ஆர். மூர்த்தி ஐயர் திரு. எஸ். பரம் தில்லைராஜா ஆகிய இசைக் கலைஞர்கள் தமக்கே உரித்தான இசை ஞானத்தை அமுத கானமாக வாரிவழங்கினர் என்றே கூறவேண்டும்.

சங்கீத வித்வ சபையின் தலைவராக முத்தமிழ்மணி ஸி. எஸ். எஸ். மணிபாகவதரும் இணைச் செயலாளர்களாக திருவாளர்கள் எஸ். சோமசுந்தரமும், எஸ். வைத்தீஸ்வர ஐயரும் பணியாற்றுகின்றனர்.

இந்நாட்களில் அரசினர் விவசாய விருத்தியில் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றனர். அப்படியிருந்த போதிலும் புதிய முறைகளைக் கிராமத்திலுள்ள கமக்காரர்கள் கையாளப் பின்னிற்கின்றனர். விவசாயப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் கிராமந்தோறும் சென்று புதிய முறைகளைப்பற்றி பிரசாரம் செய்யவேண்டியது அவசியமாகின்றது. வடபகுதியில் வெங்காயச்செய்கை மேலும் விருத்தியுறுவதற்கான யோசனைகள் சில இக்கட்டுரையிற் கூறப்பட்டுள்ளன.

வடபகுதியில் விவசாயம்: 1

# வெங்காயச் செய்கை

## பழைய புதிய முறைகள்

கமக்காரன்

"சுழன்றும் ஏர்ப்பின்ன
துலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என வள்ளுவர் உழவின் சிறப்பை உலகுக்கு எடுத்தோதியுள்ளார். மெய் வருந்தக் கஷ்டப்பட்டு உழைக்க வேண்டிய துறை உழவுத்துறை. அப்படிப்பட்ட துறையில், கஷ்டம் விரும்பாத காரணத்தால் மனிதர் வேறு தொழில்களில் ஈடுபடக்கூடும். ஆனால், மனிதன் உணவின்றி வாழமுடியுமோ? ஆகையால், திரும்பவும் அவன் ஏர் பிடிக்கிறான்; விதை விதைக்கிறான்; அறுவடை செய்கிறான். இந்த ஏர் முனையைச் சுற்றியே உலகம் இயங்குகிறது.

இத்தனை மாண்புமிக்க தொழிலான உழவு அல்லது விவசாயம் யாழ்ப்பாணப் பகுதிகளில் எவ்விதம் நடக்கிறது; அதன் வளர்ச்சிக்கு எந்த எந்த வகைகளில் உதவலாம், யாழ்ப்பாண விவசாயியின் குறைகள் என்ன, அவைகளை எப்படி நிவிர்த்தி செய்யலாம்? இவை இந்நாட்களில் எழும் கேள்விகள். முதலாவதாக, யாழ்ப்பாணப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் முக்கிய உணவுப் பொருள்களில் ஒன்றான வெங்காயத்தை எடுத்துக்கொள்வோம்.

### முக்கிய பிரச்சினை

யாழ்ப்பாணத்திலுள்ள பல பகுதிகளில் இம்மாதங்களில் தான் வெங்காயச் செய்கை ஆரம்பமாகும். புகையிலைக்கு அடுத்ததாக யாழ்ப்பாண விவசாயி உற்பத்தி செய்யும் பயிர் வெங்காயமாகும். ஆனால், இலங்கையின் தேவைக்கு உள்நாட்டிலே விளைவிக்கப்படும் வெங்காயம் போதாததால், இலங்கை அரசாங்கம் இந்தியாவிலிருந்து வெங்காயம் பெருந்தொகையில் இறக்குமதி செய்கிறது. இந்திய வெங்காய இறக்குமதியைக் குறைப்பதாகவிருந்தால், நம்முடைய வெங்காய உற்பத்தி பெருகவேண்டும். வெங்காய உற்பத்தியை யாழ்ப்பாணப் பகுதிகளில் எவ்விதம் பெருக்கலாம் என்பது தான் முக்கிய பிரச்சினையாகும்.

இப் பிரச்சினைக்கு விடை இருக்கத்தான் செய்கிறது. வெங்காயச் செய்கைமுறை மாறவேண்டும். பழைய முறைகள் மறைய வேண்டும்; புதிய முறைகள் கையாளப்பட வேண்டும். பழைய முறையில் வெங்காயம் உற்பத்தி செய்வதை விடுத்துப் புதிய, நவீன முறையைக் கையாண்டால் வெங்காய உற்பத்தி பெருகுவதுடன், விவசாயிக்குப் பணமும் மிச்சமாகின்றது. பழையதுக்கும், புதியதிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? புதியது எப்படி உற்பத்தியைக் குறைந்த செலவில் பெருக்குகிறது என்பதை இனிப் பார்ப்போம்.

### பழைய முறை

பழைய முறையின்படி வெங்காயம் உற்பத்தியாக்கப்படும் விதத்தைக் கவனிப்போம். ஒரு விவசாயி, பழைய முறைப்படி 1,000 கன்று நிலம் அல்லது நாலு பரப்பு நிலத்தில் வெங்காயம் விதைக்கிறார் என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு இயற்கை எருவான சாணி, குப்பை, குழை முதலியன அந்நிலத்திற்குப் பசளையாகத் தேவைப்படுகிறது. இந்த எருவின் விலை மொத்தத்தில் ஏறக்குறைய 120 ரூபாய் ஆகும்.

அடுத்ததாக, அவருக்கு வேண்டியது விதை வெங்காயம். பழைய முறையின்படி விதை வெங்காயம் அதிகம் தேவைப்படும். அவர் கடைசி ஆறு அல்லது ஏழு அந்தர் விதை வெங்காயம் நடுவார். விதை வெங்காயம் அவருக்கு 150 ரூபாயளவில் செலவை உண்டாக்கும். மொத்தத்தில், பழைய முறையைக் கையாளும் ஒரு வெங்காய விவசாயிக்கு 270 ரூபாயளவில் செலவு ஏற்படும்.

### நவீன முறை

இனி, நவீன முறையில் வெங்காயம் செய்யும் விவசாயி ஒருவரை எடுத்துக்கொள்வோம். அவருக்கும் எருத் தேவைதான். ஆனால், அவர் இயற்கை எருவான குழை, குப்பை முதலியனவற்றை விரும்பவில்லை. குறைந்த விலையில், அதிலும் பார்க்கக்கூடிய உபயோகம் தரும் செயற்கை எருவையே அவர் விரும்புகிறார். இச்செயற்கை எரு, ரசாயனப் பொருட்களான ஸல்பேற் ஒப் அமோனியா (Sulphate of Ammonia) வும், சுப்பர் பொஸ் பேற்றும் (Super Phosphate) சேர்ந்த ஒரு கலவையாகும். நாலு பரப்பு நிலப்பயிர்ச் செய்கைக்கு ஸல்பேற் ஒவ் அமோனியாவில் 61 இருத்தலும், சுப்பர் பொஸ்பேற்றில் 22 இருத்தலும் வேண்டும். இச்செயற்கை எருவை 50 ரூபாய்க்குப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், இந்நவீனச் செய்கை முறைக்குத் தேவையான விதை வெங்காயம் $3\frac{1}{2}$ அல்லது 4 அந்தரே. இதன் விலை ஏறத்தாழ 100 ரூபாயாகும். ஆனால், புதுமுறைப்படி செய்யப்படும் வெங்காயப் பயிரின் விளைச்சல், பழைய முறைப்படி செய்தால் எவ்வளவு விளைச்சல் உண்டாகுமோ அவ்வளவுக்கு அல்லது அதனிலும் கூட உண்டாகும். பழைய முறையில் ஏற்படும் செலவை விடக் குறைவான செலவில் இப்படிச் செயற்கை எருவின் உபயோகம் மூலம் புதுமுறைச் செய்கை உற்பத்தியைப் பெருக்குகின்றது. இதனைப் பின் வரும் குறிப்புகள் விளக்கும்:

பழையமுறை: (4 பரப்புக்கு)
இயற்கை எரு — ரூ. 120-00
விதை வெங்காயம்
(6அல்லது7அந்தர்)—ரூ. 150-00
ரூ. 270-00

புதியமுறை:
செயற்கை எரு — ரூ. 50-00
விதை வெங்காயம்
($3\frac{1}{2}$அல்லது4அந்தர்) - ரூ.100-00
ரூ. 150-00

### அரசினர் பங்கு

இனி, அரசாங்கம் எவ்விதம் வெங்காயச் செய்கை வளர்ச்சி அடைவதற்கு உதவி புரியலாமென்பதை ஆராய்வோம். **முதலாவதாக,** அரசாங்கம் நவீன முறைச் செய்கையின் இலாபத்தைப் பற்றிக் கிராம விவசாயிகளுக்குத் தகுந்த பிரசாரம் செய்ய வேண்டும். இப்பிரசாரம் பொறுப்புணர்ச்சியுடனும், நன்னோக்கத்துடனும் செய்யப்படவேண்டும். பொருட்காட்சிகளிலோ அல்லது வேறு கண்காட்சிகளிலோ விவசாயிகளுக்குப் பிரசங்கங்கள் செய்தோ அல்லது பேசும் படங்களைக் காண்பித்தோ இப்பிரசாரத்தைச் செய்து முடித்து விட முடியாது. கிருஷிகப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் கிராமங்கள் தோறும் சென்று விவசாயிகளிடம் புதுச் செய்கை முறையின் உபயோகங்களையும், பயன்களையும் அவர்கள் விளங்கத்தக்க முறையில் எடுத்துரைக்க வேண்டும். அது மாத்திரமல்ல. ஒவ்வொரு கிராமத்திலும் இரண்டு அல்லது மூன்று இடங்களில், விவசாயிகளின் ஒத்துழைப்புடன் புதுமுறைச் செய்கையின்படி வெங்காயம் நடல் வேண்டும். இப்படிச் செய்தால், புது முறையின் இலாபத்தை விவசாய மக்கள் உணருவர். அதன் பின், தாமாகவே புது முறையைக் கையாள முற்படுவர். இந்நேரங்களிலும், அரசாங்கம் உதவி செய்தல் வேண்டும்.

**இரண்டாவதாக,** அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து வெங்காயத்தைத் தாமதமின்றி எடுத்துக்கொள்ளத் தக்க வசதிகள் செய்யவேண்டும். இந்த விஷயத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் உதவியாக உள்ளன என்பது உண்மையே. ஆனாலும், இச் சங்கங்களும் தாமதமின்றி விவசாயிகளிடமிருந்து உற்பத்தியைப்பெற்றுத் தம்மிடம் அனுப்பி வைக்கின்றனா, இல்லையா என்பதையும் அரசாங்க அதிகாரிகள் கவனித்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதால் அரசாங்கம் விவசாயிகளிடையே ஊக்கத்தையும், உற்பத்தியில் பெருக்கத்தையும் உண்டாக்கலாம்.

**மூன்றாவதாக,** அரசாங்கம் விவசாயிக்குப் பண உதவி பெருமளவிற் செய்யவேண்டும். இப்பொழுது, அரசாங்கம் ஒவ்வொரு மாவட்டத் தொகுதிக்கும் அங்குள்ள கிராமங்களுக்குப் பகிர்ந்து கொடுப்பதற்காக அங்குள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பணம் அளித்து வருகின்றது. ஆனால், இப் பணம் கிராம விவசாயிகளுக்கும் போதாது. இப்பொழுது அனுப்பும் தொகையை விட அதிகமாக அரசாங்கம் கூட்டுறவுச்சங்கங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

அரசாங்கம் முதல்தர வெங்காயத்தைக் கிராம விவசாயிகளிடமிருந்து உத்தரவாத விலைக்கு விளைபொருள் சங்கங்கள் மூலம் வாங்க உத்தேசித்துள்ளது. ஆகையினால், கிராம விவசாயிகள் தங்கள் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். இதற்கு அவர்கள் நவீனமுறையைக் கையாளவேண்டும். அரசாங்கத்திடமிருந்து அதிக இலாபம் பெறும் முறையில் அவர்கள் தங்கள் வெங்காயத்தைப் பயிரிட வேண்டும். இவ்விதம் அவர்கள் தங்கள் உற்பத்தியைப் பெருக்கி, புது முறைப்படி முதல்தர வெங்காயம் விளையும் வண்ணம் பயிரிட்டால் அரசாங்கம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்வதைப் பெரும்பாலும் குறைத்துவிடும். பின்னர் அது, உள்நாட்டு வெங்காயத்தையே நாடும். இதனால், அரசினரும் நன்மை அடைவார்கள்; விவசாயிகளும் நன்மை அடைவார்கள்.

---

### வானமண்டலம்

# வைகாசி மாதம்

எஸ். எஸ்.

**வைகாசிமீ 1வ** (15-5-59) வெள்ளிக்கிழமை இரவு 9 மணி வரையில் கீழ்த்தொடுவானத்தில் தனுராசி உதயமாகிக் கொண்டும் மேல் தொடுவானத்தில் மிதுனராசி அஸ்தமித்துக் கொண்டும் இருக்கும். அப்பொழுது கடகம், சிங்கம், கன்னி, துலாம். விருச்சிகம் என்னும் ராசிகளை மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிக் காணலாம்.

வடவானத்தில் துருவ மண்டலத்தில்(Ursa Minor)இருக்கும், துருவன் (Polaris) தோற்றிக் கொண்டிருக்கிறது. அதனைக் காக்கும் அசுரன் (Draco) உல்லாசமாக வீற்றிருக்கின்றான். இதற்குமேலாக ஸப்தரிஷிமண்டலம் (Ursa Major) காட்சியளிக்கிறது. இவ்விருமண்டலங்களுக்கும் இடையாக வீமன் (Hercules) தோற்றிவருதலைக் காணலாம். இதற்குக் கிழக்கே இடையன் (Bootis) எனப்படும் கூட்டம் அமைந்துளது. இதிலிருக்கும் நட்சத்திரமாகிய சுவாதி (Arcturus) செம்மஞ்சள் நிறமுடையது. இதற்குச் சிறிது மெற்காக அருந்ததி கூந்தற் (Coma Berinices) கூட்டம் அமைந்துளது. இக் கூட்டம் அனேகபுகைக்கோள (Nebulae) ங்களையுடையது. இதற்குக் கிழக்காக அரைவட்ட வடிவமுடைய கிரீடக் (Crown) கூட்டம் காணப்படுகிறது. கீழ் அடிவானத்துக்குச் சமீபமாக பாம்பாட்டி (Ophicus) பாம்புடன் (Serpent) தோற்றுவதைக் காணலாம். மேற்கே காட்சியளித்த பிரமமண்டல (Auriga) மும், நாய்க் (Lynx) கூட்டமும் மறைந்து விட்டன.

தென்வானத்தில் கிழக்கே உதயமாயிருக்கும் விருச்சிகராசி தேள்வடிவமுடையது. இத் தேளினது கொடுக்கிலிருப்பது, அனுஷநட்சத்திர (*Delta* Scorpionis) மாகும். இதற்குக் கிழக்காக கேட்டை நட்சத்திரம் (Antares) அமையப்பெற்றுளது. இது செந்நிற ஒளியைக் காலுவது. இத்தேளின் வாலில் இருக்கும் நட்சத்திரம் மூலம் (Scorpie) எனப்படும். விருச்சிகத்திற்கு மேற்கே துலாத்திலிருக்கும் விசாக நட்சத்திரம் (*Alpha* Librae) யாவரும் அவதானிக்கத்தக்க நிலையில் அமைந்துளது. துலாத்திற்கும் சிங்கத்திற்கும் நடுவாக இருக்கும் கன்னிராசியில் இருப்பது சித்திரை (Spica) நட்சத்திரமாகும். இது அதிக பிரபையுடையது. தென் வானத்தில் தெற்கே நீர்ப்பாம்பு (Hydra) துலாராசியின் கீழிருந்து கடகராசியின் அடிப்பாகம் வரை அமைந்திருக்கிறது. இதற்கு மேலாக தென்கிழக்கில் அமைந்திருக்கும் காகம்(Corvus) ஐந்து நட்சத்திரங்களைக் கொண்டது. இதில் நாலு சதுர வடிவுடைய தாய் நீர்ப்பாம்பின் முதுகுக்கு மேலாகவும், மற்றையது கீழாகவும் அமையப் பெற்றிருப்பனவாகும். இதனால் இது அத்தம் (*Delta* Corvi) என்று அழைக்கப்படலாயிற்று.

நீர்ப்பாம்பிற்குத் தென்கிழக்காக மகுடாசுரக் (Centarus) கூட்டமும், அதற்குச் சமீபமாக ஓநாய் (Lupus) க் கூட்டமும் அமைந்திருக்கின்றன. தெற்கே தென்சிலுவை (Crux) க் கூட்டம் காணப்படுகிறது. இதற்கு மேற்காக கப்பற் (Argonavis) கூட்டம் மேற்கு நோக்கிச் செல்வதைக் காணலாம். இதிலிருக்கும் அகஸ்தியர் (Canopus) நட்சத்திரம் மிக்க பிரபையுடையதாகும். தென்மேற்கேயிருக்கும் சிறு நாய் (Canis Minor) க் கூட்டமும் பெருநாய் (Canis Major) க் கூட்டமும் அஸ்தமிக்கப் போவதைக் காணலாம்.

இம்மாதம் ஆகாய கங்கை வடகிழக்குமுதல் தென்மேற்கு வரை வில்லைப்போல் வளைந்து அடிவானத்துக்குச் சமீபமாக இருத்தலைக் காணலாம்.

நட்சத்திரங்கள் முதனாளிலும் மறுநாள் ஏறக்குறைய 4 நிமிஷம் முந்தி உதயமாவதால் இம்மாதம் 15வ இரவு 8 மணிக்கும் 30வ இரவு 7 மணிக்கும் ஏறக்குறைய அதே இடங்களில் மேற்கூறிய நட்சத்திர கூட்டங்களைக் காணலாம்.

கருத்தரங்கம்

# சம அந்தஸ்து ஒரு 'மாயமான்' சமஷ்டி ஆட்சியே சாலச் சிறந்தது

— ச. முருகேசு, மட்டக்களப்பு —

ஈழநாடு *25-4-59* இதழில் "தனித்தமிழ் நாடே சமஷ்டியிற் சிறந்தது" என்ற தலைப்புடன் அன்பர் ஒருவர் எழுதியிருந்தார். சமஷ்டி ஆட்சி முறை இந்நாட்டில் வாழும் இரு பெரும்பான்மை மக்களையும் ஒற்றுமையுடனும், ஐக்கியத்துடனும் வாழவைப்பதற்குச் சிறந்தவழி. அதை விடுத்து, "தனித் தமிழ் நாடென்றும்", "ஐக்கிய இலங்கை" என்றும், நமது தமிழ்த் தலைவர்கள் கொள்கையாகக் கொண்டு தமிழ் பேசும் மக்களிடம் ஆதரவும், செல்வாக்கும், பெறுவதற்காகப் பிரசாரம் செய்யலாமே தவிர, நாட்டு மக்கள் அமைதியுடன் வாழ ஒரு போதும் முடியாது.

சமஷ்டிக்குட்பட்ட தமிழகத்திலே, ஒன்றுபட்டு இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் வாழமுடியும்."வெள்ளவத்தையும், பம்பலப்பிட்டியும், ரத்மலானையும், கொள்ளுப்பிட்டியும், கலகக்காரர்களால் தாக்கப்படாமல் இருந்திருக்கவேண்டும்" "அப்படி அவ்விடங்கள் தப்பி இருக்குமானால் இலங்கைக்குச் சமஷ்டிக் கொள்கை சிறந்ததென்று ஆதரவு நல்குவார்கள் தமிழர்கள்" என எழுதியிருக்கிறார் அன்பர்.

### தவறான வாதம்

பிரதேச இன மொழியாகக் கூடி வாழும் கூட்டாட்சியாகிய, சமஷ்டி ஆட்சி முறை கூடாது எனத் தெரிவிப்பவர் மேற்காட்டிய உதாரணத்தைச் சான்றாகக் கொண்டு, சமஷ்டி கூடாது என வாதிப்பது தவறு.

கலகக்காரர்கள் மேலே குறிப்பிட்ட இடங்களைத்தாக்காமல் இருந்திருந்தால் "சமஷ்டி" இந்நாட்டிற்குப் பொருத்தம் என்பதுதான், நண்பரின் கருத்து. "சமஷ்டிக்குட்பட்ட தமிழ்நாடு" என்றால் மலைநாட்டுப் பத்து லட்சம் தமிழர்கள் வாழும் பகுதியும், நீர்கொழும்பும், சிலாபமும், வெள்ளவத்தையும், பம்பலப்பிட்டியும், இரத்மலானையும், கொள்ளுப்பிட்டியும் சமஷ்டிக்குட்பட்டாகத்தான் வேண்டுமே? சுற்றிவரச் சுயநல மனப்பான்மைக் கூட்டம் இருக்கும்போது எப்படிச் சமஷ்டிக்குட்பட்ட நாடு வளரமுடியும்?" எனக்கேட்கிறார். மேற்காட்டிய தமிழர்கள் வாழும் பகுதிகள் சமஷ்டி ஆட்சிக்குள் வந்தபின் காடையர்களுக்கும், கலகக்காரர்களுக்கும் நாம் அஞ்சி நடக்கவேண்டிய அவசியம் ஏற்படாது என்பது எனது எண்ணம்.

### தற்கொலைக்குச் சமம்

அன்பரின் வெறுப்பு சுயநல மனப்பான்மைகொண்ட கலகக்காரர்களிடத்தில் தானேதவிர, சமஷ்டி ஆட்சியின் மேல் அல்ல என்பது புலனாகிறது. சமஷ்டி என்று சொல்லப்படும் கூட்டாட்சியில் மேற்கண்டுள்ள தமிழ்ப் பிரதேசங்களில் தமிழர்கள் நிம்மதியுடன் வாழ முடியாதெனக் கருதும் அன்பர், தனித்தமிழ்நாடே சமஷ்டியிற் சிறந்தது எனக்கருதுவது தற்கொலைக்கு ஒப்பாகும்.

தனித்தமிழ்நாடு ஏற்பட்டால் மலைநாட்டு மக்களும், நீர்கொழும்பு, சிலாபம், வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி, இரத்மலானை போன்ற பகுதிகளில் வாழும் மக்களையும், தனித்தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்து விடுவதா? அல்லது அவர்கள் அப்பகுதிகளிலே வாழுவதா? என்பதை அக்கட்டுரை விளக்கவில்லை.

### ஒற்றுமை வேண்டும்

தமிழ் மக்கள், அரசியல் உரிமையுடன் சிங்களவர்களோடு சரிசமமாக வாழுவதற்கு, தமிழ்த் தலைவர்களிடையே ஒற்றுமை வேண்டும். சம அந்தஸ்து என்றும் கிடைக்காது என்பது திண்ணமாகிவிட்டது. எனினும், அந்த "சம அந்தஸ்து" என்னும் 'மாயமானை, நம் தலைவர்களில் சிலர் விட்டபாடில்லை. உலகம் முழுவதிலும் பல இன மொழி மக்கள் ஒற்றுமையுடனும் ஐக்கியத்துடனும், சகல உரிமைகளும். பெற்று வாழ்வதற்குச் சகல அம்சங்களும் நிறைந்துள்ள சமஷ்டி ஆட்சி முறைதான் சிறந்ததாக விளங்குகிறது. இவ்வழியிலே தமிழ்த் தலைவர்கள் ஒற்றுமையுடன் போராடினால் தமிழினத்திற்குச் சுபிட்சமுண்டு. சுதந்திரமுண்டு. இந்தப் புனிதமான அரசியல் திட்டம் வேண்டாம்; தனித் தமிழ்நாடு வேண்டும் எனக்கோஷம் எழுப்புகிறார்கள். தனித் தமிழ்நாடு கேட்பதோ சமஷ்டி ஆட்சி கோருவதோ வகுப்பு வாதம்,குறுகிய மனப்பான்மை, இனவெறி, இது கூடவே கூடாது, ஐக்கிய இலங்கை தான் வேண்டும் என முற்போக்கு வாதிகள் முழங்குகிறார்கள். இந்நிலையில் தமிழினத்தின் கதி என்ன?

### ஏற்றவழி எது?

"ஐக்கிய இலங்கையா?" "சமஷ்டியா?" "தனித் தமிழ் நாடா?" என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி? ஐக்கிய இலங்கை என்ற வார்த்தை மிக மிக அழகான வார்த்தை. இந்த ஐக்கியம் என்ற கோட்டைக்குள் எமது தமிழ்த் தலைவர்கள் பல வருடங்கள் பதவியேற்றுப் பண்புடன் வாழ்ந்தகாலத்தில்தான் தமிழ்ப் பிரதேசங்களிலே திட்டமிட்ட குடியேற்றங்கள் அதி தீவிரமாக நடாத்தப்பட்டன. அக் குடியேற்றங்கள் நாளடைவில், அதிகரித்து தமிழ்மக்கள் வாழும் பிரதேசமாகிய கிழக்கு மாகாணம் முழுவதும் சிங்களமயமாக்கிவிட்டது. இக் குடியேற்றம் தொடர்ந்து நடைபெறுமானால், நீர்வளமும், நிலவளமும் செழித்துச் சீர்பெற்றுவிளங்கும் கிழக்கு மாகாணம், சிங்கள நாடாகிவிடும். இதை உணராத சில சர்வதேசியவாதிகள் எதிர்பார்க்கும் "ஐக்கிய இலங்கை" தமிழ் மக்களை நிரந்தர அடிமைகளாக்கும் பலி பீடம் என்பதே எமது எண்ணம்.

### ஒரு பெரிய அபாயம்

இக் குடியேற்றத் திட்டத்தால், கிழக்குமாகாணத் தமிழ் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அபாயம் நிறைந்த இந்தக் குடியேற்றத்தைத் தடுக்க ஐக்கிய இலங்கையை உருவாக்க எண்ணும் சமசமாஜிகளோ, கம்யூனிஸ்டுகளோ இதுகாலம் வரை முன்வரவில்லை. நாம் சமஷ்டி பெற்றாலும்சரி, சம அந்தஸ்துப் பெற்றாலும்சரி, தனித் தமிழ்நாடு பெற்றாலும் சரி முதலில் குடியேற்றத்தைத் தடுக்க முயலவேண்டும். அதன் பின் தமிழ்மக்கள் எதைத் தேர்ந்தெடுத்தாலும் சுபிட்சமும் சுதந்திரமும் நிறைந்ததாக இருக்க முடியும். எனினும் ஐக்கிய இலங்கை என்ற அபாயமான வார்த்தைகளை, தமிழ் மக்கள் வாயாலும் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லுவதும், அவ் வழியைப் பின்பற்றுவதும் தமிழ்மக்களை நிரந்தர அடிமைகளாக்க வழிவகுக்கும் என்பது மறுக்கமுடியாத தொன்று.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் சம உரிமை கேட்கும் தலைவர்களும், தனித் தமிழ்நாடு கேட்கும் தலைவர்களும், சமஷ்டி கேட்கும் தலைவர்களும் ஒன்று சேர்ந்து கூட்டுறவாகி ஒரே வழியில் சமஷ்டித்திட்டத்தை முன்வைத்துப் போராடினால், கண்டிப்பாக சமஷ்டிக்குட்பட்ட தமிழ்நாடு பெறமுடியும். இலங்கைவாழ் மக்கள் சுதந்திரமாகச் சகல உரிமைகளும் பெற்று வாழ வழிவகுக்கும். சமஷ்டிக்குட்பட்ட தமிழகம் கிடைக்காதுபோனால், தனித் தமிழ்நாடு கோருவதே உயர்ந்தது; சிறந்தது; புனிதமானது எனினும் இந் நாட்டைப் பொறுத்தமட்டில் சமஷ்டி ஆட்சிமுறையே சாலச் சிறந்தது.

# தமிழினத்தின் எதிர்காலம்
## சமசமாஜிகளை நம்புவது எப்படி?
### கோப்பாய் பிரதிநிதி கூற்று

அச்செழு சனசமூக நிலையத்தின் எட்டாவதுஆண்டு நிறைவு விழா சென்ற திங்கட்கிழமை இரவுநடைபெற்றது. தமிழரசுக் கட்சி, சமசமாஜக்கட்சி, கொம்யூனிஸ்ட்கட்சிப் பிரமுகர்கள் இவ்விழாவிற் பங்குபற்றி விரிவுரைகள் ஆற்றினர். அகில இலங்கை ஆசிரியர் சமாஜத்தின் முன்னாள் அதிபர் திரு. ஏ.எஸ்.கனகரத்தினம் தலைமை வகித்தார். தலைவர் பேசும் போது சனசமூக நிலையங்கள் செய்யவேண்டிய சிறந்த பணிகளை எடுத்துரைத்தார்.

இலங்கைத் தமிழரின் எதிர்காலம் பற்றி திரு. வன்னியசிங்கம் எம். பி. பேசுகையிற் குறிப்பிட்டதாவது.

சமசமாஜக் கட்சியினர் ஈழ நாட்டின் எதிர்காலத்தைப் பற்றி விசித்திரமாக எண்ணி வருகின்றனர். காலப் போக்கில் இங்கே தமிழர் என்றொரு இனம் வாழப்போவதில்லையென்பதும், தமிழ்மொழி அழிந்து போய்விடுமென்பதும் அக்கட்சிப் பிரமுகர்களில் தலைசிறந்து விளங்கும் டாக்டர் கொல்வின் ஆர்.டி.சில்வா அவர்களின் அழுத்தந்திருத்தமான கருத்தாகும். இத்தகைய அரசியற் கட்சியைச் சுயமரியாதையுள்ள எந்தத் தமிழன்தான் நம்பி வாழமுடியும்.

தொகுதி நிர்ணயம் பற்றித் திரு. வன்னியசிங்கம் குறிப்பிட்டதாவது:- முப்பதினாயிரம் பறங்கிக்காரரின் அரசியல் முன்னேற்றத்தில் அதிக கவனஞ் செலுத்தி வரும் எதிர்க் கட்சித் தலைவர் என். எம். பெரேரா அவர்கள் இலங்கையின் வருமானத்தைப் பெருக்கக் கஷ்டப்பட்டு உழைக்கும் மலைநாட்டுத் தமிழரின் சுபிட்சத்தில் எவ்வித கவனஞ்செலுத்துகிறார் தெரியுமா? அவர்கள் நாலு பாராளுமன்ற அங்கத்தவர்களை தெரிவு செய்ய அதிகாரிகள் சித்தங்கொண்டிருக்கையில் அதற்கு டாக்டர் பெரேரா ஆட்சேபனை தெரிவித்தார். ஏறத்தாழ ஒரு லட்சம் மலைநாட்டுத் தமிழர் பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசைகளாயிருக்கின்றனர் என்பதை நாம் மறந்து போகக் கூடாது. தமிழ் இனம் தனது பெயரையே இழந்துவிடுவதை விரும்பும் அரசியற் கட்சியை நாம் எப்படி நம்பி வாழ்வது?

### வகுப்பு வாதம்

சமசமாஜக் கட்சிப் பிரமுகராகிய திரு. ஆர். ஆர். தர்மரத்தினம் பேசியதாவது:- ஏறக்குறைய முப்பது வருடங்களுக்குமுன் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் நாட்டின் பெருஞ்சாகியத்தினரிடையே வகுப்பு வாதத்தை உண்டாக்கி வைத்தார். அந்தக் கொள்கையை சமஷ்டிக்கட்சி ஆதரித்து வருவதால், தமிழ் மக்களுக்குப் பல இன்னல்கள் ஏற்படுகின்றன. இரண்டு தேசிய மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு தொழிலாளர்கள் அரசாங்கம் அமைக்கப்பட்டால் நாட்டின் பொருளாதார விருத்தி துரிதப்படுவதற்கான வழிவகைகள் கையாளப்படுவதற்கு ஏதுவாகும் இதுவே எங்கள் கட்சியின் நோக்கம்.தேசிய ஒற்றுமையையே நாம் விரும்புகிறோம்.

கொம்யூனிஸ்ட் இளைஞர் முன்னணிச் சம்மேளனத்தின் தலைவரான திரு. வி. பொன்னம்பலம் கூறியதவாது:- அதிகாரிகள் நேர்மையுடன் சித்தங் கொண்டால், எத்தகைய பிரச்சினையும் தீர வழியுண்டு. சோஷலிச அடிப்படையில் ஜனநாயக அரசியல் நடைபெறும் தேசங்களில் பல்வேறு சமுதாயங்களும் ஒற்றுமையாய் வாழ்கின்றன. எனவே, அபிவிருத்திக் கைங்கரியங்கள் அங்கே கைகூடுவது நூதனமல்ல.

மேதின விழா

# சமரச மனப்பான்மை மக்களுக்கு மிக அவசியம்

யாழ்ப்பாணம்.

'நிதிமந்திரியும் சுகாதார மந்திரியும் இம்மாத நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருவார்கள். அவர்களை நாம் வரவேற்பதுடன் விருந்து வைபவமும் நடாத்தத் தீர்மானித்திருக்கிறோம். அவ்வேளையில் தமிழரசுக் கட்சிக்காரர்கள் தைரியமிருந்தால் மந்திரிகளுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை நடாத்திப்பார்க்கட்டும்' எனச் சமசமாசக் கட்சிச்சார்பில் நடைபெற்ற மேதினக் கூட்டத்தில் பேசிய சுகாதாரப்பகுதித் தொழிலாளர் சங்கப் பிரசாரக் காரியதரிசி திரு. எஸ். ஆர். அருமைநாயகம் தெரிவித்தார்.

நல்லூரிலிருந்து செஞ்சட்டை தரித்த சமசமாசக் கட்சியினர் ஊர்வலமாகக் கூட்டம் நடைபெற்ற இடமாகிய புதிய பஸ் நிலையத்தை அடைந்தனர். திரு. ஒஸ்மன்ட் ஜயரெத்தின பேசும்போது தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமத்துவமளிக்கப்படவேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தினர்.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தோட்டத்தில் நடைபெற்ற சம்பவத்தால் தோட்டத் தொழிலாளருக்காகத் தமிழரசுக்கட்சி போலிக் கண்ணீர் வடிக்கிறதென்பது நன்கு விளங்குகிறதென முன்னாள் செனட்டர் திரு. பி. நாகலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. ஏ. ஆர், பானுதேவன், சுளிபுரம் சமசமாஜ வாலிபர் சங்கத் தலைவர் திரு. எஸ். பெரியதம்பி, திரு. அ. விசுவநாதன், எஸ். சுவாமிநாதன், ஏ. துரைராசசிங்கம் ஆகியோரும் பேசினர். திரு. ஈ. இராமசாமி இவ்விழாவுக்குத் தலைமை வகித்தார்.

### ஆசிரியர் சங்கம்

வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கமும் வடமாகாண ஆசிரியர் சங்கமும் சேர்ந்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடாத்திய மே தின விழாவுக்கு ஆசிரியர் திரு. ஏ. வைத்திலிங்கம் தலைமை தாங்கினர். செனட்டர் ஏ. டீ. ஜெயசேகரா ஆற்றிய விரிவுரையின் சாரம் வருமாறு:

புதிய இலங்கையை உருவாக்குமிக்காலத்து நாம் சமரச மனப்பான்மையுடன் வாழ வேண்டும். இதற்கு வழிவகுத்தல் ஆசிரியர்களின் முக்கிய கடமையாகும். ஆசிரியர்கள் தத்தமக்கெனக் கட்சிகளை உண்டாக்குவது தவறு. மாற்றங்கள் உண்டாகும்போது ஆங்கில ஆசிரியர், தமிழ் ஆசிரியர் என்ற வித்தியாசம் காணமுடியாது. அரசியற் கட்சிகளை இதுவிஷயத்தில் நம்பவேண்டாம். நாம் விரும்பினாலும் சரி, விரும்பாவிடினும் சரி உலகம் முன்னேறிக்கொண்டே வருகிறது. இனமத பேதமின்றி மனிதன் என்ற முறையில் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் அவசியம். சேவை மனப்பான்மைகொண்ட சமுதாயத்தை உண்டாக்கவேண்டுமேயானால் முதலில் மனவேற்றுமைகளை அகற்றிவிடல் வேண்டும்.

(15ஆம் பக்கம் பார்க்க)

# இனவேற்றுமை ஏற்றதன்று
## குன்றக்குடி அடிகளார் கருத்து

ஈழநாட்டின் எதிர்காலத்துக்கு இன, வகுப்பு வேற்றுமைகள் உகந்தனவல்ல; இவற்றை மறந்து ஈழத்து மக்கள் ஓர் இனத்தவராய் நட்புறவுடன் வாழ முயலவேண்டுமென ஈழநாட்டிற் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு *2-5-59* இல் விமானமூலம் திருச்சிக்குப் பயணமான தவப் பெருந்திரு குன்றக்குடி அடிகளார் ஈழநாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியிற் கூறியுள்ளார். அவர் தொடர்ந்து கூறுவதாவது:—

ஈழநாட்டின் இன்றைய சமயச் சூழ்நிலை அருள்நெறி இயக்கத்துக்கு ஏற்றாற்போல உருவாகிக்கொண்டு வருகிறது. நல்ல தமிழ் ஆர்வத்துடன் திருமுறைகளைப் பேணிச் சித்தாந்தச் செந்நெறியை வளர்க்க வேண்டுமென்ற உணர்ச்சி நன்றாக வளர்ந்துள்ளது. சைவ நன்மக்கள் குடியேறியுள்ள பகுதிகளில் வாழ்ந்துவருகின்ற தமிழ் மக்களிடையே சைவசீலத்தைவளர்ப்பதற்குரிய திருத்தொண்டுகளைச் செய்யவேண்டுமென்பது எமது விருப்பம்.

ஈழத்துவாழ் மக்களிடையே அன்பு பெருகி, அறம் வளர்ந்து, எல்லா நன்மைகளும் அமைந்து இன்பப் பெருவாழ்வுவாழத் திருவருளை நினைத்து வாழ்த்துகின்றோம்.

# ஈழநாடு

யாழ்ப்பாணம், விகாரி ஆண்டு சித்திரை மீ 26 உ (9-5-59)

## மனித உரிமை மகாநாடு

இப்போது பேராதனையில் நடைபெறும் ஐ. நா. மனித உரிமைக் கமிஷன் மகாநாடு, இந்நாட்டிலே அவ்வித உரிமைகளின்றித் தவிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு, அவ்வுரிமைகள் கிடைக்க வழி செய்ய உதவுமென்றே நம்புகிருேம்.

பிரதமமந்திரி பண்டாரநாயக்கா அம் மகாநாட்டைத் திறந்துவைத்துப் பேசுகையில், மனித உரிமைகள் கால தேச வர்த்தமானங்களுக்கு ஒப்ப மாறுபாடு உடையனவென்றும், அவற்றைத் திட்டவட்டமாக வரையறுக்க முடியாதென்றும் சொன்னுர். இலங்கையிலே பலருக்கு அரசியல் முதலிய உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளதை மனத்தில் வைத்து, அதற்குச் சமாதானம் கூறும் பாணியிலேயே அவர் இவ்விதம் கூறினுரோ தெரியவில்லை.

இது எப்படியாயினும், ஒவ்வொரு மனிதரும் சுதந்திரமாகப் பிறந்தவர்; அவர்களுக்குச் சில அடிப்படை உரிமைகள் உண்டு; அவற்றை மறுக்கமுடியாது என்றும், மறுத்தால்உலக சமாதானம் பங்கமடையுமென்றும், அரசியல் ஞானிகள் உணர்ந்தே,மனித உரிமைக் கமிஷனை நியமித்து அதுபற்றி ஆங்காங்கே மகாநாடுகள் நடத்தி, சமாதானத்தைப் பலப்படுத்த முற்பட்டுள்ளனர்.

உலகிலே சமாதானத்துக்கு பங்கம் ஏற்படுவதற்கு என்ன காரணம்? அரசியல், சமூக, பொருளாதார, சமய அநீதிகளே என்றும், அவ்வநீதிகளைக் கண்டறிந்து அவற்றை நீக்கினுல்தான் சமாதானம் பலப்படும் என்றும் வர வர அதிகமாக உணரப்படுகிறது. சின்ன நாடான இலங்கையிலும் இன்று உண்மையான அமைதி இல்லை. இதற்கான காரணங்களைப்பற்றி நிதானமாக ஆராய்ந்தால், மேற்குறித்த அநீதிகள்தான் என்பது விளங்கும்.

இதைப்பற்றிச் சற்றே கவனிப்போம். ஜனநாயகமென்ற பெயரில் இங்கு நடைபெறும் ஆட்சியிலே தமிழ்பேசும்மக்களுக்குப் பங்கு இல்லை. 15 மந்திரிகளுள்ள சபையில், ஒரு தமிழரும் கிடையாது. தமிழரின் சம்மதமோ, ஒத்துழைப்போ இல்லாமல், பெரும்பான்மைச் சமூக ஆட்சி நடைபெறுகிறது.

சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியிருக்க, பிரதமர் அடிக்கடி பெரும்பான்மைச் சமூகத்தின் உரிமைகளையும் அவற்றை முதலிற் பாதுகாக்கவேண்டிய அவசியத்தையும்பற்றியே வாய்விட்டுக் கூறுகிருர்! அவற்றைப் பாதுகாத்துக்கொண்டு, பிறகு சிறுபான்மையோரின் "நியாயமான உரிமை"களைப் பாதுகாக்கலாம் என்கிருர். எது நியாயம் எது நியாயமல்ல என்பதை நிர்ணயிக்கும் அதிகாரமும்உரிமையும் பெரும்பான்மையோருக்குத்தான் போலும். இதுவே ஜனநாயகமாயின் அது பெரும்பான்மைச்சமூகம், சிறுபான்மைச் சமூகங்கள்மீது நிரந்தரமான ஆட்சி செய்வதாகவே இருக்கும். இதைத்தான் இங்கு தமிழரும் சிறுபான்மைச் சமூகங்களும் ஆட்சேபிக்கிருர்கள். தங்களுக்குச் சரிசமமான அரசியல் உரிமை வேண்டுமென்று துடிக்கிருர்கள். பிரதமர் பண்டாரநாயக்கா,ஒருதமிழராகவே பிறந்திருந்தால் தமிழரின் உணர்ச்சிகளை அதிக சுலபமாக உணர்ந்து, அந்த அநீதிகளை நீக்க தீவிர நடவடிக்கைகளையும் எடுத்திருப்பார்.

இதேசமயம் மலைநாட்டிலே ஏறத்தாழ பத்துலட்சம் மக்களின் வாக்குரிமையும், அரசியல் உரிமைகளும், ஜனநாயகத்தின் பெயரால் பறிக்கப்பட்டுள்ளன. இதன்பயனுக அப்பகுதியிலும் அமைதியில்லாமலுள்ளது. தீவிலே வேலையில்லாமல் ஜீவனத்துக்குத் தயங்கும் குடும்பங்கள் பல. தீண்டாமை என்னும் சமூக அநீதியால் மனம் புழுங்குவோர் ஏராளம். இவ்வித அநீதிகளை நீக்கத்தக்க வழிவகை செய்யாதவரை இங்கு உண்மை அமைதி ஏற்படவோ, நாடு முன்னேறவோ முடியாமற்போகும்.

ஆனுல் இவையெல்லாம் "அநீதிகள்" என்றே நம்மில் பலர் உணராமலிருக்கிருேம். சிலர் கர்மபலன் என்றும், அதனுல்தான் பலர் ஏழைகளாகப் பிறந்தார்கள் என்றும் பொய் வேதாந்தம் பேசலாம். ஜனநாயகமென்பது பெரும்பான்மையோர் ஆட்சி என்றும் கூறி, சிறு பான்மையோரைத் தங்கள் இஷ்டப்படி ஆட்டிவைக்க உரிமை உண்டென்றும் வாதிக்கலாம். ஆனுல் இவ்வித மனப்பான்மை உண்மை அமைதியை ஏற்படுத்த உதவாது.

"தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அளித்திடுப்வோம்'' என்றும், ''ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை சாதியில், இழிவு கொண்ட மனிதரென்போர் இந்தியாவில் இல்லையே" என்றும், "எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்றும் அமரகவி பாடியது மனிதரின் பொருளாதார, சமூக, அரசியல் அடிப்படை உரிமைகளை வற்புறுத்தவே. இதில் அரசாங்கத்துக்கே முக்கிய கடமை என்ருலும், நம் ஒவ்வொருவருக்கும் இதில் பொறுப்பும் கடமையுமுண்டு. இதை நாம் உணர்ந்து, இவ்வுரிமைகளை மற்றவர்களுக்கு வழங்க எவ்வளவுதூரம் முற்படுகின்ருேமோ அவ்வளவும் எம் கஷ்டம் தீர உதவும்.

கண்டியில் நடைபெறும் மனித உரிமை மகாநாடு இங்கு ஆட்சியாளரின் கண்களைத் திறந்துவிட்டுப்பழைய குறுகிய எண்ணங்களை நீக்கி, விரிந்த மனத்துடன்,அன்பு அடிப்படையிலே காரியத்தைச் செய்ய ஓரளவாவது தூண்டுவதாக இருக்குமாயின் அது நமக்கும், நம் நாட்டுக்கும், உலகுக்கும் நன்மையாகும்.

## தமிழ்ப்பல்கலைக்கழகம்

திருமலையிலே இவ்வாரம் நடைபெற்ற தமிழ் சர்வகலாசாலை ஆரம்பவிழா தமிழ் பேசும் மக்களின் சரித்திரத்தில் பொன்னெழுத்தாற் பொறிக்கப்படவேண்டிய சம்பவமாகும். தெய்வீகத் தமிழ் மொழியை வீழ்த்திவிட, சில அரசியற் குடுக்கைகள் முற்பட்டதும் தமிழ்ச்சமூகம் கண் விழித்து இப்பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க ஆர்வத்துடன் முன்வந்தது. நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பர். அந்த விதத்திற் பார்த்தால், சென்ற மே மாதக் கலவரமும், தமிழருக்கு நிரந்தர நன்மை அளிக்கக்கூடிய ஒரு புதிய சர்வகலாசாலையை அமைக்க உதவியுள்ளது.

எதையும் ஆரம்பிப்பது சுலபம்; நீடித்து நடத்துவதென்பது பெரிய காரியம். அதிலும் ஒரு சர்வகலாசாலையை, வெற்றிகரமாக நடத்துவதற்கு இடம், பொருள், ஏவல் எல்லாம் அதிகம் வேண்டும். தமிழ் பேசும் சமுகம் இந்நாட்டில் சிறியதாயினும் இவ்வித சர்வகலாசாலை நடத்துவதற்கான வசதிகள் அவர்களிடம் இல்லாமலில்லை. தமிழ்மக்கள் ஒவ்வொருவரும் கூடுமான தியாகத்தைச் செய்து இதற்கு உதவ முன்வருவது, அவர்கள் தங்களுக்கும் தங்கள் எதிர்கால சந்ததிக்கும் செய்து கொள்ளும் மேலான நன்மையாகும்.

இப்பல்கலைக் கழகத்தின் நிர்வாகிகள் இரு முக்கிய விஷயங்களைக் கவனத்தில் இருத்த வேண்டும். ஒன்று, குறுகிய வகுப்புவாத எண்ணங்களுக்கு இடம் தராமல் பரந்த முறையில் இதை அமைத்து நடத்த வேண்டும். மற்றென்று, மாணவ மாணவிகளை வெறும் புத்தகப் பூச்சிகளாக்கி விடாமல், பி. ஏ., எம். ஏ. பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையாக இல்லாமல், மக்களுக்கு வாழ்க்கையில் பயன் படக்கூடிய தொழில் முதலிய கல்வியை இக்காலத்துக்குத் தேவையான முறையில் கற்பிக்க வழிவகுக்க வேண்டும். உலக மொழியான ஆங்கிலத்தைப் புறக்கணிக்க வேண்டியதில்லை.

அரசாங்கத்துக்கும் இவ்விஷயத்தில் அதிக பொறுப்பு உண்டு. சமீபத்தில் இரு பிரிவீணு பல்கலைக் கழகங்களை அமைத்து பௌத்த சிங்களக் கல்விக்கு ஆக்கமளித்திருக்கையில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தை அங்கீகரித்து உதவ அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது. இலங்கையைவிடச் சிறிய நாடான ஸ்விட்ஸர்லாந்தில் ஏழு பல்கலைக்கழகங்கள் உள்ளன. ஆகவே இப்புதிய தமிழ்ப் பல்கலைக்கழகம் அதிகமென்ருே அவசியமற்றதென்ருே கூற முடியாது. இதற்கு மாருக, இப்பல்கலைக் கழகத்தை அங்கீகரித்து அதை பலப்படுத்துவதின் மூலம் அரசாங்கம் தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெறவும் சமூக ஒற்றுமை பலப்படவும் வழி செய்யும்.

## ஒரு நூற்ருண்டு அரும்பணி

உலகமனைத்தையும் ஒரே குடும்பமாகக் கருதி, சென்ற நூறு ஆண்டுகளாக மேலான சமூக சேவை செய்துவரும் அகில உலக செஞ்சிலுவைச் சங்கத்தார் நேற்று நூற்ருண்டு விழாவைக் கொண்டாடினர். இச் சங்கத்தாருக்கு எமது நன்றிகலந்த பாராட்டு உரியதாகும்.

ஆபத்தில் உதவுபவரே உண்மையான நண்பர் என்பர். யுத்தகாலத்திலும், வெள்ளம், புயல் போன்ற இயற்கை அன்னையின் சீற்றத்தின்போதும் செஞ்சிலுவைச் சங்கத்தினர், உயிரைத் திரணமாக மதித்துச் செயற்கரிய சேவை செய்திருக்கிருர்கள் என்பது உலகறிந்த உண்மை. இலங்கையிலே பெருவெள்ளம் ஏற்பட்டு மக்கள் தத்தளித்தபோது இச் சங்கத்தினர் உணவு, உடை முதலியவற்றைப்பெற்று ஆபத்தான இடங்களுக்கும் சென்று, அங்குள்ள தவிக்கும் மக்களுக்கு உதவியளித்தனர். இந்த மகத்தான சேவையை மறக்கமுடியாது. சாதாரண காலத்தில் ஆஸ்பத்திரிகளில் நோயாளருக்குப் புத்தகங்களையும் வெளியீடுகளையும் வினியோகித்தும் வேறு பலவகைகளிலும் தொண்டாற்றி வருகின்றனர். மத வேறுபாடின்றிப் பொது மக்களுக்கு எவ்வித கைமாறும் கருதாமல் தியாகசேவை புரிவது போற்றற்குரியது.

மக்கள்சேவையே மகேஸ்வரன் சேவையாதலால் இப் புனிதப் பணியைச் செஞ்சிலுவைச் சங்கத்தார் நீடூழிகாலம் செய்வதற்குப் பொதுமக்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்க வேண்டும். எந்த வல்லரசுக் குழுவினரையும் சேராமல் யாவருக்கும் பொது நாடாகத் திகழும் சுவிட்சர்லந்திலே இதன் தலைமைக்காரியாலயம் உளது. மேலான இத் தர்மத்தைத் திறம்பட நடாத்திவரும் சுவிஸ் மக்களை உலகம் என்றுமே பாராட்டிவரும் என்பதற்கு ஐயமில்லை.

## எஸ். எஸ். ஸி படுகொலை

இவ்வாரம் வெளியான எஸ். எஸ். ஸி பரீட்சை முடிவுகளில், நூற்றுக்குஇருபது மாணவர்கள்கூடத்தேறவில்லை என்றும் இந்த முடிவுகள் 'பெரிய படுகொலை' என்றும் சொல்லப்படுகிறது. இதற்கான காரணங்கள் என்னவாயினும், இந்த நிலை மாணவர்களுக்கோ நாட்டுக்கோ நல்லதாகாது.

கல்விக்காகப் பொதுமக்கள் பணத்திலிருந்து கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுகின்றன. நூற்றுக்கு 80 விகிதமானவர்களைத் தகுதியற்றவர்களென்று தள்ளவே இப் பணம் செலவழிக்கப்படுவதாயின், இது வீணக்கப்படுவதுடன் மட்டுமல்லாமல் நாட்டுக்கே பெருந் தீங்குமாகும்.

பரீட்சையில் தேறிய மாணவர்களுக்காவது ஜீவனத்துக்கு வழியுண்டா? அதுவும் நிச்சயமில்லை. அடுத்தபடி என்ன செய்வதென்று அவர்களிலும் பலருக்குத் திகைப்பு. வருஷா வருஷம் படித்த வேலையற்ருேர் எண்ணிக்கை அதிகமாகின்றது. பரீட்சையில் தேருத மாணவர்களும் ஏமாற்றமடைந்து, இந்தப் பட்டாளத்திற் சேருகிருர்கள். இந்த நிலை அரசாங்கத்துக்கும் பெரிய பிரச்சினை.

இந்த அவலநிலையை மாற்ற என்னசெய்யவேண்டும்? இது மிகவும் முக்கியமான கேள்வி. இப்போதுள்ள கல்வி முறை அந்நியரால் தங்கள் நன்மைக்காக வகுக்கப்பட்டது. இதை மாற்றிக் கைத்தொழில் கல்வி அமைக்கப்பட வேண்டுமென்று எவ்வளவோ கூறப்பட்டுப் பல கமிஷன்களும் நியமிக்கப்பட்டன. என்ருலும் பழையமுறை மாறும் வழியைக்காணேம். இக் கல்விமுறையை அடியோடு மாற்றிப் பயனுள்ள முறையில் அதை வகுக்கவேண்டும். அதற்கான பொறுப்பு அரசாங்கத்துக்கு மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் பொதுமக்களுக்கும் அதிகம் உண்டு.

## பெரியோர்கள் விஜயம்

பாரதநாட்டிலிருந்து வரும் பெரியோர்கள், கொழும்பு, கண்டி இவ்விடங்களுக்குமட்டும் சென்றுபார்த்துவிட்டுத்திரும்பி விடுவதாயும், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லுவதில்லையென்றும் நீண்டகாலமாக ஒரு புகார் உண்டு. ஆனல் சமீபகாலமாக இந்தநிலை வெகுவாக மாறிவருவதைப் பார்க்கிருேம்.

சமீபத்தில் நான்கு பெரியார்கள் தமிழகத்திலிருந்து ஈழநாட்டுக்கு விஜயம் செய்தார்கள். மதுரை ஆதீனம், குன்றக்குடி அடிகளார், ஓம்கார சுவாமிகள், திருமுருக கிருபானந்த வாரியார் இந் நால்வரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்கள். மதுரை ஆதீனத்தைத்தவிர மற்ற மூவரும் கிழக்குமாகாணத்துக்கும் சென்றனர். ஆனல் ஓம்கார சுவாமிகள் மட்டுமே கொழும்புக்கு வந்தார்கள்.

* * *

ஆறு வருடங்கள் கழிந்து ஈழநாடு வந்த மதுரை ஆதீனம், யாழ்ப்பாணத்திலே அகில இலங்கைச் சைவமகாநாட்டுக்குத் தலைமைவகித்துப் பல முறை பேசினுர்கள்.

"மதுரை ஆதீனம்? எல்லாம் சரிதான் ''எக்ஸெப்ட்.........'' என்பார்கள். என்ன 'எக்ஸெப்ட்?' அவர் ஆவி உலகத்தைப்பற்றியே பேசுவார். அதைத்தவிர எல்லாம் ஆல்ரைட்" என்று என்னைப்பற்றிய புகார்களைக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனல் நான் ஆவி உலக ஆராய்ச்சியில் இறங்கியதற்குக் காரணம், அது எமது சைவசிந்தாந்த உண்மைகளை உறுதிப்படுத்துதல் தான்" என்று கூறி அவர் தமது தலைமைப் பிரசங்கத்தில், சிவஞானபோதத்திலிருந்து பல மேற்கோள்களை எடுத்துக் காட்டினுர். ஒன்றரை மணிக்கு மேல் அவர் செய்த அப் பிரசங்கத்தை, அமைதியாக அமர்ந்து கேட்டனர். திருக்கேதீச்சரத்தில் அவர் செய்த பிரசங்கம் "அருமை அருமை'' என்ருர் ஒரு நவீன வாலிபர்.

அவர் கொழும்புக்கு வருவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல் வராமல் அப்படியே மதுரைக்குப் பறந்துவிட்டார்கள்.

வருகிற ஆடிவேல் விழாவின் போது அவரையும் கிருபானந்தவாரியார், ஸ்ரீ. ஈசான் சிவாச்சாரியார் முதலியவர்களையும் கொழும்பு ஜிந்துப்பிட்டி ஐயந்திநகர் தேவஸ்தானத்தார் அழைப்பரென்றும் கொழும்பில் பல நாட்கள் தங்கிப் பிரசங்க மாரிகள் பொழிவாரென்றும் விசேஷ தேவாலய இன்னிசைக் கச்சேரிகள் நடைபெறுமென்றும் அறிகிறேன்.

* * *

குன்றக்குடி அடிகளார் கிழக்கு, வடக்கு மாகாணங்களிற் பல இடங்களிலும் பிரசங்க மாரி பொழிந்துதள்ளிவிட்டு திருக்கேதீச்சரத் தரிசனம் செய்துகொண்டு தமிழ்நாட்டுக்குத் திரும்பினுர்கள். அவரும் கொழும்புக்கு வரவில்லை.

* * *

சமீபத்தில் ஒரு சிங்களப் பிரமுகரிடம் பேசிக்கொண்டிருந்தேன். தமிழரின் எதிர்காலம் மிகச் சிறப்பாக இருக்கப் போவதாயும் சிங்களவர்தான் ஆணவம் தலைக்குஏறி,பிளவுபட்டுத் தவிக்கப்போவதாயும் ஒரு வித கவலையுடன் கூறினுர்.

இந்தச் சோதிடம் எப்படியாயினும் பல பெரியோர்கள் தமிழ்ப்பகுதிக்கு இப்போது அடிக்கடி வருவதால் இங்கு தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை திருந்தவும், அதனுல் மிக நல்ல பலன்கள் கிடைக்கவும் வழி பிறக்கலாமல்லவா?

—ஐயாறன்

# உணவு மந்திரி பிலிப் குணவர்த்தன ராஜினமா செய்வாரா?

## மனித உரிமை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சியல் திட்டம் நடைமுறைக்கு வந்ததும் பௌத்தராக மாறினர். ஆகவே அவருக்குச் சிறுபான்மைச் சமூகத்தாரின், சமயத்தாரின் உணர்ச்சிகள் சரிவரத் தெரிய முடியாது.

சிறுபான்மையோர் பெரும்பான்மையோரின் தயவில் வாழவேண்டுமென்றும், அவர்களுக்கு அரசியல் முதலிய மனித உரிமைகள் இருக்கமுடியாதென்றும் கருத்துப்பட கண்டி மகாநாட்டில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினர். இந்நாட்டு மக்களைப் பெரும்பான்மையோரென்றும் அவர் மனம் இரண்டாகப் பிரித்து வைத்துள்ளது.

பிரதமரே அப்படி நினைக்கையில் சாதாரண சிங்களப் பொதுமக்களிடையே "அப்பே ஆண்டுவா" (எங்கள் ராஜ்யம்) என்று கோஷங்கள் எழும்புவதில் வியப்பென்ன? அந்தக் கோஷங்களிடையே பலபல அநியாயங்கள் நடைபெற்றன. சிறுபான்மைச் சமூகத்தார் எவ்வளவோ இன்னல்களுக்கு உட்பட்டனர்.

"அப்பே ஆண்டுவா" மாறி "பொதுமக்கள் ஆண்டுவா" இலங்கையில் ஏற்பட முடியாதா? இதுதான் இங்கு சிறுபான்மையோர் என்று கருதப்படும் மக்களின் ஆவலும் கவலையுமாகும்.

### ஸ்விட்ஸர்லந்தில்

ஸ்விட்ஸர்லந்தில் இப்போது தலைவராகவும், பிரதமராகவும் இருப்பவர்கள் பிரெஞ்சுக்காரர்களாம். அந்நாட்டில் ஜெர்மன் பேசுபவர்தான் அதிகம். பிரெஞ்சு பேசுபவர் குறைவு.

"அப்படியாயின், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்தான் இரு பதவிகளையும் வகிக்கிருர்களா?" என்று கொழும்பிலுள்ள ஸ்விஸ் ஸ்தானிகரைச் சமீபத்திற் கண்டு பேசுகையில் கேட்டேன்.

அவர் அதற்கு அளித்த பதில் என்னைச் சற்றே திகைக்கச் செய்தது. **"ஸ்விட்ஸர்லந்திலே சிறுபான்மைச் சமூகமே கிடையாது. எல்லாரும் சரிநிகர் சமானம்"** என்ருர்.

"இலங்கையிலே, ஸ்விட்ஸர்லந்தைப் போன்ற ஆட்சிமுறை ஏற்படவேண்டுமென்று பல சமயம் வாய்விட்டுக் கூறினர் பிரதமர் பண்டாரநாயக்கா. இங்கும் பெரும்பான்மை சிறுபான்மை என்ற வேற்றுமைகள் மாறி "எல்லாரும் இந்நாட்டு மன்னர்"கள் ஆக முடிந்தால் இந்நாட்டில் உண்மையான சமூக ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படும்.

இப்போது புதிய அரசியலைப் பற்றிப் பரிசீலனை செய்யும் குழுவினிடம் பிரதமர் இதற்கான யோசனைகள் கூறுவாரா? ஆனல் அவர் பொதுக் கூட்டங்களில் செய்யும் பிரசங்கங்களையும், கண்டி மகாநாட்டில் பேசியதையும் பார்த்தால், இதற்கான நம்பிக்கை அளிப்பதாக இல்லை.

என்ருலும் அக்குழுவுடன் ஆலோசனையிலிருக்கும் பல சிபார்சுகளும் வெளியாகின்றன. நிர்வாகக்குழு யோசனையைப் பிரதமரும் விட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. பின் எல்லாச் சமூகப் பிரதிநிதிகளின் ஒத்துழைப்பையும் பெறத்தக்க விதமாகப் புதிய அரசியலைக் குழு எவ்விதம் தயாரிக்கப்போகிறது என்று இப்போது பலராலும் சிறப்பாகத் தமிழராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

## ராஜினமா செய்வாரா?

### அரசியல் வட்டாரங்களில் பலத்த வதந்தி

நமது அரசியல் நிருபர்

**உணவு மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன தமது மந்திரி பதவியை ராஜினமாச் செய்வாரா? இது பற்றிய வதந்திகள் அரசியல் வட்டாரங்களில் இப்போது அதிகமாக அடிபடுகின்றன.**

மந்திரிசபைக்குள் மட்டுமன்றி வெளியிலும் அவருக்கு எதிர்ப்புகள் அதிகரித்துவருகின்றன. சுமார் பத்து மந்திரிகள் கூட்டாகச் சேர்ந்து, உணவு மந்திரி வாய்த்துடுக்காகப் பேசுவதாயும், அவரை அடக்கப் பிரதமர் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும், அவரை அடக்காதவரை தாங்கள் இனி மந்திரிசபைக் கூட்டத்துக்கு வரப்போவதில்லை என்றும் தீர்மானித்தனர். பிலிப் வேண்டுமா? அல்லது பத்து மந்திரிகள் வேண்டுமா? என்றும் கேட்டனராம்.

சென்றவாரம்தான் கூட்டுறவு வங்கி மசோதாபற்றி ஏற்பட்ட நெருக்கடியைப் பிரதமர் பண்டாரநாயக்கா ஒருவிதமாகச் சமாளித்தார். அதுமுடிந்ததும் மற்ருெரு நெருக்கடி.

இது போதாதென்று, உதவிப் போலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் சொய்சா மீது மேதினக் கூட்டத்தில் மந்திரி பிலிப் அவதூருகப் பேசியதாகவும், இதற்காகஅவர்மீதுகோர்ட்டில் நடவடிக்கை எடுக்க சொய்சா அனுமதி கோரினர். அட்டார்னி ஜெனரல் இவ்விஷயமாகப் பரிசீலனை செய்ய அனுமதி அளித்ததின்மீது போலிசார் மந்திரி பிலிப் பேசியுள்ளதை பரிசீலனை செய்துவருவதாகக் கூறப்படுகிறது.

மந்திரி சபையில் இந்தப் பிணக்குகள் அதிகரிக்கவே, பிரதமரின் தூண்டுதல் மீது கவர்னர் ஜெனரல் பத்து மந்திரிகளையும் அழைத்துப் பேசினர். ஒரு மந்திரியை மற்ருெர் மந்திரி தாக்கிப் பேச நாம் இனி அனுமதிக்கப் போவதில்லை என்று பிரதமர் உறுதிமொழி அளித்து இந்த நெருக்கடியையும் ஒருவிதமாகச் சமாளித்துவிட்டார்.

ஆனல் இராணி மாளிகையில் நடந்த அந்தக் கூட்டத்தில் மந்திரி பிலிப் இல்லை. அழைப்பு இல்லையா? அல்லது அழைத்தும் அவர் செல்லவில்லையா? இது எப்படியாயினும், அவர் அங்கு இல்லாதது ஒரு பெரிய குறை.

கொள்கை அடிப்படையில் பெரிய வேற்றுமை இருசாராருக்கும் உள்ளது. ஆகவே மீண்டும் மற்ருெர் நெருக்கடி எச்சமயமும் ஏற்படலாம்.

இதற்கிடையே மந்திரி பிலிப் தாமாக ராஜீநாமாச்செய்ய மாட்டாரென்றும், தமது பதவியைக் கூடுமானவரை, தமது கொள்கையைப் பரப்பப் பயன்படுத்திக்கொள்வாரென்றும், நெருக்கடிகள் பல ஏற்பட்டாலும், பண்டாரநாயக்கா அதை எப்படியாவது சமாளித்து இன்னும் 18 மாதங்களுக்கு ஆட்சித்தேரை ஓட்டிச்செல்லுவார் என்றும் நம்பப்படுகிறது.

எதிர்பாரதமுறையில், மந்திரி பிலிப் நெருக்கடி முற்றி அச்சபை கலையுமாயின், நாட்டில் கலவரங்கள் ஏற்பட்டு, சர்வாதிகார ஆட்சி ஏற்படக்கூடுமென்று அரசியல்வட்டாரங்களில் கருதப்படுகின்றது.

## தமிழ் கலைச் சொல் அகராதித் தலைவருக்குத் தமிழ் தெரியாது!

### தவக்கத்துக்குக் காரணமென்ன?

தமிழ் கலைச்சொல் அகராதி தயாரிப்பது சம்பந்தமாக பார்லிமெண்டில் திரு ராஜவரோதயம் (திரு வன்னியசிங்கம் சார்பில்) கேட்ட கேள்வி விஷயமாக நடந்த விவாத விபரம் வருமாறு:-

கே: தமிழ் கலைச்சொல் அகராதி எப்போது பிரசுரிக்கப்படும்?

பிரதமர்: அரசாங்க மொழிச் சட்டம் நிறைவேறு முன்பாக, தமிழ் கலைச்சொல் அகராதி வேலை ஆரம்பமாகி படிப்படியாக முடிந்து வருகிறது. முதல் புத்தகம் ஏற்கனவே பிரசுரமாகியுள்ளது.

கே: வைத்திய, சட்ட கலைச்சொல் அகராதி தயாரிக்க ஏதும் முயற்சி நடக்கிறதா?

ப: அந்த வேலை சீக்கிரம் ஆரம்பமாகும்.

திரு சுந்தரலிங்கம்:

சிங்கள அகராதி வேலை துரிதமாக நடைபெறுகையில், தமிழ் அகராதி வேலை மட்டும், வேண்டுமென்றே ஏன் ஊஞ்சலாடுகிறது?

ப: "வேண்டுமென்றே" என்று கூறுவது நியாயமாகாது. தாமதம் வருந்தத்தக்கது. இந்த வேலையைத் துரிதப்படுத்த நான் பார்த்துக்கொள்ளுகிறேன்.

திரு சுந்தரலிங்கம்: இந்தத் தாமதம் பற்றிப் பிரதமருக்கு இவ்வளவுகாலமும்தெரியாதா? இதுவரை இதுபற்றி அவர் என்ன நடவடிக்கை எடுத்தார்?

திரு பண்டார நாயக்க:

ஆலோசனை சபையார் வேலையைத் தவக்கம் செய்தனர். எந்த வார்த்தையைப் பயன்படுத்தலாமென்று நீண்ட விவாதம் நடந்ததால் தவக்கம். தக்க பதங்களைக் கண்டு பிடிப்பதில் தவக்கம் நேரிட்டாலும் பரவாயில்லை. இனி இவ்வேலையைத் துரிதப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு சுந்தரலிங்கம்:

தமிழ் தெரியாத ஒருவர் தலைவராக நியமிக்கப்பட்டதால் தான், ஆலோசனை சபை வேலைகள் தவக்கப்பட்டனவா?

திரு பண்டார நாயக்க:

இந்தப் புகாரை ஒரு உதவி டைரக்டர் என்னிடம் தெரிவித்தார். இதைச் சீர் செய்ய நான் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறேன்.

திரு சுந்தரலிங்கம்:

இனி உபகேள்விகள் இவ்விஷயமாகக் கேட்பதற்கில்லை.

### கிறிக்கெற்

**கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம்** —முதலாவது இன்னிங்ஸ் 223 ஓட்டங்கள்.

**இந்தியா**— முதலாவது இன்னிங்ஸ் - 6 விக்கெற் நஷ்டத்திற்கு 436 ஓட்டங்கள்.

**கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகம்** —இரண்டாவது இன்னிங்ஸ் — 3 விக்கெற் நஷ்டத்திற்கு 19 ஓட்டங்கள்.

## பார்லிமெண்டில் சங்குப்பிட்டி ஆறு

### வேலைதவக்கத்துக்குக் காரணம்

பார்லிமெண்டில் திரு. வன்னியசிங்கம் சார்பாக, திரு. ராஜவரோதயம் **சங்குப்பிட்டி ஆறு** விஷயமாகக் கேட்ட கேள்விகளுக்கு மந்திரி ஹென்றி ஆபயவிக்கிரம அளித்த பதில் விபரம் வருமாறு:

கேள்:- இந்த மந்திரிசபை ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 1956-ம் வருஷத்துக்குப் பின், யாழ்ப்பாண மாவட்டத்திலே, மகாதேவா தாம்போதியைச் சேர்ந்த சங்குப்பிட்டி ஆற்று வேலையை மேற்கொண்டு ஏதும் செய்துள்ளனரா?

ப:- ஆமாம்.

கே:- இப்போதுள்ள தாம்போதியிலே காரைத்தீவுக்கும் சங்குப்பிட்டிக்கும் இடையே, இந்த வேலைக்கான கற்கள் எப்போது கொண்டு வந்து குவிக்கப்பட்டன?

ப:- 1957 ஜூன் மாதம்.

கே:- இந்தக்கற்களைக் கொண்டு வேலை ஆரம்பிக்காமல் தாமதித்தது என்ன காரணம்?

ப:- கல்லின் தரம்பற்றித் தகராறு ஏற்பட்டு, 1959-ம் வருஷம் மார்ச்சு மாதம் மராமத்து கமிஷனரால் விசாரிக்கப்பட்டது. தகராறுதீர்ந்ததும் வேலை மீண்டும் ஆரம்பமாகும்.

கே:- இந்த வேலை உடன் மேற்கொள்ளப்படுமா?

ப:- இக்கேள்வி எழவில்லை

## இலங்கைக்கு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சபைகளை நியமித்து, அவற்றுக்குப் பல அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்றும் பிரதமர் கூறியதாகத் தெரிகிறது.

இக்கூட்டுக் குழு, பல யோசனைகளையும் கேட்டு, இப்போதுள்ள அரசியலிலுள்ள குறைகளைக் கூடுமானவரை நீக்கவும் சிறுபான்மை சமூகங்கள் நாட்டு ஆட்சியில் அதிகம் பங்கு பற்றவும் கூடிய விதத்தில் புதிய திட்டம் தயாரிப்பரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

### குடியரசுத்தலைவர்

அடுத்த பிப்ரவரி மாதத்துக்குள்ளாக புதிய குடியரசுத்திட்டம் இலங்கையில் நடைமுறைக்குவரலாமென்றும்,கூறப்படுகிறது. குடியரசுத் தலைவர் பதவிக்கு ஹோரணையின் முன்னுள் பார்லிமென்ட் பிரதிநிதி வில்மெட் பெரேரா வரலாமென்றும் பலத்த வதந்தி. சிங்களமும் தமிழும் அரசாங்கமொழிகளாக இருக்கவேண்டுமென்று அவர் துணிச்சலுடன் வற்புறுத்திவருவது குறிப்பிடத்தக்கது. புது சீனத்தில் அவர் ஸ்தானீகர் பதவியை ராஜீனமா செய்துவிட்டு இலங்கை திரும்பினர். அரசியல் ஞானியான அவரது மதிப்பு இங்கு அரசியல் வட்டாரங்களில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

அவர் ஸ்தாபித்துள்ளஸ்ரீபாலி வித்தியாலயத்தின் வெள்ளி விழாவில் கலந்துகொள்ள இந்திய அரசாங்கத்தின் கலாசார அமைச்சர் ஸ்ரீ ஹுமாயூன்கபீர் இங்கு விஜயம் செய்திருக்கிருர். இவ்விழாவில் குருதேவர் ரவீந்திரநாத்தாகூரின் படத்தைப் பிரதமர் பண்டாரநாயக்கா திறந்து வைக்கின்ருர். இந்த வித்தியாலயத்துக்கு கவி அரசர் தாகூர் விஜயம் செய்து அஸ்திவாரக்கல் நாட்டியது குறிப்பிடத்தக்கது.

## நாவலர் பாடசாலை மீண்டும் மூடப்பட்டது

யாழ்ப்பாணம்

ஆசிரியரொருவரின் நியமனம் சம்பந்தமாகக் கல்விப்பகுதிக்கும் மனேஜருக்குமிடையே நிகழ்ந்த தகராறு காரணமாகவே,நாவலர்பாடசாலைமனேஜரால்மீண்டும்மூடப்பட்டுள்ளது.

## பூஜ்யம் தபால்

பஞ்சன்லாமா எர்தினி,
C/o சௌ என் லாய்,
பீகிங்.

வாலிபப் பெரியவரே,

தாங்கள் பீகிங்கிலிருந்து வெளியிட்ட ஓர் அறிக்கையில், இந்தியாவைப்பற்றிப் பல புகார்களும் குற்றச்சாட்டுகளும் செய்திருப்பதைப் பார்த்தேன். அதில் ஒன்றைப் பார்த்ததும் எனக்கும் இந்தியாமீது பொல்லாத கோபம் வந்துவிட்டது.

அதாவது தாங்கள் இந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்கையில், இந்திய அரசாங்கத்தினர், ஒருநாள் இரவு தங்களை ரயிலில் ஸலூன் பெட்டியிலேயே படுக்கும்படி செய்ததாயும், ஊரில் பங்களாவுக்கு விசேஷ ஏற்பாடுகள் செய்யவில்லை என்றும் அந்த அவமதிப்பை வருஷங்கள் பல ஓடியும் தாங்கள் மறக்க முடியவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

அடாடா! உலகின் உச்சியில் வசிக்கும் தாங்கள் இவ்வளவு காலம் இதை வெளியிடாமல் எவ்வளவு பொறுமைகாட்டி வந்திருக்கிறீர்கள்! அப்போதே இதை ஐ. நா. சபையிலே எழுப்பி உடைத்தெறிந்திருக்க வேண்டும்.

இந்திய அரசாங்கத்தைக் கேட்டால், தாங்கள் வாலிப சந்நியாசியென்றும், சில ஊர்களில் தங்களை வெளி பங்களாவில் தங்கியிருக்க ஒழுங்கு செய்வது அவ்வளவு பத்திரமல்லவென்றும் சமாதானம் சொல்லலாம்.

அல்லது வறுமை மிக்க நாடான இந்தியாவில், தங்கள் தகுதிக்கேற்ற இடவசதி சில ஊர்களிற் கிடையாமற் போய்விட்டதென்றும் கூறலாம்,

ஆனல் இந்த நொண்டிச் சாக்குகளையெல்லாம் நானும் ஒப்பத் தயாராக இல்லை. இதெல்லாம் நமக்கு ஒரு நல்ல பாடமாக இருக்கவேண்டும். இனி எந்த நாடாவது நம்மை அழைத்தால் முதலில் எங்கெந்த இரவில் எங்கெங்கு தங்குவது, படுக்கை எப்படி? எங்கே சாப்பாடு, என்ன பலகாரங்கள்? சமையல் யார் செய்வது? சாப்பாடு சரியாக இருக்குமா? இல்லாமற் போனல் என்ன செய்வது? என்றெல்லாம் முன்கூட்டியே உத்தரவாதம் பெற்றுத்தான் செல்லவேண்டும் அல்லவா?

இப்படிக்கு,
**"பூஜ்யம்"**

குறிப்பு:


இந்தக் கடிதத்தை எழுதியதும் எனக்குப் புத்தபெருமானைப் பற்றிய ஒரு நினைவு வந்தது. அவர் மரத்தடியிலேயே இருந்து, அங்கிருந்தே கடைசியாய் நிர்வாணம் பெற்ருரென்றும் ஒரு புத்தகத்தில் படித்தேன். புத்த பிக்குவான தங்களுக்கும் அவ்வித ஏற்பாடு செய்வது சரியோ என்று தோன்றியது. ஆனல் அது அந்தக் காலம்.

இலங்கைக்குத் தங்களை அழைக்கவேண்டுமென்று ஆவலாகவுள்ளது. ஆனல் தங்களுக்குத் தகுதியான பெரிய மாளிகையைக் கட்டும்வரை அழைப்பை ஒத்திவைக்கவேண்டியவனுக இருக்கின்றேன். மன்னிக்கவேண்டும்.

"பூ"

## இரு குழந்தைகள் விலை ரூபாய் 50!

மாதம்பேஎன்னும் இடத்தில் இரு குழந்தைகளை, ஒரு தந்தை 50 ரூபாய்க்கு விற்றுவிட்டாரென ஒரு செய்தி கூறுகின்றது. இது இலங்கையில் இன்று சீரழிந்து கொண்டு வரும்பொருளாதாரநிலையையே உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது. நாட்டு மக்களின் வாழ்க்கை வளம் பெறும் வண்ணம் எவ்வித பொருளாதாரத் திட்டத்தையும் வகுத்துச் செயலாற்ருது, வெறும் மேடைப் பேச்சுக்களையே பேசி வரும் இந்நாட்டுத் தலைவர்கள் இச்சீர்கெட்ட நிலைக்குஎன்னகூறுவார்களோ?



நகைகளுக்கும்

வைரங்களுக்கும்

ஏ.

கே.

எஸ்.

அன்

சன்ஸ்



நகை

மாளிகை

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.


*மாதர் பகுதி*

# மனையைத் துலக்கும் மங்கையர்: குழந்தை வளர்ப்பும் விருந்தோம்பலும்

செல்வி லலிதா நாகலிங்கம்

"மனைக்கு விளக்கம் மடவாள்" என்றவாறு குடும்ப வாழ்க்கைக்கு மங்கையர் திலகங்களே மணிவிளக்காகத் திகழ்கின்றனர். ஒரு குடும்பத்தின் உயர்வுக்கும், சமூகத்தின் வளர்ச்சிக்கும், நாட்டின் நலனுக்கும், மாண்புமிக்க மாதரின் நற்பணிகள் இன்றியமையாதன.

மாதர்கள் மனைஇயலிற் கைதேர்ந்தவர்களாய் விளங்க வேண்டும். முக்கியமாகப் பெண்கள் சமையல் வேலை, நோயாளியைப் பராமரித்தல், சிசுபாலனம், வீடுகளைச் சுத்தமாக வைத்திருத்தல் போன்றவற்றில் பயிற்சி உள்ளவர்களாக இருக்க வேண்டும். ஒருவருடைய வாழ்க்கை அன்பும், அறமும், அமைதியுமுடைய தாய்த் திகழ்வதற்கு அவ்வீட்டுப் பெண் மனைஇயலிற் சிறந்தவளாக விளங்கவேண்டும்.

## குழந்தை வளர்ப்பு

மங்கையராகிய எமக்குச் சமையற்கலை இன்றியமையாததாகும். பெண்களாகிய நாம் ஒவ்வொருவரும் உணவுப் பதார்த்தங்களை உருசியாகவும், பதங்கெடாமலும் நல்ல முறையிற் சமைப்பதற்குப் பழகியிருத்தல் வேண்டும்.

எதிர்கால உலக சிற்பிகளாக இருப்பவர்கள் குழந்தைகளே. இக் குழந்தைகளை நன்கு வளர்க்கும் பொறுப்பு மாதர்களிடத்தேயே ஒப்புவிக்கப்பட்டுள்ளது. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற வாக்குக்கிணங்க, தாய்மார் தம் சிசுக்களைச் சிறுவயதிலிருந்தே சிறந்த முறையில் பராமரித்து வருவார்களேயானால், அவர்கள் பிற்காலத்திற் திடமான மனவுறுதியும், திண்மையான வலிமையுமுடையவர்களாய்த் திகழ்வார்கள். குழந்தை வளர்ப்பு ஒரு பெருங்கலையாகும். குழந்தையின் உடல் வளர்ச்சியிலும், உளவளர்ச்சியே பிரதானமானதாகும். குழந்தையின் உள்ளமும், பண்பும் அதன் தாய்தந்தையரிலேயே தங்கியிருக்கின்றன. எனவே, பிள்ளைகளை வளர்ப்பதிற் பெண்கள் மிகவும் கண்ணுங் கருத்துமாக இருக்க வேண்டும். குழந்தைகள் வளர்ந்து வரும் வீடும் அதன் சூழலும் அழகுடன் அமைதல் வேண்டும். பிள்ளைகளின் கண்களிலே பழக்க வழக்கங்கள், பெரியாரைப் பேணல், விருந்தோம்பல் ஆதிய காட்சிகள் பிரதிபலிக்கவேண்டும். பிள்ளைக்குச் செல்வம், வறுமை, இன்பம், துன்பம், வெற்றி, தோல்வி, வீரம் ஆதிய முறைகளிலே தளராதிருக்கும் பயிற்சி அளிக்கப்படல் வேண்டும். இவ்வாறே குறித்த இலட்சியத்தை அடைவிக்க எண்ணி வளர்க்கும் தாயானவள், நிச்சயமாகவே தனது பிள்ளை அங்கிலையில் இருக்கும் பொலிவுகண்டு இன்புறுவாள்.

## வீட்டுக்கடமைகள்

மாதருக்குரிய வீட்டுக் கடமைகளுள் நோயாளரைப் பராமரித்தல் விருந்தினரை உபசரித்தல் என்பவை மிகவும் முக்கியமானவை. மாதர்களாகிய நாம் நோயாளிகளைப் பராமரிக்கும் விஷயத்தில் அதிசிரத்தை யுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

மேலும், இல்லாளுக்குரிய கடமைகளில் விருந்தோம்பலும் ஒன்றாகும். வீடு தேடி வரும் விருந்தினரை விருப்பத்துடனும் அகமகிழ்வுடனும் இன்சொற் கூறி உபசரிப்பவள் இல்லாளேயாவள்.

"இல்லாள் அகத்திருக்க இல்லாதனொன்றில்லை" எனக் கூறுகின்றார் ஔவைப்பிராட்டியார். இல்லறம் நல்லறமாகத் திகழ்வதற்கும், குடும்ப வாழ்க்கை அமைதியான முறையில் நடத்துவதற்குரிய இல்லாள் இருக்கும்பொழுது இல்லாததொன்றில்லை என்பதே இதன் பொருளாகும்.

"அடிசிற் கினியாளே
அன்புடையாளே
படிசொற் தவருத பாவாய்."

என்று திருவள்ளுவர் வாசுகியை நோக்கிக் கூறுகின்றார். இனிய உணவுகளைச் சமைப்பதிலும், அன்புடன் பரிமாறுவதிலும், கணவனைப் பேணுவதிலும் பெண்ணே சிறப்பு வாய்ந்தவள் என்று கூறப்படுகின்றது.

தாயில்லாத சிறுவனுக்கு உணவும், பிதா இல்லாத சிறுவனுக்குக் கல்வியும், பிள்ளையில்லாதவனுக்குச் செல்வமும், சகோதரன் இல்லாதவனுக்குத் தைரியமும் போய்விடும். ஆனல்

"மனையே இல்லையெனில்
அந்தோ
இவை யாவும்போம்"

என்ற செய்யுளும் பெண்ணின் பெருந்தகைமையைக் கூறுகின்றது.

இத்தகைய பெருமைகளுக்குரிய பெண்குலம் மேற் கூறியவற்றை மேற்கொண்டு, மனைஇயலே மங்கையர்க்குச் சிறப்பைக் கொடுப்பது என்பதை அறிந்து ஒழுகுவார்களேயானல், சமூகம் முன்னேறும்; அவர்கள் வாழும் நாடும் சிறப்படையும்.

---

# நோயும் மருந்தும்

டாக்டர் ஆ. கனகரத்தினம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதை நாம் அனைவரும் அறிவோம். மனிதராய்ப் பிறந்த நாம் எங்கள் உடலை நோய்கள் பீடிக்காதபடி கவனித்தல் அவசியம். நோயில்லாத உடலைக் கோயிலுக்கு உவமையாகக் கூறலாம். ஒருவனை நோய்கள் பீடிக்குமாயின் அவனுக்கு வறுமையும் அதனல் பல்வேறு துன்பங்களும் ஏற்பட்டு அவன் வாழ்வை அறவே கெடுத்துவிடும்.

நோய்க்குக் காரணங்கள் இருவகைப்படும். ஒன்று புறக்காரணங்களால் உண்டாவது. மற்றையது உட்காரணங்களால் உண்டாவது. வெளிக்காரணங்களுக்கு கடுங்குளிர், அதிக உஷ்ணம், வெள்ளப்பெருக்கு, புயற் காற்றுப் போன்ற இயற்கையாலேற்படுவனவும், கெட்ட காற்று, துர்நாற்றம், அசுத்தமாயிருத்தல் போன்ற செயற்கையானவையும் உதாரணங்களாகலாம். உட்காரணங்கள் எமது தேகங்களிலிருந்தே தோற்றுவனவாகும். அவற்றை எமது வைத்திய சாஸ்திரவல்லோர் சுருக்கமாகக் கூறியுள்ளார். வாத, பித்த சிலேற்பனமாகும் தோஷங்கள் தம் நிலைமாறி மிகினும், குறையினும் நோயை வருவிக்குமென்றார். இம் மூன்றும் தராசின் தன்மைபோல் சரியாக விருப்பின் தேகம் ஆரோக்கியமாயிருக்கும். இவை நூலிடையேனும் கூடினும், குறையினும் நோய்களுண்டாகும்.

" மிகினுங் குறையினும் நோய்
செய்யுநூலார்
வளி முதலா வெண்ணிய
மூன்று "

அதாவது உணவுஞ் செயல்களும் ஒருவன் பகுதிக்கொத்த வளவின்றி அதனின் மிகினும் குறையினும் ஆயுள்வேதமுடையோரால் வாத முதலாக எண்ணப்பட்ட மூன்று நோயும் அவனுக்குத் துன்பம் செய்யும் என்பதாம்.

" மருந்தென வேண்டாவாம்
யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுண்ணின் "

ஒருவன் முன் புசித்தது ஜீரணமாகியதைக் குறிகளாற் தெளிய அறிந்து அதன் பின்னர் மறுபடி உணவை உட்கொள்வானயின் அவனுடைய உடம்புக்கு மருந்தென்று ஒன்று வேண்டவே வேண்டாம். ஜீரணமான பின்னர் உண்ணும் உணவை அளவறிந்து உண்ணல் வேண்டும். மானிடப் பிறவி கிடைத்தற்கரிய ஒரு பிறவியாதலால் அதனை நெடுங் காலங் கொண்டு செலுத்து நெறி,

" அற்ரு லளவறிந் துண்க
அஃதுடம்பு
பெற்ரு னெடி துய்க்குமாறு "

என வள்ளுவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

உணவு அளவிற் குறைந்தால் நன்று, அதிகப்படின் பெரு நோய்களுக்குக் காரணமாகிவிடும். இதையும் அப்பெரும் புலவர் இனிது விளக்கியுள்ளார்.

" தீயள வன்றித் தெரியான்
பெரிதுண்ணி
னேயள வின்றிப் படும். ".

தன் பகுதியும் அதற்கேற்ற உணவும் காலமும் ஆராயாது வேண்டிய உணவை வேண்டிய காலத்து வயிற்றுத் தீ அளவன்றிமிகைப்படஒருவன் உண்பானயின் அவனிடத்து உண்டாகும் நோய்கள் எல்லையற வளரும்.

நோய்களுக்குக் காரணங்களாக முன்னர் கூறப்பட்ட புறக்காரணங்கள், அகக் காரணங்களை விட வேறுமோர் காரணமுண்டு. அக்காரணம் ஒருவனுடைய பரம்பரையைச் சார்ந்ததாகும். தொய்வு, கசம், பைத்தியம், நீரழிவு, சில கண் வியாதிகள் போன்றவை பரம்பரை வியாதிகளுக்கு உதாரணங்களாகும்.

இக்காரணங்களைவிட வேறுமொரு காரணமுண்டு. ஒருவனுடைய உடம்பிலுள்ள திரவியாம்சங்களில் ஜீவ சத்துக்கள் குறைவாக இருந்தாலும் நோய்கள் உண்டாகும். ஆகவே உணவிலே இச்சத்துக்கள் கிடைக்கக்கூடியதான உணவை உட்கொண்டு நோயைத் தடுக்க வேண்டும்.

—தொடரும்

---

# முஸ்லிம் பெண்களுக்கு கல்வி அறிவு அவசியம்

**ஜனப் ஜயா அறிவுரை**

முஸ்லிம் பெண்களுக்குக் கல்வியறிவு மிகக் குறைவாக இருப்பதுதான் சிசுமரணம் அதிகரிப்பதற்குக் காரணமென முன்னுள் பாகிஸ்தான் தூதுவரான ஜனப் டி. பி. ஜயா யாழ்ப்பாணம் சோனக தெருவில் நிறுவப்படும் முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு அஸ்திவாரக் கல் நாட்டி வைத்துப் பேசியபோது குறிப்பிட்டார்.

சென்ற ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற இவ்வைபவத்துக்குப் பின்னர் நடைபெற்ற பொதுக் கூட்டத்துக்கு காதி எம். எம். சுல்தான் தலைமை வகித்தார். சென்ற இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இருந்துவந்த எண்ணம் இப்போதுதான் செயலில் உருவாகி வருகின்றதெனத் தலைவர் குறிப்பிட்டார். திரு. ஜீ. ஜி. பொன்னம்பலம் காட்டி வரும் ஊக்கமும் முஸ்லிம் மக்களின் ஒற்றுமையுமே இப்பணிக்குப் பக்க பலமாக இருந்து வருகின்றதெனவும் கூறினர்.

ஜனப் ஜயா தொடர்ந்து பேசியதாவது: நமது பெண்கள் கல்வியிற் கவனம் செலுத்தாத காரணத்தினல்தான் முஸ்லிம் சமூகம் பின்னடைந்திருக்கிறது. பெண்மணிகள் கல்வி அறிவுள்ளவர்களாக இருந்தால்தான் அவர்கள் ஆற்றல் மிக்க புதல்வர்களை சமூகத்துக்கு உதவ முடியும். முஸ்லிம் பெண்கள் கலாசாலைக்குச் சென்று கல்வி பயிலுதல் பர்தா முறைக்கு மாருனதென இன்றும் சிலர் எண்ணி வருகின்றனர். பாகிஸ்தானில் நான் இலங்கைத் தூதுவனகப் பதவி வகித்தபோது பெண்கள் பர்தாவுடனேயே பள்ளிக்கூடம் செல்வதைப் பார்த்தேன். ஒருசமயம் பஞ்சாப் பல்கலைக் கழகப் பட்டமளிப்புக்குச் சென்றிருந்தேன். அங்கு திறமையுடன் சித்திபெற்ற பட்டதாரிப் பெண்மணி ஒருவர் பர்தா அணிந்திருந்தார்.

---

## அழகைவிட அன்பு முக்கியம்

"ஒரு பெண்ணின் அழகைவிட அவள் காட்டும் அன்புதான் முக்கியம். ஒரு பெண் தன் கணவனுடைய கண்களுக்கு மட்டும் அழகாக இருந்தால் போதும் பிறர் கண்களுக்கு அழகாக இருக்கவேண்டியதில்லை. அப்படி இருப்பதை ஒரு குற்றமாகவே நான் கருதுகிறேன்".

# சிறுவர் பகுதி

## சீரைத் தேடின் ஏரைத்தேடு

(சி. சுசீலாதேவி, பதிவு எண்: 92)

'சீரைத் தேடின் ஏரைத் தேடு', என்னும் முதுமொழி கல்விக்கடலை நிலைகண்டுணர்ந்த ஒளவைப் பிராட்டியார் செய்தருளிய பொன்மொழிகளில் ஒன்ருகும். இதன் பொருள் யாதெனில், நாம் சிறப்பெய்த வேண்டுமானல் உழவுத் தொழிலைச் செய்யவேண்டுமென்பதே. உழவுத் தொழில் பெருமை வாய்ந்த அடிமைத்தனமில்லாத போட்டியில்லாத பொதுத் தொழில்.

'சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம் அதனல்
உழந்தும் உழவே தலை.'

என்ருர் வாய்மொழி வேந்தர் வள்ளுவர். உலகிலுள்ள பலவித தொழில்களும், உழவுத் தொழிலுக்குப் பின்னேதான் நிற்க நேருகின்றன. இத்தொழிலின் சிறப்பைக் காலத்தால் முற்பட்ட தமிழர் உணர்ந்தனர். மக்களிடையே தோன்றி வளர்ந்து பண்பட்ட ஒன்றுதான் சான்ருேராற் புகழப்படும். உயிர் நிலைப்பதற்கு இன்றியமையாத உணவு நிலை பெற்றபோதுதான் மக்கள் அமைதியிற் கலைகள் வளரக் கூடும். இந்நோக்கில், சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட தமிழ்ச் சமுதாயம் பலகலைகளிலும் சிறப்புற்ருேங்கியதும் அதற்காதாரமாக உழவுத் தொழில் புகழப்பட்டிருப்பதும் அறியத்தக்கது. வள்ளுவரே தம் நூலில் உழவு என்ற தனி அதிகாரம் வகுத்துப் போற்றியதும் ஈண்டு நினைக்கத்தக்கது.

உழவன் தன் வேலையைச் செய்யாவிடின், இல்லற பந்தமே வேண்டாமென்று காட்டிற்குத் தவம் செய்யச் செல்லும் சந்நியாசிகூட உயிர்வாழ முடியாது. எனவே உலக வாழ்க்கைக்கு அச்சாணி உழவன்.

உழவன் யாருக்கும் சேவகம் செய்யவேண்டியதில்லை. தனக்குத்தானே உவமையுள்ள அவனை யாரும் இகழவோ வெறுக்கவோ முடியாது. நாம் எல்லாம் அவனுடைய ஆதரவில்தான் இருக்கின்ருேம். எத்தொழில் புரிபவனும் எவ்விதச் சிறப்பான வாழ்க்கை நடத்துபவனும் உழவனிடத்தே தங்கியிருக்கின்றனர் என்று கூறுதல் மிகையாகாது.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டுபின்செல்பவர்'

என்று வள்ளுவர் கூறியிருக்கின்ருர்.

முற்காலத்தில் களஞ்சியத்தின் எஞ்சிய பாகத்தைக் கட்டு மரத்திலேற்றி வாணிகம் செய்த நாடன்ருே நம் நாடு. ஆனல் இன்று உணவுக்காக அயல் நாட்டாரின் கப்பலை எதிர் பார்க்கின்ருேம். நம் நாட்டில் நெற்கதிரெனப் பொற்கதிரே விளைந்தது. விருந்ினரை அன்புடன் ஆதரிக்கும் மக்களைப் பட்டினி அரக்கன் தன் கொடுங் கோலாட்சிக்கு அடிமையாக்கி விட்டான். மக்கள் வயிருர உண்ணவகையறியாது வருந்துகின்றனர். நாங்கள் சுதந்திரம் பெற்றுவிட்டாலும் உணவு, உடையிற்குப் பிறநாடுகளை நம்பியிராமல் எங்களுடைய நாட்டிலேயே அவற்றை உற்பத்தி செய்தோமானல் அதுவே பூரண சுதந்திரமாகும்.

நம் நாட்டில் நெல் விளைய நிலமுண்டு. நீரோடைகள் உண்டு. ஆனல் நம்மிடம் முயற்சியில்லை. இன்றைய உலகிலே வேலையில்லை என வீதிதோறும் ஓலமிடுவோரின் தொகை பெருகுகின்றது. இவர்கள், தம் கையில் ஓர் ஏர் பிடித்து உழுது, உழவுத்தொழிலை விருத்திசெய்யக் கூடாதா? இப்படிச் செய்வார்களாயின் நாட்டிற்கு ஓர் சிறந்த சேவை செய்ததாகவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்ததாகவும் இருக்கும்.

## புதிய மருமக்கள்

பெயர்களும் பதிவு இலக்கமும்

161. க. குகப்பிரியன்,
இரத்தின இல்லம்,
சுளிபுரம்.

162. B. M. R. மலர்,
16, பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

163. குமாரன்,
10, ஜெயவத்தை வீதி,
கொழும்பு 5.

164. கே. வீ. தங்கையா,
கறந்தபனைத் தோட்டம்,
கேகாலை.

165. சூ. சூரியகுமாரன்,
பணியப்பின்னக்கட்டைப்
பாடசாலை,
இடல்காசின்னை.

166. ச. இராசரத்தினம்,
152, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

167. ஞா. அக்னஸ்இந்திராணி,
21/5, எல்லைவீதி வடக்கு,
மட்டக்களப்பு.

168. பொ. த. இலங்கைநாதன்,
ஸ்ரீ லங்கா கபே,
கிளிநொச்சி.

169. சூ. பி. யோகேஸ்பரன்,
அர்ச். சூசையப்பர்
கல்லூரி, திருமலை.

170. கெ. சஞ்சீவி,
பச்சை வங்களா,
அக்கரப்பத்தனை.

171. பொ. வடிவாம்பிகை,
"அம்பிகா பவனம்"
பலாலி வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

172. எஸ். எம். தம்பிராசா,
பச்சை வங்களா,
அக்கரப்பத்தனை.

173. செ. சண்முகசுந்தரம்,
யாதம்பை, மாதகல்.

174. வ. தவமணி,
40, உடையார் வீதி,
கல்முனை.

175. அ. பாலச்சந்திரன்,
c/o சோ. அம்பலவாணர்,
அராலி மேற்கு,
வட்டுக்கோட்டை.

176. எம். றிசாது,
சிபாயாமன்சில்,
மன்ஞர்.

177. வி. பூரணனந்தேஸ்வரன்,
"கணேசவாசம்"
உடுவில்.

178. சி. துளசிமணி,
அங்கிள் வீதி,
மட்டக்களப்பு.

179. செ. பொன்னம்பலம்,
201, பார்வீதி,
மட்டக்களப்பு.

180. எம். சி. எம். ரசீக்,
28/1, சொய்சாகல்லை,
நாவலப்பிட்டி.

செல்வக் குழந்தைகளே,

அனைவருக்கும் வணக்கம். அணுச்சக்தியைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இச் சக்தியால் தீமைகளையும் செய்யலாம்; நன்மைகளையும் செய்யலாம். இரண்டாவது உலக யுத்தத்தின் போது யப்பானில் உள்ள ஒரு நகரம் அணுக்குண்டால் அழிக்கப்பட்டது. அங்குள்ள உயிரினங்கள் அனைத்தும் அழிந்தன. அணுக்குண்டு பதம் பார்த்த அந்த நிலத்தில் இப்போது பயிர் பச்சை உண்டாவதே இயலாத காரியமாகிவிட்டது. அணுச்சக்தியின் சிற்பி யார் என அறிய நீங்கள் ஆசைப்படுவீர்கள். அவருடைய வரலாறு இங்குப் படங்களுடன் வெளியாகியுள்ளது.

சின்ன மாமா

## அம்பிப்பயலும் பூனைக்குட்டியும்

—அழகனர்—

பதிவு எண்: 127.

துள்ளி வருகுது பூனைக்குட்டி — அதைச்
சூழ்ந்து பிடிக்கிருன் அம்பிப் பயல்!

கோலை எடுக்கிருன் அம்பிப்பயல் — உடன்
குதித்து மறையுது பூனைக்குட்டி!

எகிறிப் பாயுது பூனைக்குட்டி — அதை
எட்டிப் பிடிக்கிருன் அம்பிப்பயல்!

அள்ளி எடுக்கிருன் அம்பிப்பயல் — உடன்
அரண்டு ஓடுது பூனைக்குட்டி!

## 'ஈழநாடு' சிறுவர் பகுதி

- **ஈழநாடு சிறுவர் பகுதியில்** ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது நிரம்பிய அனைவரும் உறுப்பினராகச் சேர்ந்து கொள்ளலாம்.


- உறுப்பினராகச் சேர விரும்புவோர் இங்குள்ள உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பவேண்டும். இந்த இதழில் வெளியாகியுள்ள அமைவுத்தாள் 16-5-59க்குப் பின்னர்செல்லுபடியாகாது. ஒவ்வொரு வாரமும் இங்கு வெளியாகும் அமைவுத்தாளை அடுத்துவரும் சனிக்கிழமைக்குள் உபயோகித்துக் கொள்ளவும்வேண்டும். ஒருவர் ஒருமுறை உறுப்பினர் அமைவுத்தாளை நிரப்பி அனுப்பினல் போதுமானது.

- ஈழநாடு அலுவலகத்திலிருந்து உறுப்பினர் பதிவு இதழ் கிடைத்த பின்னர்தான் **ஈழநாடு சிறுவர் பகுதிக்கு** உறுப்பினர் தங்கள் கதைகளையும், கட்டுரைகளையும், கருத்துக்களையும் அனுப்ப வேண்டும். அவற்றுள் நல்ல கதைகளும், கட்டுரைகளும் **சிறுவர் பகுதி** யில் வெளியிடப்படும்.

- **சிறுவர் பகுதி** சம்பந்தமான சகல கடிதப்போக்குவரத்தும் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பப்பட வேண்டும்:

சின்ன மாமா,
**ஈழநாடு சிறுவர் பகுதி,**
தபாற்பெட்டி எண் 49,
யாழ்ப்பாணம், இலங்கை.

## அறிஞர்கள் வரலாறு: (i) அணுச்சக்தியின் சிற்பி







**டக்டர் என்ரிக்கோ பேர்மி:—**

இவர் இத்தாலியில் பிறந்தார். உலகம் இவரை ஒரு மேதையாகவும், தலைசிறந்த விஞ்ஞானிகளுள் ஒருவராகவும் கருதுகிறது. அணுச்சக்தியின் சிற்பியெனவும் இவர் அழைக்கப்படுகிருர். அணுச்சக்தித் துறையில் இவர் செய்த ஆக்க வேலை ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்துவைத்தது. அவரை அவருடைய சகாக்கள் "ஒரு நூற்ருண்டில் ஒரேயொரு முறை வரும் மனிதர்" என்று கூறினர். அவர் தமது 53ஆம் வயதில் காலமானது, விஞ்ஞான உலகத்திற்கு ஈடுசெய்யமுடியாத நஷ்டமாகும்.

**சிறுவயதில்......**

இவர் இத்தாலியிலுள்ள உரோமாபுரியில், புகையிரதப் பகுதித் தொழிலாளி ஒருவரின் மகனுகப் பிறந்தார். அவர் தமது சிறு பிராயத்திலேயே விஞ்ஞானத்திலும், கணிதத்திலும் அதிக கவனஞ்செலுத்தினர். அவருடைய பள்ளிக்கூடப் படிப்பின் முடிவில், இவ்விரு பாடங்கள் சம்பந்தமான புத்தகங்கள் எல்லாவற்றையும் அவர் படித்து முடித்துவிட்டார். அல்பேட் அயின்ஸ்டீனுடைய புவியீர்ப்புச் சித்தாந்தத்தையும் அவர் அறிந்திருந்தார்.

**கல்வி:—**

1918ஆம் ஆண்டில் பிஸா பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். அவர் ஏற்கனவே அதிக நூல்களைப் படித்திருந்ததால் அவருடைய பல்கலைக்கழகப் படிப்பு அவருக்கு இலகுவாக இருந்தது. தமது ஆசிரியர்களிலும் கூடிய அறிவு அவரிடமிருந்தது. ஆதலினல், அவர் தமது நேரத்தை அணுச்சக்திஆராய்ச்சியில்கழித்தார். தமது 21 ஆம் வயதில் அவர் பல்கலைக்கழகத்தில் Ph. D. பட்டம் பெற்ருர்.

(தொடரும்)

இங்கே வெட்டவும்

## ஈழநாடு சிறுவர் பகுதி

**உறுப்பினர் அமைவுத்தாள்**

**( 9-5-59 )**

**அன்புள்ள சின்னமாமா அவர்களுக்கு**
வணக்கம்,

**ஈழநாடு சிறுவர் பகுதியில்** என்னை ஓர் உறுப்பினராகச் சேர்த்துக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

பெயர்..............................................................

விலாசம்.....................................................

..........................................

..............................
கையொப்பம்

..............................
பெற்ருர் அல்லது
ஆசிரியரின் கையொப்பம். வயது.............

இங்கே வெட்டவும்

சிறுகதை

# கௌரவம்

இ. நாகராஜன்

கண்கள் கனன்றன. உதடுகள் துடித்தன. முப்பதாவது தடவையாக விழிகளை வீதியின் மீது ஓடவிட்டார் உடையார் ஆறுமுகம்.

அங்கே ஒரே சூனியம்.

உடையார் உடல் இருப்புக்கொள்ளவில்லை. குட்டியீன்ற பூனைபோல் குறுக்கும் மறுக்குமாக நடைபயின்றார். எசமானின் காலைச்சுற்றிவரும் சில மிருகங்களைப்போல வண்டிக்கார வேலனும், எடுபிடியாள் சுப்பனும் வளைய வந்தனர்.

"அட சுப்பா!"

"எசமான்!"

"அந்தக் கழுதைகள் என்னடா சொல்லுது?"

"ஒன்றும் சொல்லவில்லை."

"அப்ப ஏன் இவ்வளவு நேரம்?"

"தெரியாது."

"மடையா நீ ஏன் தட்டிக் கேட்கவில்லை?"

"கேட்டேன்; அவர் ஒருவருமே வாய்திறக்கவில்லை."

* * *

வாசலிற் கட்டியிருந்த தென்னந் தோரணங்களும், முகப்பிற் கட்டியிருந்த வாழையின் இலைகளும் காற்றில் அசைந்தாடின.

வள்ளுவனின் பறையொலி சிறிது ஸ்தம்பித்தது.

"ஐயோ அம்மா! எங்களை விட்டுப் போயிட்டியே!"

உள்ளே ஓலம். நேற்றுவரை பேணிவளர்த்து— ஆளாக்கி வைத்த அன்னையின் பிரிவு தாங்காது மூத்தமகள் வைக்கும் ஓலமிது.

உடையாரின் காதுகளிலும் அது விழத்தான் செய்தது. அதை அவர் லட்சியம் செய்யவில்லை. அவரது கரம்பற்றி— இன்றுவரை இன்ப துன்பங்கள்ல் பங்கெடுத்துக்கொண்ட சகதர்மிணி செல்லம்மாள் மூச்சிழந்து, ஜடமாக, கட்டிலில் வளர்த்தப்பட்டிருக்கிறாள்.

அந்த வேதனையைத் தாங்காது அழுது வடிக்கவேண்டிய உடையாரா கோபத்தின் உறைவிடமாக—முற்றுமுழுதும் மாறுபட்ட உணர்ச்சியில் அமிழ்ந்துகிடக்கிறார்? அவருக்கு வேதனை இல்லையா?

வேதனையை வெளிக்காட்டிப் பத்து மணித்தியாலங்களுக்கு முன் குமுறிக்குமுறி அழுது கல்லுங் கரைய ஒப்பாரி வைத்துவிட்டார். இப்போது அவரது நினைவிலே தோய்ந்து—அதனை முற்றாக ஆக்கிரமித்திருப்பது ஆத்திர உணர்ச்சியொன்றே. ஊரின் தலைவன். மதிப்புக்குப் பாத்திரர் அவர். அவரது மனைவி இறந்து ஏறக்குறைய அரைநாளாகியும் ஊரிலுள்ள ஒருவனாவது தலைகாட்டவில்லையே.

"செத்துக்கிடக்கும் காகத்தைக் காண ஆயிரம் காகங்கள் கூடிவிடும். அனாதையாக வீதியில் இறந்து கிடப்பவனை வேடிக்கை பார்க்கப் பலர் சேருவர். என் மனைவியின் சாவுக்கு ஒரு பயல் உடையார் வீட்டுக்கு......"

பற்களை நறநறவென்று கடித்துக் கொண்டே விரித்துக் கிடந்த பாயிற் குந்தினார். வேலன் வெற்றிலைச் செல்லத்தைக் கொண்டுவந்து முன் வைத்தான். அதை அவர் தொடக்கூடவில்லை.

"எப்படியும் வந்துடுவார்கள் எசமான்."

"எப்பவெடா வருவார்கள். நேரம் ஒருமணியாச்சு!"

வேலனால் அதற்குப் பதிலிறுக்க முடியவில்லை. பந்தல் முகட்டை ஊடுருவின அவனது விழிகள்.

வண்டியொன்று வாசலில் அப்போது வந்துநின்றது.

* * *

வள்ளுவனின் பறையொலி. அதனை விஞ்சி உறவுப்பெண்கள் மார்பில் அடித்துக்கொள்ளும் சப்தம் வியாபித்தது. உடையார் வாசலைப் பார்த்தார். பத்துமைல் தொலைவில் உள்ள புத்தூர்க் கிராமத்தில் இருந்து அவரது மைத்துனன் குடும்பம் வந்திறங்கியது.

"அக்கா! அக்கா! மச்சான், அக்கா போய்விட்டாளே!"

உடையாரின் கண்களிலிருந்தும் தாரைதாரையாக நீர் வழிந்தது. வாயிற் சொற்கள் வெளிவரத் தயங்கித் திக்கின.

"மாமா! மாமா! என்ரை அம்மா......"

தன்மீது வந்துவிழுந்த மருமகளை மாமன் தாங்கிப் பிடித்துக்கொண்டார். உடையார் விலகிவந்து இடத்திற் குந்தினார். சிறிது நேரத்தில் நெஞ்சில் உறைந்து—மீண்டும் உருகிய மனைவியின் பிரிவுச்சோகம் அழிந்தது. பழையபடி ஊரின் உதாசீனம் அவரது நினைவைப் பூதாகாரமாக ஆக்கிரமித்துக் கொண்டது.

"மச்சான்!"

"ஊம்."

"என்ன ஒருமாதிரியாய் இருக்கிறியள். எப்ப சவமெடுக்கிறது? ஆட்கள் ஒருவரையுமே காணவில்லை."

உடையாரின் உள்ளக் குமுறல் தெரியாது மைத்துனன் கேட்டான். பதிலில்லை. பக்கத்தில் நின்ற சுப்பன் உடையார் மைத்துனனைக் கையாற் சுரண்டிக் கூட்டிக்கொண்டு பந்தலுக்கு வெளியே சென்றான். மீண்டும்மீண்டும் புதியவன் கேள்விகளாற் துளைத்துக்கொண்டிருந்தால் இழவு வீடென்று கூடப் பார்க்காது உடையார் நெஞ்சிற் குடிகொண்டிருக்கும் கோபம் படமெடுத்துவிடும் என்ற அச்சம் அவனுக்கு.

வளவின் மூலையில் ஓங்கி உயர்ந்து வளர்ந்திருந்த கமுக மரமொன்று பாடையாகப் பரிணமித்து—கடதாசி வண்ணப் பூக்களால் அழகுசெய்யப்பட்டு பிணத்தை எடுத்துச் செல்வதற்குத் தயாராகவிருந்தது.

அந்தப் பாடையைத் தூக்கிச் செல்வதற்கு ஆட்கள்?

"என்ன இது நேற்றுக் கையேந்தி நின்ற கழுதைகளுக்கு இன்றைக்கு இவ்வளவு துணிச்சல். அந்தச் செல்லன் ...என்ரை காணியை வெட்டிக் கொத்தித்தொண்டு செய்யும் பயல்...

"ஐயன்...போன கிழமை கூடப் பிள்ளையின் கல்யாணத்துக்கென்று ஐம்பது ரூபாய் கெஞ்சி வாங்கிப் போனவன். அவனுக்குக்கூட இழக்காரமாய்ப் போச்சு.

"சரி இருக்கட்டும். இன்னும் எத்தனை நேரத்துக்குச் சவத்தை வைத்திருப்பது? நோயில் நைந்த உடல்... ஏன் இப்படி ஒரேயடியாக நின்றுவிட்டான்கள். என் அப்பன், பாட்டன்—முப்பாட்டன் காலம் தொடக்கம் காலைநக்கிவந்தகூட்டத்துக்கு இவ்வளவு துணிச்சல் ஏன்?"

உடையாரின் கௌரவம் ஒரே நாளிற் காய்ந்து சருகாகிச் சலசலத்துவிட்டதான உதைப்பு நெஞ்சில். மழையின் இதத்தில் எழுந்த கறையான் புற்றுக்களாக வினைப்புற்றுக்கள் தோன்றின. அவற்றில் ஆயிரம் கறையான்கள் ஒன்று கூடி அரித்தன.

கோபத்தை அமுக்கி-ஒடுக்கி-அடக்கிவிட, இதயப்பாறை வெடித்தது. அதில் இருந்து ஊறிய ஊற்று கண்வழி பிரவாகித்து வழிந்தது.

சுப்பனுக்கும் வேலனுக்கும் வயிறு பகீரென்றது.

திண்ணையில்மாட்டிய கடிகார முட்கள் நேரம் மூன்று என்பதைக் காட்டின.

* * *

"அகங்காரம் ஒழிக! மமதைக்குச் சாவுமணி!"

வீதியிற் குழுமிவரும் கூட்டத்திலிருந்துவரும் கோஷம் வானை அதிரவைத்தது. உடையார் வாசலுக்கு வந்தார். அவர் எதிர்பார்த்த ஊரவர்களில் ஒருவரேனும் குறைவிலாது அங்கே வந்துகொண்டிருந்தனர்.

"அவர்கள்வைக்கும் கோஷத்தின் கருத்து?"

"ஏதாவது வேலைநிறுத்தமா? ஏது இன்றைக்கென்று...அந்த அகங்காரம் ஒழிக! ...மமதைக்குச் சாவுமணி!

"யாருடைய அகங்காரம்?"

புதிய குழப்பம் நெஞ்சிற் கால் கொண்டு வளர்ந்தது. விழிகள் கூட்டத்தைத் துருவி —அப்பாலும் சென்றன. பெரிய வண்டி ஒன்று. அது நிறையப் பூவரசங்கம்புகள்.

"இவை எதற்கு?"

அந்தக் கேள்வி நெஞ்சப் பாறையைக் குடைந்து கொண்டே இருந்தது. பதில் காணமுடியவில்லை.

கூட்டம் அவரது வீட்டுவாசலை நெருங்கியது. சில கோழைக் கண்கள் அவரது தீட்சண்ய பார்வையைச் சகிக்கமுடியாது மாற்றுடலுக்குள் மறைந்து கொண்டன.

இழவுவீட்டிலிருந்த இரண்டொருவரும் வந்து குழுமிக் கொண்டனர்.

கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய ஒருவன் முன்னே வந்து கடிதம் ஒன்றை நீட்டினான்.

உடையார் பரபரப்புடன் அதனைப் பிரித்தார் :

கனம் உடையார் அவர்களுக்கு,

தங்கள் அதிகாரத் திமிரினால் இதுவரை எம்மை அடக்கி ஒடுக்கி வந்தீர்கள். அதுபற்றிய வாதத்தைத் தொடர்வதற்கு இங்கு வரவில்லை. அந்த அதிகாரத்தினூடே நீங்கள் செய்த கௌரவம் இந்த உலகத்திலேயே புதுமையானது.

எங்கள் வீடுகளில் ஏற்படும் மணவிழா, இழவு என்பதற்கு தங்களை வருந்தியழைத்தால் நீங்கள் உங்கள் பிரதிநிதியாக உங்கள் கைக்கம்பை அனுப்பி விடுவீர்கள். அந்தக் கம்புக்கு நாங்கள் மரியாதை செய்ய வேண்டுமென்று ஒரு கண்டிப்பும் உண்டு. இதுவரை அது பற்றி எதிர்த்து வாதாட ஒருவரும் முன்வரவில்லை.

ஓரளவு சுய அறிவு வரப்பெற்ற நாம் இன்று "நாமும் மனிதர்கள்!" என்பதை நினைவுறுத்த எங்கள் பிரதிநிதியாகப் பூவரசங் கம்புகளை ஏற்றி வந்திருக்கிறோம். அவற்றைக் கொண்டே தங்களது இழவு வீட்டை நடத்திக்கொள்ளுங்கள்.

நெடுங்கேணி வாசிகள்.

உடையார் வாசித்துவிட்டு நிமிர்ந்து பார்த்தார். அதனை எதிர்பார்த்ததுபோல் வந்த கூட்டம் திரும்பிடது. அவர்கள் விட்டுச்சென்ற கௌரவக் கம்புகள் அங்கே வண்டியிற் பத்திரமாக இருந்தன.

உடையார் உயிரிருந்தும் ஜடமாக ஸ்தம்பித்து நின்றுவிட்டார்.

உள்ளத்து அகங்காரம்? மனைவியின் பிரேத அடக்கம்?

எது பெரிது?

"கௌரவம்! அதுதான் இன்று ஒரேயடியாகப் போய் விட்டதே." நெஞ்சிலே இதுவரை தோன்றமுடியாத உண்மை தெளிவாகியது. வளர்ந்துவரும் கால மாற்றத்துடன் தான் போட்டியிட முடியாத பெலவீனத்தை உணர்ந்தார்.

"அடே சுப்பு! அந்தக் கம்பைக் கொண்டாடா!"

சுப்பன் மூலையிற் கிடந்த கம்பைக் கொண்டு வந்தான். முழங்காலுக்குள் வைத்து அதனைப் பலவந்தமாக முறித்தார்.

நகர்ந்து எட்டிநின்ற கூட்டம் இதைக் கவனிக்காமலில்லை.

"வாருங்கடா! போவம்! அவரது ஆணவந்தான் உடைந்து போச்சே" என்றான் ஒருவன். அதைத் தொடர்ந்து கூட்டம் இழவு வீட்டை அடைந்தது.

அமைதியிழந்து— பிரிவின் துயரோடு ஒன்றாத நிலையில் உழன்றுகொண்டிருந்த உடையாரின் உள்ளம் இப்போதுதான் மனைவிக்காக வெதும்பத்தொடங்கியது. அவளதுசாவிலே அவரது கௌரவம்பறிபோனது. ஆனால் நெஞ்சில் ஏனையவர்களும்தன்போன்றவர்கள் என்ற உணர்வு உண்டாகியிருந்தது.

வள்ளுவனின் பறையொலி விட்டுவிட்டு ஒலித்தது. பெண்களின் ஓலம் ஊரையே அதிர வைத்தது. தான் ஆடாது விடினும் தன்சதையாடும் என்பதை நிகர்ப்ப செத்துக்கிடந்த செல்லம்மாளின் நல்ல மனத்துக்கு எல்லாம் சரிவரும் என்று பேசிக் கொண்டிருந்தனர் சாவீட்டிலிருந்த பெண்கள்.


யாழ்ப்பாணம்

## ஐக்கிய இலாப நிதி

— 1918-ஆம் ஆண்டு தாபிதமானது —

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 616313,00**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

**பங்குப்பணங்கட்டுமுறை**

மாதமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100-00 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்றுவரவு**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்**

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்**

கொழும்பிலுள்ள 'நாஷனல்' வங்கியிலும் 'இம்பீரியல்' வங்கியிலும், இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும்வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**கடன்**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகமாகக் கொடுக்கலாம்.

**இன்னும் வேண்டிய விபரங்களை**
**என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.**

**எஸ். கனகசபை**
சிருப்பர்

Std. 14.

அருள்வழி

# மனித இதயம் உண்மையானல் இறைவன் செவிடாக இருப்பதில்லை

## விஞ்ஞானத்தால் அருளியலை அளந்து பார்க்க முடியாது

வவனியா பட்டின சங்கத்து முற்றவெளியில், திருவண்ணுமலை ஆதீன மகா சந்நிதானம் குன்றக்குடி அடிகளாருக்குச் சமீபத்தில் வவனியா மக்களால் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது. முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். பட்டின சங்கத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் அடிகளார்க்கு வரவேற்பிதழ் வாசித்து அளித்தார். களிநடம்புரிந்துநின்ற கார்மேகங்கள் அடிகளாரின் அருள்மழை கண்டு ஓடி ஒளித்தன. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெருமக்கள் கூடிநின்று சுவாமிகளின் அருள்நெறி பொதிந்த இன்ப வாசகங்களை அமுதெனப் பருகித் திளைத்து நின்றனர். எங்கும் நிசப்தம். கடல் மடை திறந்தாற்போன்ற சொல் மாரி மக்களின் உளவலிமைக்கு உற்சாகமூட்டியது. அவரது சொற்பொழிவைப் பாலர் முதல் விருத்தர்வரை விளங்கிக் கொண்டனர் என்பதை அங்கு நிலவிய அமைதிமூலம் நன்கு உணரமுடிந்தது.

சுவாமி அவர்கள் ஒழுங்கான விஞ்ஞானம் எது என்பதை எடுத்துக்காட்டி வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளை எல்லாம் சங்கிலிக் கோவைபோல விளக்கினர்.


சமயம் அலுப்பை நீக்குகிறது. திருவருள் நெஞ்சத்தைத் தீண்டி நம்பிக்கை ஊட்டுகிறது. இறைவனிடத்தில் திருவடியிலே உயிரைச்சேர்த்து உறங்கவைத்து அமைதி பெறுவதே சிறந்த வழி. உறக்கம் என்பது இறைவனிடம் ஒப்படைத்தல். திரௌபதி, கௌரவர் முன்னிலையில் துச்சாதனன் துகிலுரியக் கையால் தன் உடையைப் பிடித்தபடியே தன்னைக் காப்பாற்ற முற்படுகிருள்; முடியவில்லை. கடைசியாக நம்மாற் காப்பாற்ற முடியாது. ஆண்டவன் காப்பாற்றுவான் என்ற நிலையிற் கைகளைத் தலைமேல்வைத்து 'கண்ணு கண்ணு' என்று அலறுகிருள். அவளது தன்நம்பிக்கையில் இதுவரை கண்ணன் பார்த்துக் கொண்டிருந்தார். கைகளை மேலே உயர்த்தி நீயே என்னைக் காப்பாற்று என்ற நிலையிலே கண்ணன் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. உடனே காப்பாற்றினர். இவ்வாறே பல அருமையான கதைகள் சுவாமி அவர்களிடமிருந்து பெறக் கூடியதாக இருந்தன. ஆழமான கருத்தை எளிதாக உணரக் கூடியதாக இருந்தது. விஞ்ஞானத்திற்கும் புறப்பொருள் தேவைப்படுகிறது. உருவழிபாடு அறிவியலுக்கு ஈடுகொடுக்கக்கூடியது. ஆதலின் மக்கட்கு உருவழிபாடு சிறந்ததென்ருர் அடிகளார்.

மனிதனின் இதயம் உண்மையாக இருந்தால் இறைவன் செவிடாக இருப்பதில்லை என்பதைத் தெளிவாக உணரும் பான்மையில் விளக்கிக் கூறினூர் அடிகளார்.


வழிபாடுபற்றி அடிகளார் கூறிய மறுமலர்ச்சி உயர் மலர்ச்சிக் கொள்கையே. அடிகளார் என்ன சொல்கிருர்? கேளுங்கள்:-

"தமிழில் வழிபாடு செய்ய வேண்டும். துவேஷம் ஆகாது. மனிதனை மனிதனுக மதிக்க வேண்டும். அன்புத் தளையால் ஒன்றுபட்ட குடும்பமாக வாழ வேண்டும். தனித்தன்மை இழக்கக் கூடாது. தமிழ் பாடவேண்டும்." தனித்தன்மை என்பதைச் சுவாமி அவர்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தித் தமிழில் வழிபாடு செய்தலை அமைவுறப் புகுத்திவிட்டார்.

முதலியார் செ. சின்னத்தம்பி அவர்கள் முடிவுரையுடன் விழா நிறைவேறியது.



திருமுருக கிருபானந்தவாரியார் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்த போது, சுழிபுரத்தில் திரு. மு. சிவப்பிரகாசம் அவர்கள் வேண்டுதலில் அறுபத்து மூவர் குருபூசை மடத்திற் 'சிறுத்தொண்டநாயனுர்' என்னும் பொருள் பற்றிச் சங்கீத கதாப்பிரசங்கம் செய்தார்.



கிருபானந்த வாரியாரின் தேனினுமினிய திவ்வியப் பிரசங்கத்தை மெய்யன்பர்கள் மெய்ம்மறந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் காட்சி.

## சூரியன் வருவது யாராலே?

சூரியன் வருவது யாராலே,
தூமதி தவழ்வது, யாராலே?
விண்மீன் மிளிர்வது யாராலே
வெய்யிலெறிப்பது யாராலே,
கண்ணிணை காண்பது யாராலே,
காற்றுமடிப்பது யாராலே,
தண்ணீர் பெருகுதல் யாராலே,
தக்கோர் புகழ்வது யாராலே.

* * *

பூமி சுழல்வது யாராலே
பூக்கள் மலர்வது யாராலே,
கால்கள் நடப்பது யாராலே
கைகளெடுப்பது யாராலே
எண்ணிப்பார் நீயறிவாயே,
எல்லாஞ் சிவன்செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே,
சுவாமி வாக்கிது தெரிவாயே.

"நற்சிந்தனை"

# இவ்வாரம் எப்படி?

—எம். எஸ். மகேஸ்வரன்—

| | | | |
|---|---|---|---|
| கே. | சூ. பு. | | வெ. செ |
| | இவ்வாரக் கிரகநிலை | | |
| | | | |
| சனி | வியா | | ராகு |

**இங்கு தரப்பட்டுள்ள இராசிகளின் பலன்கள் யாவும் பொதுப் பலன்களாதலால் இவற்றின் தன்மைகள் ஒவ்வொருவரின் தசா புத்திகளின் தன்மைக்கேற்றவாறு மாற்றம் அடைவனவாகும்.**

(9-5-59—15-5-59)

**மேடம்** (அச்சுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்) இவ்வாரம் இடைஞ்சல்களிலிருந்து நீங்குவதில் சிறிது வருத்தமடைவீர். இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கு இடமிருந்தாலும் எல்லா எதிர்ப்பையும் நீர் தவிர்க்கக்கூடியதாகவேயிருக்கும். மேல்அதிகாரிகளின் உதவி அதிகரிக்கும். மாதாவழி உறவினர்கள் மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு.

**இடபம்** (கார்த்திகை 2, 3, 4-ம் பாதம், ரோகினி, மிருகசீரிடம் 1, 2-ம் பாதம்) எதிர்பார்க்காத முறையில் சில கருமங்கள் நிறைவேறும். பிரயாண அலைச்சலும், சினேகிதர்களின் உறவால் கவலையுமுண்டு. அன்னியர் நட்பு அதிகரிக்கும். சுகவீனமும் குடும்பக் குழப்பங்களும் தோன்றி மறையும்.

**மிதுனம்** (மிருகசீரிடம் 3, 4 திருவாதிரை, புனர்பூசம், 1, 2 3-ம் பாதம்) உமது முயற்சிகள், இவ்வாரத்தில் சரிவர நிறைவேறமாட்டா. மேல் அதிகாரிகளிடமிருந்து உதவிகள் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்மூலம் மனக்கவலை உண்டாக ஏதுவாகும். மன ஆறுதல் இல்லாதிருக்குமானுல் இட மாற்றம் ஏற்படக்கூடும்.

**கடகம்** (புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியம், சத்துருக்களால் தீங்கு உண்டானுலும் அது பின்னர் நன்மையையே தரும். புதியபுதிய கருமங்களில் ஈடுபடுவதில் மன விருப்பம் ஏற்படும். வியாபாரத் தொழிலால் வருமானம் இவ்வாரம் அதிகரிக்கும். பெண்பாலார் உறவு அதிகரிக்கும்.

**சிங்கம்** (மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம்) நண்பர்கள் அல்லது உறவினருடன் சில சண்டைகளுக்கு இடமுண்டு. சகோதர சகோதரிகள் அதிக உதவியாயிருப்பர். புது முயற்சிகள் நல்லபலனைத் தரும். உமது மனம் அமைதியாயிருக்கமாட்டாது.

**கன்னி** (உத்தரம் 2, 3, 4-ம் பாதம், அத்தம், சித்திரை 1-ம், 2-ம் பாதம்) பணத்துறையில் இவ்வாரம் நல்லதாகும். இரகசியப் பகைவர் மூலம் தொந்தரவுகளுக்கு இடமுண்டு. தொழில்துறைகளில் செல்வாக்கு அதிகரிக்கும். எல்லாக் கருமங்களிலும், பிரயாசை அதிகமாக இருக்கும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு.

**துலாம்** (சித்திரை 3, 4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம்) சினேகிதர்களால் நன்மைகள் வந்தடையும், நடந்த கருமங்களினுல் பணவிருத்தி ஏற்படும். சில கஷ்ட நஷ்டங்கள் தோன்றி மறையும். அன்னியர் நட்பு உண்டு. நன்மையாகத் தோன்றும் சில கருமங்கள் பின் கவலையைத் தரும். செலவு அதிகரித்தாலும் அதனைச் சமாளிக்கமுடியும்.

**விருச்சிகம்** (விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை) புது முயற்சிகளில் சித்தியும் எதிரிகள் அழிவும் ஏற்படும். இகழ்ந்து பேசுபவர்களைப்பற்றி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். களியாட்டங்களில் அதிக விருப்பு உண்டாகும். நண்பர்களும் உறவினரும் உதவியாயிருப்பார்கள்.

**தனுசு** (மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம்) நண்பருடன் பிழையான எண்ணங்களுக்கு இடமுண்டு. உமது கருமங்களிற் சில மாறுதல்கள் ஏற்படும். பெண்பாலாரால் மனக் கவலை ஏற்படும். மகிழ்ச்சிகரமான கொண்டாட்டங்களுக்கு இடமுண்டு. உத்தியோக மாற்றம் ஏற்படும்.

**மகரம்** (உத்தராடம் 2, 3, 4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம்) குடும்பத்தில் புண்ணிய கருமங்கள் நிறைவேறும். பெண்களின் உறவுகளால் தொல்லைகள் தோன்றி மறையும். பெரியோர்களின் தொடர்புகள் ஏற்படும். வியாபாரத்துறையில் முன்னேற்றங்கள் உண்டாகும்.

**கும்பம்** (அவிட்டம் 3, 4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம்) புதுமுயற்சிகளினுல் பிரயாசைகள் அதிகரிக்கும். புத்திரர்களால் மனக் கவலை தோன்றிமறையும். மன ஆறுதல் இல்லாதிருப்பின் இட மாற்றம் ஏற்படக்கூடும். தேகாரோக்கியக் குறைவு சிறிது ஏற்படும்.

**மீனம்** (பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி) எதிர்பார்க்காத முறையில் சில நஷ்டங்கள் தோன்றும். நடந்த கருமங்களில் நன்மையே உண்டாகும். அரசகருமங்களிற் சில மாற்றங்கள் ஏற்படும். குடும்பக்கருமங்கள் குழப்பமாயிருக்கும். பணத்துறையில் நல்லதொரு வாரம் இது.

உங்கள் கட்டடங்களுக்கு வேண்டிய சகலவிதமான
**இரும்புச் சாமான்களுக்கு**
எங்களிடம் விசாரியுங்கள்

- ★ கேடர் வகைகள் எல்லாச் சைஸ்களும்
- ★ உருண்டைக் கம்பிகள் ,,
- ★ கொங்கிறீற் வலைகள் எல்லா வகைகளும்
- ★ சிமெந்து (காங்கேசன்), (யப்பான்)
- ★ தீந்தை, வார்னிஸ் வகைகள்
- ★ டிஸ்ரெம்பர் எல்லா நிறங்களிலும்
- ★ பித்தளைப் பூட்டு, பிணைச்சல் வகைகளும்

எங்களிடம் மிகவும் குறைந்த விலைக்குப் பெறலாம்.

இலங்கையில் தயார்செய்யப்பட்ட
அஸ்பெஸ்ரஸ் கூரைத்தகடுகள் சீலிங் சீற்களும்
எங்களிடம் விற்பனைக்கு ஏராளமாயிருக்கிறது.

**சண்முகம் ஸ்ரோர்ஸ்**
உரிமையாளர் : ஆ. சண்முகராசா
**222, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
போன் : **697**

சினிமா உலகம்

# கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

"ஒன்று பட்டால் உண்டு
வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும்
தாழ்வே'

என்னும் அடிப்படைத் தத்துவத்தைக் கொண்டு விளங்குகிறது நரசு ஸ்டுடியோரின்' **கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.** இப்படம் ஏற்கனவே இந்தியில் தயாரிக்கப்பட்டுள்ள "நியூ டில்லி" என்னும் படத்தின் தழுவலாகும்.

மதுரையிலிருந்து விசேஷ படிப்பிற்காகச் சென்னை வந்து சேருகிறான் ஒரு தமிழ் இளைஞன். ஆனால், சென்னை அவனுக்கு ஏமாற்றத்தையும், வெறுப்புணர்ச்சியையுமே அளிக்கிறது. இனத்துவேஷத்தின் காரணமாக, அவனுக்கு வசிப்பதற்கு வாடகை அறை கூடக்கிடைக்கவில்லை.

இத்தமிழ் வாலிபன் மலையாள ஓவியனை நண்பனாக்கிக் கொள்வதுடன் நிற்காது, கன்னடப் பெண்ணைக் காதலிக்கவும் செய்கிறான். அத்துடன், தன் தங்கையை மலையாள நண்பனிடம் அறிமுகம் செய்தும் வைக்கிறான். சொல்ல வேண்டுமா? அவர்களிருவரும் ஒருவர் மேல் ஒருவர் காதல் கொள்கின்றனர். இவ்விரு இளம் காதற் சோடிகளையும் துன்பத்திற்குள்ளாக்குகின்றனர் அவர்களின் பெற்றோர். இனம், மதம், குலம், கோத்திரம் முதலிய கருத்துக்கள் அவர்களின் காதற் பாதையில் முட்டுக்கட்டைகளாக நிற்கின்றன. ஆனால், கடைசியில் மனிதாபிமானமும், ஒற்றுமையுணர்ச்சியும் இருவரையும் திருமணப்பந்தலில் இணைத்துவிடுகின்றன.

தமிழ் இளைஞனாக எஸ். எஸ். ராஜேந்துரன் நடித்துள்ளார். அவருடைய பாகம் ஹாஸ்யம் நிறைந்ததாகும். அவர் இப்பாகத்தைத் தன்னாலியன்ற வரையில் சமாளித்திருக்கிறார் என்றே கூறவேண்டும். ஆனால், அநீதி, அநியாயம் இவற்றை எதிர்த்துப் பேசும்பொழுது அவருடைய நடிப்பு அந்நேரங்களில் ஒரு தனி அழகுடன் சோபிக்கும். அவருக்குப் படத்தின் இறுதிக்கட்டத்தில் இப்படி ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறது. அவர் அதைப் பிரயோசனப்படுத்தத் தவறவே இல்லை.

மலையாள இளைஞனாக, ஓவியனைப் பிரேம் நஸீர் வருகிறார். அவருடைய நடிப்பு பொதுவாகவே உணர்ச்சி குன்றியதாய் இருக்கிறது.

சமையற்காரன் குண்டுவாக வரும் தட்சிணாமூர்த்தி படத்தின் ஹாஸ்ய விருந்தை நமக்கு நல்ல முறையில் அளிக்கிறார்.

பொன்னையா பிள்ளையாக வரும் வி. கே. ராமசாமி, ஷண்முகம் பிள்ளையாக வரும் டி. பாலசுப்பிரமணியம் இருவரும் வழக்கம் போலத் தங்கள் பாகங்களைத் திறமையுடன் செய்திருக்கிறார்கள்.

சாயிராம் ஓர் கலைக்கூடத்து மேற்பார்வையாளராக வந்து சிரிப்பூட்ட முயலுகின்றார். இப்படத்தில், எஸ், வி. சுப்பையா பாத்திரத்துக் கேற்றவாறு சிறப்பாக நடித்திருக்கிறார். கன்னடக்காரரைப்போல் பேசுவது, கோபாலனைக் கண்டு மகிழ்வது. மகளிடம் அன்பு சொரிவது, கோபக்காரனாக மாறுவது, மகளை இழந்துவிட்டதென்ற எண்ணத்தினால் ஏற்படும் துயரைப் பிரதிபலிப்பது ஆகிய இக்கட்டங்களில் எல்லாம் அவரது நடிப்பு இயற்கையாக அமைந்துள்ளது.

கன்னடப்பெண்ஜானகியாக, பி. சரோஜா தேவி நடித்துள்ளார். கவர்ச்சிகரமான தோற்றம் அவருக்கு உதவியாக இருந்த போதிலும், சிற்சில இடங்களில் அவரது நடிப்பு சோபிக்கவில்லை. ஆனாலும், சோகக்கட்டங்களில் அவர் நன்றாக நடித்திருப்பதுடன், திறமையாக நடனங்களும் ஆடியுள்ளார்.

கோபாலனின் தங்கையாக நடிக்கும் கிரிஜா, தமையனுடன் குறும்பு செய்யும் கட்டங்களில் இயற்கையாகவே நடித்துவிடுகின்றார்.

ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு, டைரக்ஷன் எல்லாம் திருப்திகரமாக அமைந்துள்ளன. பாடல்களுள் ஒரு சில பாடல்களே காதுக்கினிமையாக இருந்தன.

இப்படம் தலைவிரித்தாடும் சாதித் துவேஷத்துக்குத் தலையடி கொடுக்கும் கருத்தாழம் மிக்க ஒரு ஹாஸ்யச் சித்திரமாகும்.

—மின்மினி.






# டைரக்டர் சாந்தாராமின் வெற்றி

இந்தியாவின் சிறந்த டைரக்டர்களுள், வட இந்திய சினிமா டைரக்டர் வி. சாந்தாராம் புகழ்மிக்கவர். அவருடைய படமொன்று ஹாலிவூட்டில் நடைபெற்ற விழாவில் முதற்பரிசைப் பெற்றுள்ளது. அந்நிய தேசப் படங்களுள் தலைசிறந்த படமாக அவரது படம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அப்படத்தின் பெயர் "தோ அங்கென் பாரா ஹத்". அது தமிழில் "இரண்டு கண்களும் பன்னிரண்டு கைகளும்" என்பதாகும். வாழ்விழந்த கைதிகளுக்குப் புதுவாழ்வளித்து, அவர்கள் வாழ்க்கையை மலரவைக்கும் ஒரு சிறைச்சாலை அதிகாரியின் பண்பையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டே அப்படத்தின் கதை இயங்குகிறது. மனித வர்க்கத்தின் சிக்கலொன்றைச் சிறந்தமுறையில் சித்திரித்திருக்கிறார் சாந்தாராம். அவர் தம் படம்மூலம் இந்தியாவுக்கு ஹலிவூட்டிலும், உலகிலும் நன்மதிப்பை ஈட்டித் தந்திருக்கிறார். அவர் இந்தியச் சினிமாக்கலைக்கு மேலும் தொண்டாற்றி, அதற்கு வெளியுலகில் நற்புகழைத் தேடித் தருவார் என எதிர்பார்க்கலாம்.

விளையாட்டுப் பகுதி

# ஓட்டப் பாய்ச்சல் பந்தயம்

## இலங்கைக்கு மலாயாவின் அழைப்பு

மலாயாவில் அதனுடைய தேசிய ஓட்டப்பாய்ச்சல் பந்தய விளையாட்டு ஆகஸ்ட் மாதம் 14, 15ஆம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. அவ் விளையாட்டில் பங்குபற்றுமாறு அழைப்புகள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இலங்கையும் அப் போட்டிக்கு அழைக்கப்பட்டுள்ளது. இப் போட்டியில் பிரதானமாக ஆசிய நாடுகளும், விருப்பமிருந்தால் ஏனைய நாடுகளும் பங்குபற்றுமெனத் தெரிகிறது.

**இங்கிலாந்துக் கிரிக்கட்** கோஷ்டியின் தலைவரான பீட்டர்மே, வேர்ஜீனியா கில்லிகன் என்பவரைத் திருமணம் செய்துள்ளார். இப் பெண்ணின் தந்தையான ஹரோல்ட்கில்லிகன், தன் மருமகனுக்கு எவ்விதத்திலும் சளைத்தவரல்ல. ஏன் தெரியுமா? அவரும் தன்னுடைய நாட்களில் இங்கிலாந்துக் கிரிக்கெட் கோஷ்டியின் தலைவராக இருந்தவர்.

## ருஷிய வீரரின் மகத்தான சாதனை

சோவியத்து யூனியனின் **ஒலெக் பெடோசேயெவ்** என்னும் தூரப்பாய்ச்சல் வீரர், இப் பாய்ச்சலில் இதுவரை இருந்து வந்த உலகசாதனையை முறியடித்துவிட்டாரென அறியக் கிடக்கிறது. அவர் 54 அடி $9\frac{1}{2}$ அங்குலம் தூரம் தாவிப் பாய்ந்துள்ளார். இதற்குமுன்னர் இருந்த தூரம் 54 அடி 5 அங்குலமாகும். அதுவும் ஒரு சோவியத்து வீரராலேயே சாதிக்கப்பட்டதாகும். இதே விளையாட்டுப்போட்டியில், இன்னுமொரு சோவியத்து வீரர், லாடிமிர் புலாரேவ் என்பவர் தடி ஊன்றிப் பாய்தலில் 15 அடி 1 3/4 அங்குலம் பாய்ந்து, ஐரோப்பாவில் ஒரு புதிய சாதனையை அப்பாய்ச்சலில் நிறுவினர்.

## ஒலிம்பிக் விளையாட்டுச் சபைக்கு ஓர் ஆட்சேபனைக் கடிதம்

விளையாட்டுப் போட்டிகளில் சாதி, மத வேற்றுமை கூடாதென்றும், அது தவிர்க்கப்பட வேண்டியதொன்று என்றும் லண்டனிலிருந்து ஓர் ஆட்சேபனைக் கடிதம் சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக் குழுவுக்கு அனுப்பப் பட்டுள்ளது. 20 கையொப்பங்கள் கொண்ட அக்கடிதத்திற்கு, ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுக்காரியதரிசி ரிக்வி லை, எவரெஸ்ட் மலையைக் கைப்பற்றிய கோஷ்டித் தலைவர் சேர் ஜோன் ஹன்ற், பிரபல செக்கோஸிலோவோக்கிய ஒலிம்பிக் ஓட்டக்காரர் எமில் ஸற்ரோப்பெக் ஆகியோரும் அக்கடிதத்திற் கைச்சாத்திட்டுள்ளனர். அவர்கள் எல்லோரும் அக்கடிதத்திலுள்ள தீர்மானத்திற்குப் பொதுமக்களின் ஆதரவு கிடைக்குமென நம்புகின்றனர்.

## ஓட்டப் பாய்ச்சல் பந்தயம் கைப்பந்தாட்டப் போட்டி

மே மாதம் 3ஆம் திகதி, திருவனந்தபுரத்தில், குருநாகல் கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், திருவனந்தபுரம் போக்குவரத்துக் கைப் பந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடந்த போட்டியில் குருநாக்கல் வெற்றி ஈட்டியது. புள்ளி விபரங்கள் பின்வருமாறு:—

15—10, 7—15, 15—13.

## திருக்கேதீச்சரத்தில்
# குன்றக்குடி அடிகளார்

ஈழநாட்டுக்குக் குன்றக்குடி அடிகளார் இம்முறை வந்திருந்தபோது திருக்கேதீச்சரத்தையும் தரிசிக்க விரும்பி, மட்டக்களப்பிலிருந்து அன்பர் கூட்டத்துடன் அப்புனிததலத்துக்குச் சென்றார்கள். அங்கு நடைபெற்ற முக்கியமான ஒரு நிகழ்ச்சியைப்பற்றிப் பண்டிதர் வி. சீ. கந்தையா எழுதுவதாவது:

சேர். கந்தையா வைத்தியநாதனுடைய தலைமையில் அங்கு நல்ல வரவேற்பொன்று அடிகளாருக்கு அளிக்கப்பட்டது. மறுநாள் காலை அடிகளார் பெயரில் ஒரு சிறந்த அபிஷேகம் நடந்தது. சம்பந்தரதும், சுந்தரரதும் திருப்பதிகங்களை ஒருவர்பாட அதற்கும் அர்ச்சனை போடவேண்டும், என அடிகளார் முதலில் நிருவாகிகளைக் கேட்டிருந்தார். அவர்களும் இணங்கிக் கொண்டனர். ஆனால் இறுதியில் அது மறுக்கப்பட்டதும், அடிகளார் ஆலய முன்றிலைவிட்டு வெளியேறிவிட்டார்கள். அதனைத் தொடர்ந்து காலை பத்துமணியளவில் கோயில் முன்றிலில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் அடிகளார் இதை மிக்க வருத்தத்தோடு எடுத்துக்காட்டினார். "திருக்கேதீச்சரம் சமயகுரவரது அருட்பாடல்களைப் பெற்றிருக்காவிட்டால் பல இலட்சரூபாய்களைச் செலவு செய்து இக்கோவிலைப் புதுப்பிக்க யாரும் முன்வந்திருக்கமாட்டார்கள். இங்குள்ள பல கோவில்களில் ஒன்றுபோலவே இதுவும் மதிக்கப்பட்டிருக்கும். பாடல்பெற்ற இத்தலத்தில் அந்த அருட்பாடல்களுக்கு இடம் இல்லை என்றதைப்போல் எனக்கு வருத்தம் ஊட்டிய நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை. இக்கோவில் ஒழுங்குகள் எதையும் நான் மாற்றக் கேட்கவில்லை; வழக்கமான ஒழுங்குப்படி எல்லா அர்ச்சனைகளும் நடந்தபின் அந்தத் தேவாரங்களையும் சொல்லி அல்லது வேறொருவர் சொல்ல கேதீச்சுரநாதருக்கு "பூவும் நீரும்" போடுமாறுதான் கேட்டேன். பூசனை ஒழிந்தபின் வெறுமனே வெளியில் நிற்போர்க்கு மட்டும்தான் அப்பாடல்களைப் பாடலாம் என்றால், ஆறுமுகநாவலர் பெருமான் அவற்றுக்குக் கொடுத்த அருட்பாடல் நிலையினை அவர் பிறந்த நாட்டிலே அவமதிப்பதாகுமே" என்பது அவர்களது முக்கிய குறிப்பு. புரக்டர் சிவசுப்பிரமணியம், முதலியார் சின்னத்தம்பி முதலான பெரியோர்களும் அப்போது வந்திருந்தார்கள்.

அடிகளாரது இந்தச் சொற்பொழிவைத் தொடர்ந்து தேவாரப் பாடல்களும் அர்ச்சனையில் உடனே முக்கிய பங்கு பெற்றன. அன்று மத்தியான பூசையிலேயே திருப்பதிகப் பாடல்களுக்கும் அர்ச்சனை நடைபெற்றது. இதனை அறிந்தால் அடிகளார் ஈழத்துச் சைவர்களது உண்மையான அருட்பாடற் பற்றினை அறிந்து மகிழ்வார்கள். தேவாரப்பாடல்களுக்கு அர்ச்சனையில் இடமளிக்காமல் போனமை ஒரு தவறுதலாக நடந்தது என்று முக்கிய நிருவாகியாக அன்று நின்ற திருவாளர் அல்லிராசாவும் வருத்தத்தோடு பின்னர் கூறினார்கள்.

## மட்டக்களப்பில்
# மே தின விழா

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்த அரசியற் கட்சிக்கும் சொந்தமானதல்ல இந்த விழா என்ற அடிப்படையில், மற்றைய கட்சியாருடைய விழாவைவிட ஒருபடிமேல் தாங்கள் நடத்தவேண்டும் என்று துணிந்த தமிழரசுக் கட்சியார் மே 2-ந் திகதி தமது மேதின விழாவை நடத்தினர். வைசிக்கிள், கார் என்பன தமிழரசுக் கொடிகளையும், செங்கொடிகளையும் தாங்கிக்கொண்டு வீதிவலம் செய்தன. மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு தொழிலாளியான கே. வைரமுத்துவின் தலைமையில் நடந்த கூட்டத்தில் மட்டக்களப்பு எம். பி. திரு. இராசதுரை, திருக்கோவில் அறப்போர் முன்னணித் தலைவரான ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் முதற் பலர் பேசினர். இந்தியத் தொழிலாளருக்கு யூ. என்.பி. அரசாங்கம் இழைத்த அநீதியையும், எம். ஈ. பி. அதனைத் தொடர்ந்து நெற்காணிச் சட்டத்தின் மூலம் மன்னார்ப் பகுதியிலும் மலைநாடுகளிலும் அவர்கள் குத்தகைக்கு நிலம் பெற முடியாது தவிக்கச் செய்திருப்பதையும் எடுத்துக்காட்டி, தமிழ் மக்கள் தமது வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள்வளத்தைப் பெருக்குதற்குத் தொழிலாளர்களையே தம்மிடைப் பெருக்குதல் வேண்டும் என்றும் கூறினார். தொடர்ந்த பேச்சுக்களில் எல்லாரும் கொம்யூனிஸ்ட் கட்சிக்காரர் மீது கண்டனம் தொடுத்தனர். இரண்டு நாள் விழாவையும் கவனித்தோர், தமிழரசாரும், கொம்யூனிஸ்ட் கட்சியாரும் கையாண்ட சொற்போர் வரிசைகளையே அதிகம் குறிக்க முடிந்தது.

## பாகிஸ்தான் செயலுக்கு இந்தியாவின் எதிர்ப்பு

இந்தியாவுக்குச் சொந்தமான விமானம் ஒன்றை அண்மையில் பாகிஸ்தான் சுட்டு வீழ்த்தியதைக் கண்டித்துப் பாகிஸ்தானிடம் இந்திய அரசினர் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். கராச்சியிலுள்ள இந்தியத் தூதர்மூலம் இந்த எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. விழுந்து நொறுங்கிய விமானத்துக்கும் காயமடைந்த விமான அதிகாரிகளுக்கும் முழு நட்டஈடு கொடுக்க வேண்டுமென இந்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## சென்னை மக்களுக்கு ஆங்கில அறிவு குறைவு

சென்னை மக்கள் தமிழ்மொழியில் அறிவு பெற்றிருப்பதுபோல் ஆங்கிலத்திலும் அறிவு மிக்கவர்கள் என்பதை இந்திய நிதி அமைச்சர் மொரார்ஜி தேசாய் மறுத்துள்ளார். புதுடில்லியிலுள்ள சென்னைக் கல்விச் சங்கப் பள்ளிக்கூடத்தில் சென்னை முதலமைச்சர் காமராசரின் உருவப் படத்தைத் திறந்துவைத்து திரு. மொரார்ஜி தேசாய் கூறியதாவது: தமிழ்நாட்டில் நடைபெற்ற பல கூட்டங்களில் நான் ஆங்கிலத்திற் பேசினேன். அப்போதெல்லாம் என்னுடைய பேச்சுக்கள் தமிழிலே பெயர்க்கப்பட்டன. சென்னையிலுள்ள எல்லோருக்கும் ஆங்கிலம் தெரிந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்கமாட்டாது. ஆகவே சென்னை மக்களுக்குத் தமிழைப்போல ஆங்கிலமும் தெரியுமென்பது மிகைப்படக் கூறுவதாகும்.

# சென்ற வாரத்தில்

### ஞாயிறு 3

தூரகிழக்கிலுள்ள நாடுகளிலும் யோகாசனப்பயிற்சிக்குப் பெருமதிப்பு இருந்துவருவதாகக் ஹாங்காங், மலாயா ஆகிய நாடுகளிற் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டுக் கொழும்பு வந்தடைந்த சுவாமி சச்சிதானந்த யோகீஸ்வரர் தெரிவித்தார்.

கூட்டுறவு வங்கி மசோதாவில் திருத்தம் ஏற்படுமாயின் அதனை எதிர்ப்பதென எம். ஈ. பி. யின் இடதுசாரிக் கோஷ்டியினர் தீர்மானித்தனர்.

பீக்கிங் நகரில் நடைபெற்ற 30,000 பேர் அடங்கிய மாபெரும் கூட்டமொன்றில் திபேத்திய கலகக்காரரை ஆதரிக்கும் இந்தியர்களை மண்ணாசைக்காரர் எனப் பலர் கண்டித்தனர்.

முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரதி தேவதையின் பளிங்குச் சிலையொன்று இத்தாலிக்கு அணித்தாயுள்ள இடத்திற் கண்டெடுக்கப்பட்டது.

### திங்கள் 4

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தோட்டப்பகுதி மாணவர்களின் கல்வி விருத்திக்கான ஏற்பாடுகளைச் செய்வதெனத் தீர்மானித்துள்ளது.

மலாயாவிலுள்ள கோலாலம்பூரில் ஆசிய சினிமா விழா ஆரம்பமானது.

நவசீனத்துக்கு ஐக்கிய நாட்டுச் சபையில் இடமளிக்க வேண்டுமென இந்தோனேஷிய ஜனாதிபதி சொர்க்கானோவும், போலிஷ் தலைவர் அலெக்ஸாண்டர் ஸவாஸ்கியும், போலாந்திலிருந்து வெளியிடப்பட்ட ஒரு கூட்டறிக்கையிற் தெரிவித்துள்ளனர்.

### செவ்வாய் 5

கபினெட் ஆட்சிமுறை கடைசியில் சர்வாதிகாரத்திலேயே முடியுமென்று இலங்கைப் பிரதமர் பண்டாரநாயக்கா கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நாவலர் தமிழ்ப்பள்ளிக்கூடம் மூடப்பட்டுள்ளது. இதன் விளைவாக 400 மாணவர்களும், 12 உபாத்தியாயர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திபேத் விஷயம் பாண்டுங் மகாநாட்டுக் கொள்கையிலுள்ள நம்பிக்கையைக் குறைத்துவிட்டதென நேருஜி லோக்சபையில் பேசும்பொழுது குறிப்பிட்டார். அதே சமயம் பீக்கிங்கிலிருந்து வெளியான செய்தியொன்று, சீனமக்கள் நேருஜி திபேத் விஷயம் பற்றிக் கூறியதெல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்ற கருத்தைத் தெரிவித்திருப்பதாகக் கூறியது.

முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் அமெரிக்கா வந்து சேர்ந்தார்.

### புதன் 6

யூகோஸ்லேவியாவுக்கும், இலங்கைக்குமிடையே கைச்சாத்திடப்பட்ட ஒரு புதிய வர்த்தக ஒப்பந்தத்தின்படி, யூகோஸ்லேவியா இலங்கைக்கு 5,500,000 பவுண் கடனைக் கொடுக்குமென அறிவிக்கப்பட்டது.

தபால், ஒலிபரப்பு, செய்தி மந்திரி திரு. ஸி. ஏ. எஸ். மரைக்கார் இம்மாதம் 21 ஆம் திகதி ஜப்பான் செல்வார் எனத் தெரிகிறது.

ஜெனிவாவில் நடைபெறும் வல்லரசுகளின் வெளிநாட்டு மந்திரிகளின் பேச்சுவார்த்தைகள் பலன் தராவிடிலும் உச்சி மகாநாடு ஒன்று அதிவிரைவிற் கூடுவது நல்லது என சோவியத் பிரதமர் நிக்கிற்றா குருஷேவ் கூறியுள்ளார்.

ஐக்கிய நாட்டுப் பொதுச் சபைக் குழுவினர் கூட்டத்தைப் பகிஷ்கரிக்க இந்தியா, ஐக்கிய அரபுக் குடியரசு, சோவியத் ருஷ்யாவும் மற்றும் கொம்யூனிஸ்ட் நாடுகளும் தீர்மானித்துள்ளனராம்.

## வளர்ந்துவரும் கலை ஆர்வம்
# யாழ்ப்பாணத்தில் நாட்டிய விழா

பரத நாட்டியக் கலை நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாக இந் நாட்டுப் பெண்மணிகளின் கவனத்தைக் கவர்ந்துவருகின்றதென்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள நந்திகேஸ்வரம் நாட்டியாலயம் போன்ற கலைக் கோயில்களும் அவற்றின் வளர்ச்சியில் மக்கள் காட்டிவரும் ஆர்வமும் சான்று பகர்கின்றன.

சென்ற ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நல்லூர் நந்திகேஸ்வர நாட்டியாலயத்துக் கட்டட நிதிக்காகத் திருமதி நீலா சத்தியலிங்கம் அவர்களினதும் அவர் தம் மாணவர்களினதும் பெரு முயற்சியுடன் நடைபெற்ற பரத நாட்டிய விழா பலவகைகளிலும் கலைப் பண்புடன் சோபித்தது.

காலைத்தூக்கி நின்றாடும் தெய்வத்தின் திருவுருவங்கள் மேடையைத் தெய்வ சன்னிதானமாக்கி விட்டது. இச்சூழ்நிலையில் நடைபெற்ற நாட்டியங்கள் அத்தனையும் சபையோருக்கு நல் விருந்தாகவே அமைந்திருந்தன. "ஏறுமயில் ஏறி விளையாடு முகம்ஒன்றே" என்னும் திருப்புகழுக்கு ஆறு சிறுவர்கள் அபிநயம் பிடித்த காட்சி அற்புதமாகவேயிருந்தது.

குறத்திகள் கூடிநின்று கும்மியடித்த காட்சி குறிப்பிடத்தக்கதொன்றாயினும் முக பாவங்கள் இயற்கையாக அமையவில்லை.

'யாரென்று ராகவனை' எனும் யதுகுல காம்போதி ராகத்துக்குச் செல்வி லிங்கேஸ்வரி சுந்தரலிங்கம் முக பாவத்துடனும் தாள லயம் பிசகாமலும்பதம் பிடித்தார்.

தில்லை நடராசன் சன்னிதியில் நீலாம்பிகை சத்தியலிங்கம் 'நடனம் ஆடினார்' என்ற பதத்துக்கு அபிநயம் பிடித்த காட்சியும், 'நினைத்தபோது நீவரவேண்டும்' என்பதற்கு நல்ல முக பாவத்துடன் உள்ளக் கருத்தை வெளிக்கொணர்ந்த தன்மையும் அவரின் கலைத் திறமையைச் சிறப்பாக எடுத்துக் காட்டும் வகையில் அமைந்திருந்தன. ஏனைய நாட்டிய நிகழ்ச்சிகளும் நன் குவிளங்கினவென்றே கூறவேண்டும்.

இந்நிகழ்ச்சியிற் பங்குபற்றிய அனைவரும் மங்களம் பாடி நாட்டிய விழாவை மங்களகரமாக முடித்த காட்சி இரசிகர்களுக்குப் பூரண திருப்தியை அளித்ததென்றே கூறவேண்டும்.

நட்டுவாங்கம் செய்த திரு. சு. சத்தியலிங்கத்தையும் அவரது பின்னணி வாத்தியக் கோஷ்டியினரையும் பாராட்டியே தீரவேண்டும்.

இவ்விழாவுக்கு சமுகமளித்த யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீ கந்தா அன்றைய நடன நிகழ்ச்சிகளைப் பாராட்டிப் பேசும்போது, ஈழநாட்டில் இன்று முத்தமிழ் வளர்ச்சி ஏற்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய தொன்றெனவும், நந்திகேஸ்வர நாட்டியாலயத்தை யாழ்ப்பாணத்து நல்லூரில் நிறுவி இந்நாட்டிற் கலையார்வமுள்ளவர்களுக்கு நாட்டியக்கலையிற் பயிற்சிபெற்று முன்னேறுவதற்குச் சந்தர்ப்பம் அளித்துவரும் சத்தியலிங்கம் தம்பதிகளின் கலைப்பணிக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

# மே தின விழா

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### பருத்தித்துறையில் கொம்யூனிஸ்ட் விழா

மே தின விழாவைக் கொம்யூனிஸ்ட் கட்சி இம்முறை பருத்தித்துறையில் ஊர்வலத்துடன் கொண்டாடியது. கடற்கரையிலே நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்குத் திரு. எஸ். ஜெயசிங்கம் தலைமை வகித்தார்.

கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், கிராமிய நடனங்களும், விளையாட்டுகளும் நடைபெற்றன. இன்னிசைக் கச்சேரிகளும் நிகழ்ந்தன.

தலைவர் ஜெயசிங்கம் மே தினத்தின் முக்கியத்துவத்தைப் பற்றித் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார். அவருக்குப் பின் ஸ்டான்லி திலகரத்ன பேசும்போது ருஷ்யாவுக்கும், செஞ்சீனத்துக்கும் சென்று இலங்கை திரும்பிய பின் தாம் பங்குபற்றும் முதலாவது கூட்டம் பருத்தித்துறைக் கூட்டமெனக் குறிப்பிட்டார். சோவியத்யூனியனும், சீனமும் பொருளாதாரத் துறையில் அதிவிரைவுடன் முன்னேறி வருகின்றனவென அவர் தெரிவித்தார். தொடர்ந்து பேசுகையில் யு. என். பி. தலைவர்களான டட்லி சேனநாயக்காவும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் 'பசுத்தோல் போர்த்த புலிகள்' எனக் கூறினார்.

அடுத்து, இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கக் காரியதரிசி அரிநோலிஸ் அப்புகாமி பேசினார். அவர் சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

திரு. வ. பொன்னம்பலம் பேசியதாவது: தமிழரசுக் கட்சியின் வகுப்புவாதக்கொள்கை புதியதொன்றல்ல. இதன் வித்து தமிழ்த் தலைவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன் காலத்திலேயே தோன்றிவிட்டது. சிங்களவரைக் கொண்ட எந்தக் கட்சியையுமே தாம் நம்பப்போவதில்லை என்று கூறிய தமிழரசுத் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் தம்முடைய தோட்டத்தில் வேலைநிறுத்தம் செய்த தமிழ்த் தொழிலாளிகளுக்கு மாறாகச் சிங்கள, ஐரோப்பிய முதலாளிகளைக் கொண்ட சங்கத்துடன் சேர்ந்து நடவடிக்கை கையாண்டது வியப்பிற்குரியதொன்றாகும். சிலர் தமிழரசுக் கட்சிக்கும், எங்கள் கட்சிக்கும் என்ன வித்தியாசமென வினவுகின்றனர். வித்தியாசம் இதுதான். அவர்கள் கட்சி முதலாளித்துவக் கட்சி. நம் கட்சி தொழிலாளர்களின், விவசாயிகளின் கட்சி.


வெற்றிகரமான 5-வது வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) குயின்லன் (நுககொடை) விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

மற்றும் ஒன்பது திரைகளில்

நட்சத்திரங்கள் :

- ★ எம். ஜி. ராமச்சந்திரன்
- ★ பி. பானுமதி
- ★ எம். என். நம்பியார்
- ★ பி. எஸ். வீரப்பா
- ★ எம். என். ராஜம்
- ★ பி. சரோஜாதேவி
- ★ எம். ஜி. சக்கரபாணி
- ★ டி. கே. பாலச்சந்திரன்
- ★ ஜே. பி. சந்திரபாபு
- ★ ஜி. சகுந்தலா
- ★ டி. பி. முத்துலெட்சுமி



டைரக்ஷன் :
எம். ஜி. ராமச்சந்திரன்

சங்கீதம் :
எஸ். எம். சுப்பையா

வசனம் :
கண்ணதாசன்

ஸ்ருடியோ :
வாகினி & விஜயா

பின்னணி :
டி. எம். சௌந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், ஜிக்கி, பி. லீலா, பி. சுசீலா, டி. ராஜரத்தினம், ஜமுனாராணி.

அற்புதக்கலையின் அழகுப் படைப்பு அனைத்தும் நிறைந்த கருத்துக்குவியல்

எம். ஜி. ஆர். பிக்சர்ஸ்

# நாடோடி மன்னன்

---

இப்பொழுது காட்சியளிக்கின்றது!

## சென்ட்ரல் - ஓடியன் - ராணி - லிபேர்ட்டி

(கொழும்பு) (மவுண்ட்லவினியா) (யாழ்ப்பாணம்) (பதுளை)

தினசரி மாலை 2, 6, 9-30 மணிக்கு ஞாயிறு காலை 10 மணிக்கு
திங்கள் 4-ந் திகதி தொடக்கம் தினசரி மாலை 6, 9-30 மணிக்கு

## ஜோதி (திருகோணமலை)

தினசரி மாலை 6, 9-30 மணிக்கு. ஞாயிறு பிற்பகல் 2-00 மணிக்கு

இன்னிசையும் கண்கவர் நடனங்களும்
பொருந்திய படம்!
சிறந்த நட்சத்திரங்கள் நடிக்கும்




நட்சத்திரங்கள்: எஸ். எஸ். ராஜேந்திரன், பி. சரோஜா தேவி
பிரேம் நஸீர், கிரிஜா, வி. கே. ராமசாமி,
சீ. கே. சரஸ்வதி, டி. பாலசுப்பிரமணியம்.

---

விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன் தாபனத்தார் ஒழுங்குசெய்யும்

## தென் இந்திய யாத்திரை

6-7-59 தொடக்கம் 25-7-59 வரை

இப்பிரயாணம் விசேஷமாக ஆனி உத்தர சிதம்பர நடராஜப் பெருமானின் தேர்த்திருவுலாக் காட்சியைக் கண்டு ஆனந்தமடைய ஒழுங்குசெய்துள்ளோம்.



1958 மார்கழி திருவாதிரை யாத்திரையில் எமது கோஷ்டியினருக்கு சென்னையில் நடாத்திய வரவேற்பின்போதுஎடுத்த படம்

போன் : 517 ★ தந்தி : Centravel

இம்முறை : சேது, இராமேஸ்வரம், திருச்சி (அழகர்கோயில்) ஸ்ரீரங்கம், திருவானைக்கா, சீர்காழி, வைத்தீஸ்வரன் கோயில், சிதம்பரம், மதரூஸ், காஞ்சீபுரம், மகாபலிபுரம், திருக்கழுக் குன்றம், திருவொற்றியூர், திருவண்ணுமலை, பழனி, கோடைக் கானல், மதுரை, திருப்பரங்குன்றம், திருநெல்வேலி, திருச் செந்தூர், தென்காசி, (குற்றாலம்) கொச்சின், திருவனந்த புரம், (நாகர்கோயில், சுசீந்திரம், கன்னியாகுமரி)

முதலிய இன்னும் பல இடங்களைத் தரிசிக்க ஏற்பாடு செய்துள்ளோம்.

விபரங்களுக்கு நேரில்வரவும் அல்லது 50சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும்

## விவேகானந்தா டிரேட்ஸ் கோப்பரேஷன்

( சிங்கப்பூர், மலாயா பிரயாண வசதிசெய்பவர்கள் )

இராஜ கட்டிடம், யாழ்ப்பாணம் (பஸ்காலைக்கு எதிரில்)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இல்லத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கலாநிலையப் பதிப்பகத்தில் 'ஈழநாடு' பத்திரிகையின் சொந்தக்காரருக்காக பாலசுப்பிரமணியம் சிவானந்தன் அவர்களால் அச்சிடப்பெற்று, எஸ். எம். யோசவ் வில்பிறட் அவர்களால் 1959-ம் ஆண்டு மே மாதம் 9ம் திகதி வெளியிடப்பெற்றது.